

# தமிழரசு

16-4-1991 ரூ.1










மேதகு ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண் சிங் அவர்கள் சென்னை மாநிலக் கல்லூரியின் 150-வது ஆண்டு விழாவினைத் தொடங்கி வைத்து, விழா நினைவுக் கட்டடத்திற்கான அடிக்கல்லை நாட்டினார். இந்த விழாவில் மேதகு ஆளுநரின் ஆலோசகர்கள் திரு. வே.கார்த்திகேயன், திரு. வி.இராமச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர் (5.4.1991).



மேதகு ஆளுநர் திரு.பீஷ்ம நாராயண் சிங் அவர்கள் சென்னையில் பாரதீய வித்யா பவனில் நடைபெற்ற அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டார் (4.4.1991).

# ஆன்றோர் போற்றிய சான்றோர் அம்பேத்கர்



**மாபெரும் பகுத்தறிவுவாதி!**

அநேக அரிய காரியங்களைச் செய்த ஒரு மாபெரும் பகுத்தறிவுவாதியும், ஆராய்ச்சி நிபுணரும், சீர்திருத்தப் புரட்சி வீரருமாவார் டாக்டர் அம்பேத்கர்.



**அரசியலமைப்புச் சட்டத்தின் தந்தை**

"இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கியதில் டாக்டர் அம்பேத்கர் மிக முக்கியமான பங்கினை வகித்துள்ளார். அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்குவதில் அவரைவிட அதிக சிரத்தையும், அக்கறையும் எடுத்தவர் வேறு யாரும் கிடையாது"



**அந்தப் பெயரைச் சொல்லி...**

அம்பேத்கர் இருந்த இடமும் தூரமும் மிக அதிகம். எனினும் இங்கு பற்பல இடங்களில் 'அம்பேத்கர் மன்றம்', 'அம்பேத்கர் படிப்பகம்', 'அம்பேத்கர் படத்திறப்பு' என்று அவரது அந்தப் பெயரைச் சொல்லி உவகை கொள்வதுண்டு நாம்.

# இந்த இதழில்...


அம்பேத்கர் வாழ்விலே! ... 2

அண்ணல் அம்பேத்கரும் தென்னிந்தியத் தலைவர்களும் ... 4

தொழிலாளர் தலைவர் டாக்டர் அம்பேத்கர் ... 9

கருப்பு வைரம் ... 13

தந்தை பெரியாரும் அண்ணல் அம்பேத்கரும் ... 14

புரட்சி வீரர் அம்பேத்கர் ... 15

அரசியல் அமைப்பின் தந்தை அம்பேத்கர் ... 16

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப்பணி ... 17

குடிநீர்த் தட்டுப்பாட்டை நீக்க விரைவான பணிகள் ... 19

தோட்டக்கலையில் தமிழகம் ... 21

சமுத்துவத்தின் விடிவெள்ளி ... 24

பெரியார் மாவட்ட வளர்ச்சிப் பணிகள் ... 28

இலக்கியத்தில் காவிரி ... 34

புயல்போல் புகுந்த புலவர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் ... 41

மாநிலக் கல்லூரியின் வயது—150 ... 48


## இனிய வாழ்த்து

சித்திரைத் திருநாள், நல்ல
சிறந்த புத்தாண்டு நன்னாள்
எத்திசைத் தமிழ ருக்கும்
எல்லோர்க்கும் இனிய வாழ்த்து!

—தமிழரசு

## அண்ணல் அம்பேத்கர்
## சிறப்பிதழ்


**தமிழரசு**

திருவள்ளுவர் ஆண்டு 2022

சித்திரைத் திங்கள் - 3

மலர்:21 இதழ்:20

16-4-1991



# அண்ணல் அம்பேத்கர் வாழ்விலே..

அண்ணல் அம்பேத்கர் வாழ்வில் நிகழ்ந்த முக்கியச் சம்பவங்கள் இங்கே தொகுத்தளிக்கப்படுகின்றன.

1891: ராம்ஜி சக்பால் - பீமாபாய் தம்பதிகளுக்குப் பதினான்காவது ஆண்மகனாக மராட்டிய மாநிலத்தில் உள்ள அம்பாவர்டேஎன்ற கிராமத்தில் ஏப்ரல் 14-ஆம் நாள் பீமாராவ் (அம்பேத்கர்) பிறப்பு.

1891 தந்தையார் ஓய்வு பெறுதல்.

1896 தாயார் பீமாபாய் மறைவு.

1904 அவருடைய குடும்பம் பம்பாய்க்குக் குடி பெயர்தல்.

1907 மெட்ரிகுலேஷன் தேர்வில் தேர்ச்சி அடைதல்.

1913 பி.ஏ. தேர்வில் வெற்றி பெறுதல்; தந்தையார் மறைவு.

1913 (ஜூலை) அமெரிக்க நாட்டுக்குப் பயணம்.

1915 எம்.ஏ. பட்டம் பெறுதல்.

1916 இலண்டனிலுள்ளபொருளாதாரம் மற்றும் அரசியல் கலைக் கல்லூரியில் சேர்தல்.

1918 சைதாம்ஸ் கல்லூரியில் தற்காலிகப் பேராசிரியராகப் பணியேற்றல்.

1920 'ஊமைகளின் தலைவன்' (Mook Nayak) என்ற பத்திரிகை தொடங்குதல்.

1923 டாக்டர் அம்பேத்கரின் பொருளாதாரக் கட்டுரைகள் 'பி.எஸ்.கிங் அண்ட் கம்பெனியாரால்' புத்தகமாக முதன்முதல் வெளியிடப்படுதல்.

1923 பம்பாய் நீதிமன்றத்தில் வழக்கறிஞர் தொழிலைத் தொடங்குதல்.

1925 நிப்பானில் ஒடுக்கப்பட்டோர் மாநாடு கூட்டுதல்.

1927 கார்கான் வார் மெமோரியலில் தாழ்த்தப்பட்டோர் மாநாடு கூட்டுதல்.

1927 மனுஸ்மிருதிக்கு, மாபெரும் பொதுக் கூட்டத்தில் தீ வைத்தல்.

1927 'மகாடு' என்னும் ஊரில் உள்ள குளத்தில் அரிசனங்கள் தண்ணீர் எடுப்பது பற்றி அறிவிப்பு வெளியிடுதல்.

1927 பகிஷ்கரித் ஹிட்டாகரினி சபா மூலம் 'பகிஷ்கரித் பாரத்' என்னும் பத்திரிகை தொடங்குதல்.

1928 எல்லோருக்கும் பணிக்காலத்தில் வழங்கப்படும் உரிமைகள் மகார் பிரிவு மக்களுக்கும் தரப்பட வேண்டும் என்றோர் தீர்மானத்தை மேல்சபையில் கொண்டு வருதல்.

1928 அரிசன மாணவர் விடுதி மற்றும் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் கல்விச் சங்கம் தொடங்குதல்.

1931 இரண்டாவது வட்டமேசை மாநாட்டில் கலந்து கொள்ளுதல்.

1932 மூன்றாவது வட்டமேசை மாநாட்டில் பங்கேற்றல். பூனா ஒப்பந்தம்

1933 டில்லி மத்திய சபையில், தீண்டாமையை ஒழிக்கத் தீர்மானம் கொண்டு வருதல்.

1934 அரசு சட்டக் கல்லூரியில் பேராசிரியர் வேலையில் அமர்தல்.

1935 மே 27, மனைவி ரமாபாய் மறைவு.

1935 அக்டோபர் 3 இயோலாவில் நடந்த மாநாட்டில், ''நான் இந்துவாகப் பிறந்திருந்தாலும், இந்துவாக இறக்க மாட்டேன்'' என்று அறிவித்தல்.

1936 'தொழிலாளர் சுதந்திரக் கட்சி' அம்பேத்கரால் ஆரம்பிக்கப்படுதல்.

1942 வைஸ்ராய் கவுன்சிலில், தொழில் துறை உறுப்பினராக அண்ணல் அம்பேத்கர் சேர்த்துக் கொள்ளப்படுதல்.



**பம்பாயில் நடைபெற்ற அனைத்திந்திய தாழ்த்தப்பட்டோர் சம்மேளன மாநாட்டில் - நீதிக்கட்சி இளைஞரணித் தலைவரும் அனைத்திந்திய தாழ்த்தப்பட்டோர் சம்மேளனத் தலைவருமான ராவ்சாகிப் என். சிவராஜ் அவர்களுடன் அண்ணல் அம்பேத்கர்.**

**—படம் உதவி: என்.ஏ. கருணாகரன்**

| | |
|---|---|
| 1945 | 'அகில இந்தியத் தாழ்த்தப்பட்டோர் இயக்கம்' அம்பேத்கரால் துவக்கப்பட்டது. |
| 1946 | வைஸ்ராய் கவுன்சில் உறுப்பினர் பதவியிலிருந்து விலகுதல். |
| 1947 | டாக்டர் அம்பேத்கர், இந்திய அரசின் சட்ட அமைச்சராக நியமிக்கப்படுதல். |
| 1948 | டாக்டர் சபீதாவை 2-ஆம் தாரமாக மணத்தல். |
| 1950 | பாராளுமன்ற உறுப்பினர் தேர்தலில் போட்டியிடுவோருக்கு என்னென்ன தகுதிகள் இருக்க வேண்டும் என்றோர் சட்டப் பிரிவு அம்பேத்கரால் உருவாக்கப்படுதல். |
| 1950 | ஏப்ரல் 14 - 60-வது பிறந்த நாள் விழா. |
| 1951 | அரசு, தாழ்த்தப்பட்டோரை மதிக்கவில்லை என்று கூறி, தமது அமைச்சர் பதவியை அம்பேத்கர் ராஜினாமா செய்தல். |
| 1951 | 'பாரதீய புத்த ஜனசங்கம்' என்ற அமைப்பு அவரால் உருவாக்கப்படுதல். |
| 1956 | நாகபுரியில் மிகப் பெரிய அளவில் நடைபெற்ற பௌத்தர்கள் மாநாட்டில், இந்து மதத்தைத் துறந்து புத்த மதத்தில் சேருதல். |
| 1956 | டிசம்பர் 6-ஆம் தேதி, உறக்கத்திலேயே அண்ணல் அம்பேத்கரின் உயிர் பிரிதல். |
| 1974 | அம்பேத்கர் பெயரால், வட சென்னையில் அரசினர் கலைக் கல்லூரி நிறுவப்பட்டது. |
| 1980 | ஆகஸ்டில் அம்பேத்கர் திருவுருவப் படம் தமிழ்நாடு சட்டப் பேரவையில் திறந்து வைக்கப்பட்டது. |
| 1989 | செப்டம்பர் 30-இல், தமிழகத்தில் டாக்டர் அம்பேத்கர் மாவட்டம் உருவாக்கப்படுதல் |
| 1990 | ஏப்ரல் 12-இல், நாடாளுமன்றத்தில் அம்பேத்கர் திருவுருவப்படம் திறந்து வைக்கப்பட்டது. |
| 1990 | ஏப்ரல் 14-இல் அம்பேத்கர் பிறந்த நாள் அரசு விடுமுறை நாளாக மத்திய அரசால் அறிவிக்கப்பட்டது. |
| 1990 | மத்திய அரசு, அம்பேத்கரை நினைவு கூரும் வகையில், அவரது திருவுருவம் பொறித்த அஞ்சல் தலைகளை இரண்டு முறை வெளியிட்டது. |
| 1990 | சென்னைச் சட்டக் கல்லூரிக்கு 'டாக்டர் அம்பேத்கர் சட்டக் கல்லூரி' என்று பெயர் சூட்டப்பட்டது. |

தமிழ்நாட்டில் பல இடங்களில் அம்பேத்கர் திருவுருவச் சிலைகள் அமைக்கப்பட்டன.

# அண்ணல் அம்பேத்கரும் தென்னிந்தியத் தலைவர்களும்

## ந. அ. கருணாகரன்

இலண்டனில் 1930, 31, 32-இல் நடந்தேறிய மூன்று வட்ட மேஜை மாநாடுகளில் சென்னை மாநிலத்தின் சார்பாக ராவ் பகதூர் ஆர். சீனிவாசன் அவர்களும், பம்பாய் மாநிலத்தின் சார்பாக டாக்டர் அம்பேத்கரும், செட்யூல்டு சமுதாயத்தின் பிரதிநிதிகளாக வட்ட மேஜை மாநாட்டில் கலந்துகொண்டனர்.


முதல் வட்ட மேஜை மாநாட்டில் காந்தியார் கலந்து கொள்ளவில்லை. அந்த முதல் வட்ட மேஜை மாநாட்டின்போது 1930 டிசம்பர்-31-இல் சிறுபான்மையினர் மூன்றாவது (Insub-Committee) துணைக்கூட்டத்தில் செட்யூல்டு சமுதாயத்தின் கோரிக்கைகளை முன்வைத்து ராவ் பகதூர் ஆர். சீனிவாசன், டாக்டர் அம்பேத்கர் ஆகியவர்களால் தயாரிக்கப்பட்ட ஓர் கூட்டறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. அதன் தொடர்புடைய அவ்விரு பெருந்தலைவர்களால் தயாரிக்கப்பட்ட 1931 நவம்பர் 4-ஆம் தேதியிட்ட மற்றொரு அறிக்கையும் இரண்டாவது வட்ட மேஜை மாநாட்டில் சமர்ப்பிக்கப் பட்டது.

வட்டமேஜை மாநாட்டில் கலந்து கொண்ட உறுப்பினர்களை மேன்மை தாங்கிய ஐந்தாம் ஜார்ஜ் மன்னரும், ராணியும் வின்சர்காஸ்டல் என்னும் ராஜ மாளிகைக்கு மூன்றுமுறை வரச்செய்து, கை குலுக்கி விருந்தளித்தனர். மன்னரிடம் பின்னுமோர்முறை இரட்டைமலை சீனிவாசன் அவர்கள் சந்தித்துப்பேச நேர்ந்தது. அவ்வமயம் மன்னர் 'தீண்டாமை என்றால் என்ன?' என்று திரு. இரட்டைமலை சீனிவாசன் அவர்களைக் கண்டு வினவினார். அதற்கு அவர், 'மேல் ஜாதியான் என்போன் கீழ் ஜாதியான் என் போனைத் தீண்டமாட்டான்' என்று பதிலளித்தார். உடனே மன்னர் ''ஒரு கீழ் ஜாதியான் தெருவில் வீழ்ந்து விட்டால் மேல் ஜாதியான் தூக்கி விடமாட்டானா?' என்று மேலும் வினவினார். அதற்கு இரட்டை மலை சீனிவாசன் 'தூக்கி விட மாட்டான்' என்று பதிலளித்தார். அதை மன்னர் கேட்டுத் திடுக்கிட்டு நின்று 'அவ்விதம் நடக்க என் அரசாட்சியில் விடமாட்டேன்' என்றார். மன்னரின் உறுதிமொழியின்பேரில் செட்யூல்டு சமுதாய மக்களின் குறைபாடுகளை அறிந்து அரசுக்கு அறிவிக்க லார்டு லோத்தின் பிரபுவின் தலைமையில் ஒரு குழு (Commission) நியமிக்கப்பட்டது.

காந்தியடிகள் எரவாடா சிறையில் இருந்தபோது 1932 ஆகஸ்ட் 17-இல் பிரிட்டிஷ் பிரதம மந்திரி ராம்சே மக்டொனால்டு செட்யூல்டு வகுப்பாரின் தனித்தொகுதிக்குச் சாதகமாக அரசு முடிவு செய்ததாக

திருமதி மீனாம்பாள் சிவராஜ், டாக்டர் அம்பேத்கர், ராவ் சாகிப் என். சிவராஜ் ஆகியோர்.





**இலண்டனில் நடைபெற்ற முதலாவது வட்டமேஜை மாநாட்டு மண்டபம்.**

ஓர் அறிக்கையை வெளியிட்டார். அடுத்த நாளே ஆகஸ்டு 18-இல் ராம்சே மக்டொனால்டுக்கு காந்தியார், 'என் உயிரைக் கொடுத்து உங்கள் முடிவை எதிர்க்கிறவனாக இருக்கிறேன். அதைச் செய்யச் சாகும் வரை நிரந்தரமாய் உண்ணா விரதம் இருப்பதுதான் எனக்குள்ள ஒரே வழி. உப்பும் சோடாவும் கலந்தோ கலக்காமலோ அருந்தும் தண்ணீரைத் தவிர வேறு எந்தவித உணவையும் உண்ணமாட்டேன்'. என்று எழுதினார். காந்தியார், கூறியபடியே 1932 செப்டம்பர் 20-இல் தன் உண்ணாவிரதத்தை மேற்கொண்டார்.

தனித் தொகுதிக்குப் பதிலாக, பிரைமரி தேர்தல் முறையை தேஜ் பகதூர்சப்ரு தயாரித்து டாக்டர் அம்பேத்கரைச் சந்தித்து அதை அவர் சம்மதிக்கும்படி செய்தார். திரு. ஆர். சீனிவாசன் அவர்களின் ஒப்புதலும் அவசியம் தேவை என்று எண்ணிய டாக்டர் அம்பேத்கர் தந்தி கொடுத்து அவரைப் பம்பாய்க்கு வரும்படிச் செய்தார்.

செட்யூல்டு வகுப்பாருக்கு வழங்கப் பட்ட தனித்தொகுதியை விட்டுக் கொடுத்து, அதற்குப் பதிலாகப் பிரைமரி தேர்தலை ஆதரிக்கும் ஒப்பந்தத்தில் எரவாடா சிறையில் 1932 செப்டம்பர் 24-இல் டாக்டர் அம்பேத்கர், ராவ்பகதூர் ஆர். சீனிவாசன், ராவ்சாகிப் என். சிவராஜ் மற்றும் பல செட்யூல்டு சமுதாயத் தலைவர்கள் கையொப்ப மிட்டனர். அதற்கடுத்து டாக்டர் அம்பேத்கரும், ராவ்பகதூர் ஆர். சீனிவாசனும் செட்யூல்டு வகுப் பாரின் தனித்தொகுதி முறையை விட்டுக் கொடுக்கத் தாங்கள் சம்மதிப்பதாகத் தந்தியின் மூலம் பிரிட்டிஷ் அரசுக்கு அறிவித்தனர். இதுவே எரவாடா உடன்படிக்கை அல்லது பூனா ஒப்பந்தம் எனப் படும். இந்த ஒப்பந்தத்தினால் வட்ட மேஜை மாநாட்டிற்கே வரலாற்று முக்கியத்துவம் இல்லாமற் போயிற்று.

**முதலாவது வட்ட மேஜை மாநாடு இலண்டனில் நடைபெற்றபோது அதில் பங்கேற்ற இரட்டைமலை சீனிவாசன், டாக்டர் அம்பேத்கர், ஏ.டி.பன்னீர் செல்வம் ஆகியவர்கள்.**



பூனா ஒப்பந்தத்தின் மூலம் தனித்தொகுதிமுறை கைவிடப்பட்ட போதிலும் எப்படியாவது செட்யூல்டு வகுப்பாரின் உரிமைகளைக் காப்பதற்கு வழிவகைச் செய்ய வேண்டுமென்று எண்ணிய சுந்தர் ராவ் 1933-இல் தாழ்த்தப்பட்டோர் ஊழியர் படை (The Depressed Classes Service Army) என்ற ஓர் அமைப்பை உருவாக்கி அதன் தலைவராகப் பொறுப்பேற்றார். செட்யூல்டு வகுப்பாருக்குத் தனித்தொகுதி முறையை (Seperate Electorate) கிடைக்கச் செய்வதே இவ்வமைப்பின் நோக்கமாகத் திகழ்ந்தது.


திரு. ஜே. சிவசண்முகபிள்ளை எம்.ஏ., ஒருவர் மட்டுமே பூனா ஒப்பந்தத்தில் கையொப்பமிடவில்லை. தாழ்த்தப்பட்டோர் ஊழியர் படையின் செயலாளர்களாக திரு. ஜே. சிவசண்முகபிள்ளையும், திரு. எஸ்.பி.ஐ. பாலகுருசிவமும், அவ்வமைப்பின் துணைச் செயலாளர்களாக திரு. பி. செல்வநாதன், திரு. கே.ஜே. நல்லையாவும் விளங்கினார்கள். அவ்வமைப்பின் துணைத் தலைவர்களாக ராவ் சாகிப் எம்.ஜி. மதுரைப்பிள்ளை, ரெவரண்ட் ஜான் ரத்தினம், சுவாமி சகஜானந்தா, ராவ் சாகிப் எல்.சி. குருசாமி, ராவ் சாகிப் வி.ஐ. முனுசாமிபிள்ளை, ஏ.டபுள்யு. அட்டன் இன்னும் பலர் விளங்கினார்கள்.

முதல் மந்திரி மாண்புமிகு பொப்லி அரசரும், செட்டிநாட்டு குமாரராஜா முத்தையா செட்டியாரும் அதன் காப்பாளர்களாகப் பொறுப்பேற்றனர். சென்னை நகரிலும் சுற்றுவட்டாரத்திலும் மொத்தம் 7,000 உறுப்பினர்கள் இதில் அங்கம் பெற்றனர். இது சம்பந்தமாக 1934-இல் சென்னையில் வரதராஜபுரத்தில் நீதிபதி கிருஷ்ணசாமி நாயுடுவின் பங்களாவில் பாபாசாகிப் டாக்டர் அம்பேத்கர் அவர்களை வரவழைத்து அவரது மேலான யோசனையைத் தாழ்த்தப்பட்ட ஊழியர் படையின் தலைவரான திரு. டி. சுந்தர்ராவும் மற்றும் நீதிக்கட்சித் தலைவர்களும் கேட்டறிந்தார்கள்.

டாக்டர் அம்பேத்கரின் மனைவியாரான ரமாபாய் அம்மையார் 1935 மே 27-அன்று காலமானார். கடவுள் பற்றுள்ள அந்த அம்மையார் பண்டரிபுரத்திலுள்ள பாண்டுரங்கக் கடவுளை ஒரு முறையாவது காண வேண்டும் என ஆவல் கொண்டிருக்க, அம்மையாரின் விருப்பத்தை டாக்டர் அம்பேத்கர் அவர்களால் நிறைவேற்ற முடியாமல் போயிற்று. அதற்குக் காரணம் தாழ்த்தப்பட்டவர்கள் இந்துக் கோயிலுக்குள் அனுமதிக்கப்படாமையேயாகும்.

அம்மையாரின் விருப்பத்தை அவரால் நிறைவேற்ற முடியாமல் போயிற்றே என்ற காரணத்தினாலும், பூனா ஒப்பந்தத்தினால் செட்யூல்டு சமுதாயத்திற்கு ஏற்பட்ட பாதிப்பையும் எண்ணி, எண்ணி இறப்பதற்கு. மதம் மாற்றம் என்ற கேள்விக்கே இடமில்லை;'' என்று தந்தியின் மூலம் டாக்டர் அம்பேத்கர் அவர்களுக்கு அறிவித்தார்.

டாக்டர் அம்பேத்கர் எடுத்த முடிவிற்குப் பதிலளிக்கும் வகையில் "Depressed Classes are not in the Hindu Fold" என்ற தலைப்பில் ராவ்பகதூர் ஆர்.சீனிவாசன் எழுதிய கடிதம் 1935 அக்டோபர் 20, ஞாயிறு அன்று வெளிவந்த 'Madras Mail' இதழிலும் 1935 அக்டோபர் 21-திங்களில் வெளிவந்த 'Justice' இதழிலும் வெளியாகி உள்ளன.



டாக்டர் அம்பேத்கர் 1934-இல் சென்னைக்கு வருகை புரிந்தபோது நீதிபதி டபுள்யு எஸ். கிருஷ்ணசாமி அவர்கள் வீட்டில் எடுக்கப்பட்ட படம். திரு.டி.சுந்தர்ராவ், ஏ.டபுள்யு ஹட்டன், எஸ்.முத்தையா, திரு.எல்.சி.குருசாமி, திரு.டி.வரத ராஜூலு. திரு.ஜி.ஏ.சுவாய், திரு.வி.தர்மலிங்கம் பிள்ளை, திரு.ஏ.கிருஷ்ணசாமி ஆகியோரும் படத்தில் உள்ளனர்.

டாக்டர் அம்பேத்கர் மனம் உடைந்து போனார். பின்னர் அவர் ''இந்து மதத்தில் நான் தாழ்த்தப்பட்டவனாகப் பிறந்தது என்துரதிருஷ்டம்.... நிச்சயமாக நான் ஒரு இந்துவாக இறக்க மாட்டேன்'' என்று தாழ்த்தப்பட்ட மக்களின் மாநாட்டில் முழங்கினார். தம் மக்களை மதம் மாறும்படியும் கோட்டுக் கொண்டார்.

திரு. ஆர் சீனிவாசன் ''ஆதி திராவிடர்கள் இந்துக்களே அல்ல; இந்துவாகப் பிறந்தால்தானே இந்துவாக

திரு இரட்டைமலை சீனிவாசன் 1926 ஜனவரி 1-இல் ராவ்சாகிப் என்ற பட்டம் பெற்றார். இவர் 1928-இல் 'The Madras Provincial Depressed Classes Federation' என்ற ஓர் அமைப்பைத் தோற்றுவித்தார். அவ்வமைப்பின் பொதுச் செயலாளராக திரு. என். சிவராஜ் பி.ஏ., பி.எல்., எம்.எல்.சி., விளங்கினார். 1930 ஜூன்-3-இல், ஆர்.சீனிவாசன் அவர்களுக்கு ராவ் பகதூர் என்ற பட்டமும் அதற்கடுத்து 1936 ஜனவரி 1-இல்திவான்பகதூர்என்ற பட்டமும்



டாக்டர் அம்பேத்கரும், அவரது துணைவியாரும்.

வழங்கப்பட்டன. அவர் *1936*-இல் 'The Madras Provincial Depressed Classes Federation'-ஐ

'The Madras Provincial Scheduled Castes Party' என்ற பெயரில் ஒரு கட்சியாக மாற்றினார். அக்கட்சியின் துணைத் தலைவராக ராவ் சாகிப் என். சிவராஜ் விளங்கினார்.

திவான்பகதூர் ஆர். சீனிவாசன் 'The Madras Provincial Scheduled Castes Party' -ஐ *1938*-இல், 'The Madras Provincial Scheduled Castes Federation'-ஆக மாற்றினார். அதில் ராவ்சாகிப் திரு. என். சிவராஜ் அங்கம் வகிக்கவில்லை. அதற்குக் காரணம் அதைப் போன்ற பெடரேஷனை அனைத்திந்திய மட்டத்தில் துவக்கி அதன் தலைவராக டாக்டர் அம்பேத்கர் அவர்களை ஆக்க வேண்டுமென்பதாகும்.

செட்யூல்டு வகுப்பில் பெரும் பாலோர் பாமர மக்களாகவும், டாக்டர் அம்பேத்கர் அவர்களை அறியாதவர்களாகவும் விளங்கிய படியால் டாக்டர் அம்பேத்கர் அவர் களை அம்மக்கள் அறியச் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் திருமதி மீனாம்பாள் சிவராஜ்



புத்தமதத்தில் சேர்ந்தபின் டாக்டர் அம்பேத்கர்.

அவர்கள் உடனடியாகத் தென் இந்திய ஆதிதிராவிடர்களின் மாநாடு கூட்டம் ஒன்றைக் கூட்ட வேண்டும் என்று திட்டமிட்டார். டாக்டர் அம்பேத்கருக்குப் பதிலாக எம்.சி. ராஜா அவர்களின் தலைமையில் பெடரேஷனைத் துவக்கும்படி உற வினர்கள் அம்மையார் அவர்களை வற்புறுத்தினார்கள். அதை அம்மை யார் பொருட்படுத்தவில்லை. டாக்டர் அம்பேத்கர் அவர்களே அகில இந்திய செட்யூல்டு வகுப் பாரின் தலைவராக விளங்கத் தகுதி யுடையவரென்று கருதினார். இதன் காரணமாக அம்மையார் டி.சுந்தர் ராவ் அவர்களின் உதவியை நாடினார்.

நீதிக்கட்சியின் *14*-வது மாநில மாநாடு சென்னையில் ஐலண்டு மைதானத்தில் *1938* டிசம்பர் *29,30,31* ஆகிய நாட்களில் நடந்தது. இந்த மாநாட்டில்தான் சிறையில் இருந்தபடியே பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள் நீதிக் கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அக்கட்சியின் தலைவரானார். அம்மாநாட்டின் செயலாளராக டி. சுந்தர்ராவ் விளங்கி மாநாட்டைச் சிறந்த முறையில் நடத்தி வைத்தார். மாநாடு *31*-ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமை முற்பகலுடன் முடிவடைவ தால் பிற்பகலில் தென்இந்திய ஆதிதிராவிடர்கள் மாநாடு நடத்து வதற்கு மீனாம்பாள் சிவராஜ் அம்மையார் அவர்கள் டி. சுந்தர் ராவ் அவர்களைக் கேட்டதும் அவர் அம்மாநாட்டுப் பந்தலை இலவச மாகக் கொடுத்து உதவினார். மேலும் அவர் காவல் துறையினரது அனுமதியும் பெற்றுத்தந்தார்.

தென் இந்திய ஆதிதிராவிடர் மாநாடு மீனாம்பாள் சிவராஜ் அம்மையார் தலைமையில் *1938* டிசம்பர் *31* ஞாயிற்றுக்கிழமை மாலை *6-30* மணி அளவில் துவங் கியது. அம்மாநாட்டில் எடுத்த தீர் மானங்களில் ஒன்று ''கூடிய விரை வில் சென்னை மாகாண ஆதி திராவிட மாநாடு ஒன்று டாக்டர் அம்பேத்கர் தலைமையில் நடத்த வேண்டுமென்று இம்மாநாடு விரும் புகிறது'' என்பதாகும். இத்தீர் மானத்தை ஆர். ராஜகோபால் கொண்டு வந்தார். தோழர்கள் சிந்தாதிரிப் பேட்டை சுவாமிநாதன் வேலூர் சுப்ரமணியம், குடந்தை

எல்லப்பன், திருச்சி சிவப்பிச்சை ஆகியோர் ஆதரித்தார்கள்.

திட்டமிட்டபடி 'All India Scheduled Castes Federation' 1942-ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. அதை அம்பேத்கர் கட்சி என்று அழைக்கப் பட்டாலும் அதன் தலைமையை டாக்டர் அம்பேத்கர் ஏற்க மறுத்த தோடல்லாமல் திரு. என். சிவராஜ் அவர்களையே அதன் தலைவராக ஆக்கினார். அந்த பெடரேஷனின் கொடியில் ஏழு நட்சத்திரங்கள் இடம்பெற்றன.

1944 ஆகஸ்ட் 27-இல் பெரியார் ஈ.வெ.ரா. திராவிடர் கழகத்தை சேலத்தில் நடந்த மாநாட்டில் தோற்று வித்தார். இதனை முன்னிட்டு 1944 செப்டம்பர் 17-இல் டி. சுந்தர் ராவின் திரையரங்கமான 'சன் தியேட்டரில்' தென் இந்திய நல உரிமைச் சங்கத்தின் செயற்குழுவின் ஆலோசனைக் கூட்டம் கூடியது. அச்செயற்குழு திரு. இராமச்சந்திர ரெட்டி அவர்களை ஒரு மனதாகத் தென் இந்திய நல உரிமைச் சங்கத் தின் தலைவராகத் தேர்ந்தெடுத்தது.

டாக்டர் அம்பேத்கரின் ஆலோ சனை பெற திரு. பி. பாலசுப்ர மணியம் முதலியார் தென் இந்திய நல உரிமைச் சங்கத்தின் ஆலோ சனைக் கூட்டத்தை 1944 செப்டம்பர் 22 பிற்பகலில் சென்னை ஓட்டல் கன்னிமராவில் கூட்டினார். உண வுக்குப் பின் நடந்த அக்கூட்டத்தில் டாக்டர் அம்பேத்கர் ஆற்றிய சிறப்பு ரையில் அவர் 'கட்சி என்றால் கட்சிக்கு ஒரு நல்ல தலைவரும் நல்ல திட்டங்களைக் கொண்ட அமைப்பும் வேண்டும். கட்சிக்குப் பொது மேடைகள் வேண்டும். தலைவரைக் குறை கூறுவது நல்ல காரியம் அல்ல; அது கூடாது'' என்று அறிவுரை கூறினார். செப்டம்பர் 24-இல்

'The Madras Provincial Scheduled Caste Federation' -னின் தலைவரும் அங்கத்தினர்களும் டாக்டர் அம்பேத்கர் அவர்களைப் பாராட்டி வாழ்த்து மடல் வழங்கினார்கள்.

அகில இந்திய செட்யூல்டு பெட ரேஷனின் சார்பாக 1945 டிசம்பர் 25 செவ்வாய்க் கிழமை மாலை 5 மணி அளவில் மாநிலத் தேர்தலை முன்னிட்டுச் சிறப்புக் கூட்டம் ஒன்று சென்னை பெரம்பூர் பேரக்ஸ் கான்ஸ்மித் நகரில் நடந்தேறியது. நகரத்தின் பல்வேறு பகுதிகளிலிருந் தும் செட்யூல்டு பெடரேஷன் சின் னங்களைத் தாங்கி 'டாக்டர் அம்பேத்கர் வாழ்க', 'தீண்டாமை ஒழிக' போன்ற பலவித கோஷங் களுடன் அங்கு 4-30 மணிக்கு சுமார் 30,000 மக்களுக்குக் குறை யாமல் கூடினர். அங்கு தாய்மார் களும் நீதிக் கட்சியின் பொதுச் செயலாளர் கே.சி. சுப்ரமணியம் செட்டியாரும், எஸ். முத்தையா முதலியார், டி.ஏ.எஸ். சாமி, டாக்டர் எ. கிருஷ்ணசாமி, எ.கே. பிள்ளை, ஜி.எ. அப்துல்காதர், எம்.சி.முகம்மது இப்ராஹிம் முதலிய பலரும் அக்கூட்டத்திற்கு வந்திருந் தனர். மேன்மை தாங்கிய டாக்டர் அம்பேத்கர் அவர்கள் ராவ்பகதூர் என். சிவராஜ் அவர்களால் வர வேற்கப்பட்டார். அக்கூட்டத்தில் அகில இந்திய செட்யூல்டு வகுப்பு பெடரேஷன் பொதுக்காரியதரிசி எம். ராஜ்போஜ் அவர்களும் வந் திருந்தார்.

ராவ் சாகிப் என். சிவராஜ் டாக்டர் அம்பேத்கர் அவர்களைச் சிறப்புரையாற்றும்படி கேட்டுக் கொண்டார். டாக்டர் அம்பேத்கர் தனது சிறப்புரையில் ''ஜஸ்டிஸ் கட்சியாரும் தங்கள் நபர்களை வரப்போகும் தேர்தலில் நிறுத்தப் போவதாகக் கேள்விப்பட்டேன். அவர்கள் அவ்வாறு நினைப்பது மகிழ்ச்சிகரமான விஷயமே; அவர்கள் அவ்வாறு முடிவு செய்திருப்பதைப் பற்றி நான் மகிழ்ச்சியடைகிறேன்.'' என்று பேசினார். டாக்டர் அம்பேத்கர் ஆற்றிய ஆங்கிலச் சொற்பொழிவை என். சிவராஜ் தமிழில் மிக விளக்க மாக மொழிபெயர்த்தார்.

**புரட்சி வீரர்:**

**டாக்டர் அம்பேத்கர் அவர்களுக்குச் சமமாக இந்தியாவில் யாரையும் சொல்ல முடியாது. இன்று மட்டுமல்ல, முப்பது ஆண்டுகளுக்கு முன் பாகவே இதை நான் கூறியிருக்கிறேன். 1930 முதலே எனக்கு அவரைத் தெரியும்.**

**நமது 'குடியரசு' ஏட்டில் என்னென்ன கருத் துகள் வருமோ, அவைகளை எல்லாம் அவர் பேசி இருக்கின்றார். நமக்கு ஏற்ற நண்பர் என்பதை எண்ணி அவரை நான் பாராட்டி வந்தேன்.**

**நமது குடியரசில் அவரைப் பற்றிப் பாராட்டி எழுதியதைப் பார்த்துத்தான் தாழ்த்தப்பட்டவர் களே அவரை உணர்ந்தார்கள்.**

**அம்பேத்கர் சிறப்பாக- தாழ்த்தப்பட்ட சமு தாயத்துக்குத் தலைவர் என்று சொல்லப்பட்டா லும், பகுத்தறிவுக்கு எடுத்துக்காட்டாக உள்ள ஒரு பேரறிஞராக விளங்கினார். எப்படிப்பட்டவரும் எடுத்துச்சொல்லப் பயப்படும்படியான- புரட்சி கரமான விஷயங்களை எல்லாம் வெகு சாதாரணத் தன்மையில் எடுத்துச் சொல்லும்படியான வீரராக வும் விளங்கினார்.** **— தந்தை பெரியார்**



**''நம்மை நாமே உயர்த்திக் கொள்ள வேண்டும். நாம் சுயமாக வாழ்வது எப்படி என்று கற்றுக் கொள்ள வேண்டும். தன்மானம் உடையவர்களாய் வாழ வேண்டும். நாமாக முயற்சி செய்து நமது அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும். இவற்றைச் செய்தால், நாம் உயர்வது உறுதி.''**

# தொழிலாளர் தலைவர்

# டாக்டர் அம்பேத்கர்

''டாக்டர் அம்பேத்கர் அவர்கள் ஒரு போர் வீரனைப் போல் தம் வாழ்க்கையை அமைத்துக் கொண்டிருந்தார். மிகமிக ஒடுக்கியாளப் பட்டு வந்த மக்கள், தாங்கள் ஏன் அப்படி ஒடுக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதை எண்ணிப் பார்க்கவும் அச்சப்பட்ட காலத்தில், தாங்கள் ஒடுக்கப்படுவதற்கு யார் காரணம் என்பதைத் தட்டிக் கேட்கத் திராணியில்லாமல் இருந்த காலத்தில்... குனிந்து குனிந்து வாழ்ந்தவர்களை நிமிரச்செய்து... பேசாதவர்களைப் பேசவைத்துப் போராடச் செய்து வந்தார்.''

— டாக்டர் அம்பேத்கரைப் பற்றிப் பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டது இந்தச் சொல்லோவியம்.

அப்படியெல்லாம் அல்லும் பகலும் பாடுபட்டு வரும் தனக்கு, இந்து மதத்தார் உரிய மரியாதை தரவில்லை என்ற துயரமே அம்பேத்கர் உள்ளத்தைச் சல்லடையாக்கியது. அதனால் தான், சொந்த மதமாம் இந்து மதத்தை விட்டு, வேறு எந்த மதத்திலாவது போய்ச் சேரும் முடிவுக்கு அவர் வந்தார்.

அந்த முடிவைக் கண்டித்தும், மறுபரிசீலனை செய்யும்படியும் பலரும் கருத்தறிவித்தார்கள்.

அதேபோல, அந்த முடிவுக்கு ஆதரவு தெரிவித்துச் செய்தியனுப்பியவர்களும் இந்தியாவில் இருந்தார்கள். அப்படிப்பட்டவர்களில் ஒருவர் நம் தமிழ்நாட்டைச் சேர்ந்த பெரியார் ஈ.வெ. ராமசாமி அவர்கள் ஆவார்.

பிறவி இழிவைத் துடைத்துக் கொள்ளக் கருதி, மதம் மாறப் போவதாக அண்ணல் அம்பேத்கர் அறிவித்ததும், பெரியார் கீழ்க்கண்டவாறு அவருக்கோர் தந்தியனுப்பினார்:

''தாங்கள் புத்திசாலித்தனமான முடிவுக்கு வந்தது பற்றி வாழ்த்துகிறேன். எக்காரணம் கொண்டும் அந்த முடிவிலிருந்து மாற வேண்டாம்; அவசரப்பட வேண்டாம். குறைந்தது பத்து இலட்சம் பேரையாவது முதலில் மாற்ற வேண்டும். பிறகு தான் தாங்கள் மதம்மாற வேண்டும். அதுதான் உருப்படியான காரியமாக இருக்கும். மலையாளம் உட்படத் தென்னிந்தியாவே தங்களுடைய முடிவுக்குப் பலத்த ஆதரவு அளிக்கும்.''

பெரியார் ஈ.வெ. இராமசாமி அவர்கள் அனுப்பிய இந்தத் தந்தி, அம்பேத்கருக்கு எத்தகையமனப் பாதிப்பை உண்டாக்கியதோ நமக்குத் தெரியாது. ஆனால் தன்னுடைய முடிவில் அவர் அழுத்தமாகவே இருந்தார்.

1936-ஆம் ஆண்டு ஆகஸ்டில் டாக்டர் அம்பேத்கர் ஒரு கட்சி ஆரம்பித்தார். மேத்தா என்பவரோடு இணைந்து துவங்கிய அக்கட்சிக்குத் 'தொழிலாளர் சுதந்திரக் கட்சி' (Indipendent Labour Party) என்று பெயர். தாழ்த்தப்பட்ட மக்களின்





''இந்திய மக்களாகிய நாம், இன்று அரசியலில் மகத்துவம் உடையவர்களாகவும், சமூக பொருளாதார வாழ்வில் சமத்துவம் அற்றவர்களாகவும் இருக்கிறோம். நமது அரசு இந்த முரண்பாட்டை விரைவில் போக்கியாக வேண்டும். இல்லையென்றால், யார் இந்தச் சமத்துவமின்மையால் துன்பப்படுகிறார்களோ, அவர்களால் தியாகம் பல புரிந்து உருவாக்கப்பட்ட இந்த ஜனநாயக அமைப்பு தகர்த்தெறியப்பட்டு விடும்.''

முன்னேற்றமே அக்கட்சியின் குறிக்கோள்.

இதற்கு அடுத்த ஆண்டே, மாகாண சுயாட்சி முறையில் இந்தியாவில் தேர்தல் அறிவிக்கப்பட்டது.

இதற்கிடையில், உடல் நலக் குறைவு ஏற்படவே அம்பேத்கர் ஜெனீவாவுக்குச் சென்று ஓய்வெடுத்துக் கொண்டார். நவம்பர் மாதத்தில் புறப்பட்டுச் சென்ற அவர், வியன்னாவுக்கெல்லாம் போய்விட்டு, ஜனவரி மாதத்தில் இந்தியாவுக்குத் திரும்பினார்.

தன்னுடைய தொழிலாளர் சுதந்திரக் கட்சியும் தேர்தலில் நிற்கும் என்றும் அறிவித்தார் அம்பேத்கர். மனிதாபிமானம் மிக்க வேறு சில கட்சியின் உறுப்பினர்களையும் தம் கட்சி மூலம் ஆதரிப்பது என்றும் முடிவு செய்தார்.

காங்கிரஸ் கட்சி சார்பிலேயே அந்தத் தேர்தலில் அதிக அளவு வேட்பாளர்கள் நிறுத்தப்பட்டார்கள்.

டாக்டர் அம்பேத்கர், பம்பாய் தொகுதியிலிருந்து போட்டியிட்டார்.

இந்தியாவெங்கும் இப்போது பரவலாகக் கிரிக்கெட் மோகம் இருக்கிறதல்லவா? இதே நிலை அப்போதும் இந்தியாவில் இருந்தது. ஆகவே, அம்பேத்கரை எதிர்த்து, பம்பாய் தொகுதியில் பால்வென்கர் என்ற கிரிக்கெட் வீரர் காங்கிரஸ் கட்சி சார்பில் நிறுத்தப்பட்டார்.

தேர்தல் பிரச்சாரம் மிகத் தீவிரமாக நடத்தப்பட்டது. அரிசன மக்களே அண்ணல் அம்பேத்கருக்கு எதிராகத் தூண்டி விடப்பட்டார்கள். ஆனால், இப்படிப்பட்ட சூழ்ச்சிகள் எல்லாம் அம்பேத்கரின் திறமைக்கும் பெருமைக்கும் ஈடுகொடுக்க முடியவில்லை.

தேர்தல், எல்லாத் தரப்பினரின் பலத்த எதிர்பார்ப்போடும் நடந்து முடிந்தது. பிப்ரவரி மாதம் 17-ஆம் தேதியன்று தேர்தல் முடிவுகள் வெளியிடப்பட்டன.

பெருவாரியான ஓட்டுகள் வித்தியாசத்தில் அம்பேத்கர் மகத்தான வெற்றி பெற்றார்.

அது மட்டுமல்ல; அந்தத் தேர்தலில், அவரால் துவக்கப்பட்ட 'தொழிலாளர் சுதந்திரக் கட்சி'யின் சார்பில் 17 வேட்பாளர்கள் போட்டியிட்டார்கள். அவர்களில் 15 பேர் வெற்றி பெற்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. ஏறத்தாழ இந்த வெற்றிச் செய்தி அறிவிக்கப்பட்ட அதே நேரத்தில்தான்—மகாடு நகரில் இருந்த சௌடா குளத்தில், எல்லோரும் தண்ணீர் எடுத்துக் கொள்ளலாம் என்று நீதி மன்றம் தீர்ப்பு வழங்கியது.

தேர்தல் வெற்றியோடு அந்த வெற்றியும் சேர்த்து நாடெங்கும் கொண்டாடப்பட்டது.

அந்தத் தேர்தலில் மொத்தத்தில் காங்கிரஸ் கட்சி வேட்பாளர்கள் அதிக அளவில் வெற்றி பெற்றிருந்தார்கள். ஆனால், வெள்ளை ஆதிக்கத்தின் மேலிருந்த வெறுப்புணர்ச்சி காரணமாக அரசு அமைக்க அவர்கள் தயாராக இல்லை. ஆகவே, பம்பாய் கவர்னரே இடைக்கால அரசு அமைத்தார்.

காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் கூடிப் பேசினார்கள். 'ஏன் நாமே அரசு அமைக்கக் கூடாது' என்று விவாதித்தார்கள். அதன்பின் எடுக்கப்பட்ட முடிவுப்படி ஜூலை 18-ஆம் தேதியன்று அவர்கள் பதவியேற்றுக் கொண்டார்கள். பி.ஜி. கேர் என்பவர் பம்பாய் பிரதமராகப் பதவியேற்றுக் கொண்டார்.

டாக்டர் அம்பேத்கருக்கு, எதிர்க்கட்சி வரிசையில் இடம் ஒதுக்கப்பட்டது.

சட்டமன்றம் கூடியது. அமைச்சர்களுக்கெல்லாம், தலைக்கு ஐநூறு ரூபாய் சம்பளம் என்று அறிவித்தார் பிரதமர் பி.ஜி. கேர். இது பற்றி சபையில் விவாதம் நடைபெற்றது.

''தாய் நாட்டுக்காகப் பலன் கருதாமல் உழைக்கிறேன் என்று சொல்லிக் கொள்பவர்களுக்கு, மக்கள் வரிப்பணத்திலிருந்து ரூ.500 சம்பளம் என்று எடுத்துக் கொடுப்பது அநியாயம். ரூ.75 சம்பளம் கொடுத்தால் போதாதா?'' என்று வாதாடினார் அம்பேத்கர். முடிவில், பி.ஜி. கேர் கொண்டு வந்த தீர்மானம் வாபஸாகி விட்டது.

டாக்டர் அம்பேத்கர், 1937-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 17-ஆம் நாளன்று சட்டமன்றத்தில் முதன் முதலாக ஒரு முக்கியத் தீர்மானம் கொண்டு வந்தார். நிலச் சீர்திருத்தம் (Khoti System) பற்றியதே அது. அந்த முதலாவது தீர்மானமே வெற்றிகரமாக சபையில் நிறைவேறியது.

'ஊராட்சி மற்றும் நகராட்சி மன்றங்களில் அரிஜன் என்று போடப்படுவதை நீக்க வேண்டும். அரிஜன் என்றால் கடவுளின் குழந்தைகள் என்று பொருள்படும்என்று பேசப்படுகிறது அப்படியானால் மற்றவர்கள் யாருடைய குழந்தைகள்...?'என்றெல்லாம் அம்பேத்கரின் ஆதரவாளர்களில் ஒருவரான செய்வாட் என்பவர் அத்தீர்மானத்தின் மீதான விவாதத்தில் பேசுகையில் கேட்டார்.

அவ்வாறு அவர் கொண்டு வந்த தீர்மானம், ஓட்டெடுப்புக்கு விடப்பட்டபோது தோற்றுப் போயிற்று.

அதற்குக் கண்டனம் தெரிவிக்கும் விதத்தில், டாக்டர் அம்பேத்கரும் அவரது ஆதரவாளர்களும் சபையிலிருந்து அன்றைய தினம் வெளி நடப்புச் செய்தார்கள்.

"குஜராத் ஞானியான நர்ஸி மேத்தா பாடல் ஒன்றிலிருந்து அரிஜன் என்ற அந்த வார்த்தை எடுத்தாளப்படுகிறது. அதை ஏற்றுக் கொள்ள வேண்டும்'' என்று பி.ஜி. கேர் எவ்வளவோ சொல்லியும் யாரும் அதை ஏற்பதாக இல்லை.

இன்னொருமுறை, தொழிலாளர் தகராறுகள் குறித்த சட்டத்தை எதிர்த்து அம்பேத்கர் கொண்டு வந்த மற்றொரு தீர்மானமும் திட்டமிட்டே

ஓட்டெடுப்பின் மூலம் தோற்கடிக்கப்பட்டது.

அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் விதத்தில் டாக்டர் அம்பேத்கருடைய தொழிலாளர் சுதந்திரக் கட்சியும், மாநிலத் தொழிற் சங்கக் காங்கிரசும் சேர்ந்து ஒரு நாள் வேலை நிறுத்த அறிவிப்புச் செய்தன. எஸ்.ஏ.டாங்கே, இந்துலால் யாக்னிக், டாக்டர் அம்பேத்கர் ஆகியோர், முதல் நாள் நடந்த கூட்டத்தில் 'வேலை நிறுத்தம் ஏன்?' என்பது பற்றி விளக்கிப் பேசினார்கள்.

அதற்கு அடுத்த நாள் வேலை நிறுத்தம் நடந்தது. அதில் 80 ஆயிரத்துக்கும் அதிகமான தொழிலாளர்கள் கலந்து கொண்டார்கள். இந்தியாவில் அப்படியொரு மாபெரும் வேலை நிறுத்தம் அதுவரை நடந்ததேயில்லை.

அப்போது உள்ளாட்சித்துறை அமைச்சராக இருந்தவர் கே.எம்.முன்ஷி அவர் நேரடியாகவே அந்த வேலை நிறுத்தத்தைப் பார்வையிட்டு வியந்தார்.

வேலை நிறுத்த நேரத்தில், ஒரு லாரியில் ஏறிக்கொண்டு, வேலை நிறுத்தத்தால் எந்தவித அசம்பாவிதமும் நடந்துவிடாதபடி நகரெங்கும் சுற்றிவந்து கண்காணிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தார் டாக்டர் அம்பேத்கர்.

அன்று மாலையில், வேலை நிறுத்த வெற்றி விழாப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் பேசிய அனைவரும், அண்ணல் அம்பேத்கரே இந்த வேலை நிறுத்தத்தின் வெற்றிக்கு முழு காரணம் என்று பாராட்டிப் பேசினார்கள்..

''அரிசனப் பெருமக்களின் தலைவர் மட்டுமல்ல; டாக்டர் அம்பேத்கர், தலைசிறந்த தொழிலாளர் தலைவரும் ஆவார்'' என்றே அவருக்கு அந்தக் கூட்டத்தில் புகழ் மாலை சூட்டப்பட்டது.



டாக்டர் அம்பேத்கருடன் தந்தை பெரியார்

தமக்கு அளிக்கப்பட்ட பாராட்டு உரைகளுக்கு நன்றி தெரிவித்து விழா இறுதியில் அம்பேத்கர் ஆற்றிய உரை, அனைவரின் உள்ளத்தையும் தொடும் விதத்தில் அமைந்திருந்தது.


சாதாரணமாகவே அம்பேத்கரின் பேச்சு, எல்லோரையும் கவர்ந்திழுக்கும் தன்மை உடையதாக இருக்கும்.

''அறிவு பெறப் படியுங்கள்; அமைப்பு ரீதியில் ஒன்று படுங்கள்; உரிமைக்குப் போராட ஒருபோதும் அஞ்சாதீர்கள். (Educate...Organise... and Agitate...)

''நான் எப்போதும் உங்களோடிருக்கிறேன்; அதேபோலவே நீங்கள் எப்போதும் என்னோடிருப்பீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு (I shall always be with you; as I know, you will be with me) ...''

—இப்படிப்பட்ட சொற்றொடர்கள், அண்ணல் அம்பேத்கரின் சொற்பொழிவுகளில் அடிக்கடி இடம் பெறுபவைகளாக இருந்தன.

**பி.எல். ராஜேந்திரன்**



**சாதி ஒழித்திடல் ஒன்று- நல்ல**
**தமிழ் வளர்த்தல் மற் றொன்று**
**பாதியை நாடு மறந்தால்- மற்ற**
**பாதி துலங்குவ தில்லை!**
**சாதி களைந்திட்ட ஏரி- நல்ல**
**தண்டமிழ் நீரினை ஏற்கும்**
**சாதிப் பிணிப்பற்ற தோளே- நல்ல**
**தண்டமிழ் வாளினைத் தூக்கும்!**

# தென்னார்க்காடு மாவட்டக் கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம்,
# வழுதரெட்டி அஞ்சல், விழுப்புரம்-605 602.

தொலைபேசி எண்: 2186

ஒன்றியம் பதிவு செய்யப்பட்ட நாள் : 31.03.1982.

ஒன்றியம் ஆரம்பிக்கப்பட்ட நாள் : 01.09.1982.

தென்னார்க்காடு மாவட்டத்தில் வாழும் பால் உற்பத்தியாளர்களுக்கும், நுகர்வோர்களுக்கும் சேவை செய்வதே ஒன்றியத்தின் நோக்கம்.

1. தென்னார்க்காடு மாவட்டத்தில் பால் உற்பத்தியைப் பெருக்குதல்

2. உற்பத்தியாளர்கள் வழங்கும் பாலுக்கு அதன் கொழுப்புச் சத்தின் அடிப்படையில் நல்ல விலையை நிர்ணயித்தல்.

3. தடங்கலின்றி வாராவாரம் பால் உற்பத்தியாளர்களுக்குப்பால் பணம் பட்டுவாடா செய்தல்.

4. மிகவும் குறைந்த கட்டணத்தில் கால்நடைகளுக்கு அவசரச் சிகிச்சை மற்றும் இலவச மருத்துவ வசதிகள் செய்தல்.

5. கால்நடைப் பராமரிப்பு பயிற்சி நிலையங்களை அமைத்து அதன்மூலம் உறுப்பினர்களுக்கு நல்ல பயிற்சி அளித்தல்.

6. கன்று வளர்ப்புத் திட்டத்தின்கீழ் மானிய விலையில் தீவனம் வழங்குதல்.

7. பால் நுகர்வோர் சங்கங்கள் மூலம் பொதுமக்களுக்குக் காலத்தில் தரமான பாலைத் தேவையான அளவு தகுந்த விலையில் தருதல்.

8. நுகர்வோர்களுக்குத் தேவையான ஆவின் பால் உபபொருட்களாகிய பால்பவுடர், நெய், வெண்ணெய், பால்கோவா, ஐஸ்கிரீம் மற்றும் சுவையூட்டிய பாலினை ஒன்றியத்தின் மூலமாக நேரடியாகவும், பால் நுகர்வோர்கள் சங்கங்கள் மூலமாகவும், மற்றும் முகவர்கள் மூலமாகவும் விற்பனை செய்தல்.

டாக்டர்.கு.அம்பலவாணன்,பி.வி.எஸ்ஸி.,
நிர்வாக இயக்குநர்,

.அ.இளங்கோவன்,இ.ஆ.ப.,
ஒன்றியப் பெருந்தலைவர்



# கறுப்பு வைரமே!

ஞா.மாணிக்கவாசகம்

பாடுக பாட்டே பாடுக பாட்டே
இந்த நூற்றாண்டின் இணையற்ற தலைவர்
பீம்ராவ் ராம்ஜி அம்பேத்கர் என்றே
பாடுக பாட்டே பாடுக பாட்டே!

வாழ்வின் வசந்தம் ஏழைகள் வீட்டு
வாசல் கதவைத் தானே திறக்கும்
காலமும் வருமா என்றுகாத் திருந்த
இந்திய நாட்டில் எழுச்சி விதையை

தூவி விட்ட தொண்டின் சிகரம்!
சாதிக் கொடுமை என்னும் சமுத்திர
நீருக்குள் உப்பாய்க் கிடந்த மக்களை
கறுப்பு வைரம் ஆக்கிய தலைவர்!

கறுப்பு வைரம்! இந்திய நாட்டின்
மக்கள் தொகையில் பத்திலொரு பங்கை
நாயினும் கீழாய் நடத்தும் கொடுமை
போக இங்கொரு புதுவழி கண்டவர்.

தொட்டால் தீட்டு பார்த்தால் பாவம்
என்பதே இங்கொரு எழுதாச் சட்டமாய்
இருந்த நிலையை மாற்றி அமைத்த
சட்ட அமைப்பின் சாகித்ய கர்த்தா.

பன்றியும் நாயும் படுத்துப் புரளும்
தெருவில் நடக்கக் குளத்தில் இறங்க
இருந்த தடையை எதிர்த்து உடைத்த
இந்தநூற் றாண்டின் எழுச்சியின் சின்னம்.

இல்லாமை ஒருபெரிய துன்பம் இல்லை
கல்லாமை மிகப்பெரிய குற்றம் ஆகும்!
கற்க எல்லோரும் இயன்றவரை பிறர்க்குக்
கல்வி கற்பிக்க முயல்க என்றார்.

வாழ்ந்து கழித்த நாட்களின் தொகுப்பு
அல்ல மனித வாழ்க்கை என்பது,
எப்படி வாழ்வது என்பதற் கெழுதிய
இலக்கணம் மனித வாழ்க்கை என்பது.

எடுத்துக் காட்டாய் இதற்கு இங்கே
வாழ்ந்து காட்டிய வரலாற்று ஞானி.
தாழ்ந்து இழிந்து கிடந்த மக்களை
தலைநிமி ரச்செய்த தத்துவ மேதை!

இலக்கியம் இவரின் எழுத்தும் பேச்சும்
இலக்கியம் இவரின் வாழ்வும் பணியும்!
தாழ்த்தப் பட்ட மக்களின் தலைவர்
டாக்டர் அம்பேத்கர் என்பதே சத்யம்!

# தந்தை பெரியாரும் அண்ணல் அம்பேத்கரும்

தந்தை பெரியார் அவர்களுக்கும் அண்ணல் அம்பேத்கர் அவர்களுக்கும் மிகுந்த பொருத்தம் இருந்தது.

தந்தை பெரியார் இந்து சமயத்தில் தோன்றியவர்தான் என்றபோதிலும், அந்தச் சமயத்தில் நிலவி வந்த மூட நம்பிக்கைகளைச் சாடி வந்தார்; பகுத்தறிவுத் தத்துவத்தைப் பரப்பிவந்தார். சீர்திருத்தக் கொள்கைகளை முழங்கி வந்தார்.

இந்தியத் திருநாட்டின் வடபகுதியைச் சேர்ந்த மராட்டிய மாநிலத்தில் தோன்றிய அண்ணல் அம்பேத்கார், இந்து சமயத்தில் தோன்றியவர்தான் என்றாலும், தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர் என்பதால், சாதி இந்துக்களால் புறக்கணிக்கப்பட்டவர். அவர்களால் பல்வேறு துன்பங்களுக்கு ஆட்பட்டவர், உரிமைகள் மறுக்கப்பட்டவர்.

பல்வேறு துறைகளில் உயர்கல்வி பெற்றும்கூட அவர் சனாதன இந்துக்களால் மிகவும் துன்புறுத்தப்பட்டார். அதனால் இயல்பாகவே இந்து சமயத்தின் மீது அவருக்கு வெறுப்பு ஏற்பட்டது.

தீண்டாமைப் பேயை நாட்டை விட்டு விரட்ட வேண்டும் என்று அரும்பாடு பட்டார். தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமைக்காகப் போராடினார். நாட்டு மக்களுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் உண்மை விளங்க வேண்டும் என்பதற்காக மேடைகளில் முழங்கினார்; நூல்கள் பல படைத்தார்.

அம்பேத்கார் - தந்தை பெரியார் இருவரின் கொள்கைகளிலும் போராட்டங்களிலும் ஒப்பியல்பு அமைந்திருந்தது போன்றே, ஒருவரை ஒருவர் உணர்ந்து போற்றிக் கொண்ட செயலிலும் ஓர் ஒப்புமை இருந்தது.

தந்தை பெரியார் - வைக்கத்திலே தீண்டாமை ஒழிப்புப் போரை 1924-ஆம் ஆண்டில் தொடங்கினார். தாழ்த்தப்பட்ட சமூகத்தில் தந்தை பெரியார் பிறக்கவில்லை என்றாலும், தாழ்த்தப்பட்டோரின் பிரதிநிதியாக நின்று போராட்டத்தில் ஈடுபட்டார். பெரியார் நடத்திய வைக்கம் போராட்டம் அண்ணல் அம்பேத்கரைக் கவர்ந்தது.

''1924-இல் பெரியார் வைக்கத்தில் நடத்திய தீண்டாமை ஒழிப்புப் போராட்டம் என்னுள் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது'' என்று 1927-ஆம் ஆண்டில் அண்ணல் அம்பேத்கர் வெளிப்படையாகத் தெரிவித்திருக்கிறார்.

அம்பேத்காரின் அரும்பணி குறித்துத் தந்தை பெரியார் 1952-இல் போற்றி எழுதியிருக்கிறார். அது வருமாறு:

''1925-ஆம் வருஷத்திலே இந்த நாட்டில் சுய மரியாதை இயக்கம் தோன்றியது. இந்த நாட்டிலே மதத்தை எதிர்த்து, மற்ற பேதங்களை எதிர்த்துக் காரியம் செய்வதென்றால், அவ்வளவு கஷ்டமல்ல, மக்களுக்குள் நீண்ட நாளாகவே அந்த உணர்ச்சி இருந்து வந்திருக்கிறது என்பதால் ; ஆனால் வட நாட்டில் அப்படி அல்ல. அங்கு இந்த உணர்ச்சியைக் கிளப்புவதென்றால் கடினமான காரியம். ஆனால் அங்கேயே 1927, 1928-லேயே அம்பேத்கர் சுய மரியாதைக் கொள்கைகளைப் பேசியிருக்கிறார்.''

1940-இல், தமது கோரிக்கைகளுக்கு ஆதரவு திரட்டுவதற்காகத் தந்தை பெரியார் அவர்கள் பம்பாய்க்குச் சென்று அண்ணல் அம்பேத்கார் அவர்களையும், ஜனாப் ஜின்னா அவர்களையும் சந்தித்தார். அப்போது அவரை ஆதரித்துக் கருத்துகளைப் பரிமாறி, தந்தை பெரியாருக்கும் அவரது குழுவினருக்கும் விருந்து தந்து மகிழ்ந்தார் அம்பேத்கர்.

பர்மாவில் 1954-இல் நடைபெற்ற புத்தமத 3-வது மாநாட்டில் அம்பேத்காருடன் தந்தை பெரியார் அவர்களும் கலந்து கொண்டு உரையாற்றியிருக்கிறார்.

சாதிக் கொடுமைகளை தீர்ப்பதற்காக, தாமும் தமது சமூக மக்களும் மதம் மாறிவிடப் போவதாக 1930-ஆம் ஆண்டிலேயே அம்பேத்கார் அறிவித்தார். தந்தை பெரியார் அம்பேத்கரைப் பாராட்டினார்; அவரது கருத்தை ஆதரித்தார். அவருக்கு ஊக்கமளித்தார்.


''நீங்கள் வேறு மதத்திற்குத் தனியாகப் போகக் கூடாது. குறைந்தது ஒரு இலட்சம் மக்களுடன் மதம் மாற வேண்டும். அப்போதுதான் நீங்கள் போகிற மதத்தவனும் மதிப்பான். தனியாக அங்கு போனால் அவனும் நம்மைக் கவனிக்க மாட்டான். ஆகையால் ஒரு இலட்சம் பேரோடு தாங்கள் மதம் மாறும் போது நானும் ஒரு 10, 20 ஆயிரம் பேர்கள் தருகிறேன்'' என்று தந்தி அடித்தார்.

பகுத்தறிவுக்கு ஏற்புடைய-மானிடப் பண்புக்கு உகந்ததான-சமதர்மக் கோட்பாட்டுக்கு உரியதான பௌத்த சமயத்திற்கு மாறப் போவதாக அண்ணல் அம்பேத்கர் 1952-இல் அறிவித்தபோது அவரை வாழ்த்தினார் தந்தை பெரியார்.

''டாக்டர் அம்பேத்கர் அவர்கள் இப்போது கொஞ்ச நாட்களாக பௌத்தக் கொள்கையில் சேரப் போவதாகச் சொல்லி வருகிறார். உண்மையில் பௌத்தம் ஓர் உயர்ந்த மதமாகும்'' - தந்தை பெரியார் தெரிவித்த கருத்து இது.

தந்தை பெரியார் - அண்ணல் அம்பேத்கர் இந்த இரு தலைவர்களும் - தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினரின் நலன் காப்பதற்கு இயற்கை அளித்த கொடை என்று கூறினால் அது மிகையாகாது.

**டாக்டர் சா. பெருமாள்**



# புரட்சி வீரர் அம்பேத்கர்

—கலைமாமணி பட்டுக்கோட்டை குமாரவேல்

டாக்டர் அம்பேத்கர் பரந்த படிப்பும், ஆழ்ந்த அறிவும் வியக்கத் தக்க நெஞ்சுரமும் கொண்ட புரட்சி வீரர்.

இந்திய அரசியல் சட்டத்தின் அடிப்படை மூளையாக விளங்கியவர்.

தீண்டப்படாத ஏழைக் குடும்பத்தில் பிறந்து பள்ளிப் படிப்புக்காக அவர் பட்ட துன்பங்கள்- இந்து சமூகம் அவர் கல்வி வளர்ச்சிக்குத் தந்த தொல்லைகள் ஆகியவை அவர் மனதைப் பாதித்து விட்டன.

பல பள்ளிகள் அவர் படிக்கவே இடம்தர மறுத்துவிட்டன. சக மாணவர்களோடு இணையாக உட்கார்ந்து கல்வி கற்கவும் சமுதாயம் அவருக்கு இடம் தரவில்லை.

அவருடைய உழைப்பில்வரும் வருமானத்தில் பெரும்பகுதியில் எல்லா வகையான நூல்களையும் வாங்கிப் படித்துத் தன் அறிவை வளர்த்துக் கொண்டார்.

இந்திய மக்கள் ஜாதி, மதம் இவைகளால் ஏற்பட்ட ஏற்றத் தாழ்வுகள் அவரைச் சிறந்த மத ஆராய்ச்சியாளராக்கியது. தீவிர வாதியாக்கியது.

அவருடைய அறிவையும் ஆற்றலையும் துணிவையும் கண்ட இந்திய நாட்டின் முதல் பிரதமரான ஜவஹர்லால் நேரு அவர்கள் அவரை முதல் இந்திய அரசின் சட்ட அமைச்சராக்கி, இந்திய அரசின் அரசியல் சட்டத்தையே எழுதச் சொன்னார். அவர் தலைமையில் உருவாக்கப்பட்ட சட்ட அமைப்புத் தான் இப்பொழுது நம்மை ஆட்சி செய்து கொண்டிருக்கிறது.

''தீண்டாமை வழக்கத்தைத் தண்டனைக்குரிய குற்றம்'' என்பதாக ஒரு விதியையும், மத்திய அரசின் சட்டத்தில் நுழைத்தார்.

ஒரு நாட்டு மக்கள் எல்லோரும் எல்லா நலன்களும்பெற்று வாழ வேண்டுமானால் மக்கள் ஒருமைப் பாட்டுணர்வோடு வாழவேண்டும். அந்த ஒருமைப்பாட்டுணர்வு மக்கள் வாழ்வில் மலர்ந்திட முதலில் சமுதாயச் சீர்திருத்தம் செய்திட வேண்டும்.

இவைகளையெல்லாம் சிந்தித்த டாக்டர் அம்பேத்கர் தெளிவாகப் பேசியிருக்கிறார். முடிவாகச் சொல்லியிருக்கிறார்-

''ஒவ்வொரு மனிதனும் அவரவர் ஜாதியை விட்டு வேறு ஜாதியில் தான் அவர்கள் பெண்களுக்கு- அவர்கள் பிள்ளைகளுக்குத் திருமணம் செய்யவேண்டும் என்று மையஅரசு சட்டம் கொண்டுவர வேண்டு''மென்று சொன்னார். அமைச்சரவையிலேயே அதைச் சொன்னதோடல்லாமல் 'ஜாதியை ஒழிக்க வழி' என்ற நூலையும் எழுதியிருக்கிறார்.

வடக்கே டாக்டர் அம்பேத்கரும் தெற்கே தந்தை பெரியாரும் இல்லையெனில் இந்திய நாட்டு வைதீகமும் கண்மூடித்தனமான மூடநம்பிக்கையும் இந்திய மக்களை நிரந்தர அடிமைகளாக்கியிருக்கும்.



அரசியல் அமைப்பின் தந்தை

# அம்பேத்கர்

மனசை ப.கீரன்

குடியரசாம் அரசியலின் அமைப்பை இங்கே
கொழுந்துவிட்டு வேரூன்றிக் கனியச் செய்தார்!
வடிவமைத்த பிரம்மாக்கள் குழுவின் ஏறு!
வலிதாக்க முதல்குடியாம் அன்னை நாட்டை
அடிமைகளாய் மந்தைகளாய் நலிந்த சேற்றில்
ஆற்றல்செந் தாமரையில் எழுந்தார், அண்ணல்!
கொடிமலராய்த் தரையிருந்தோர் கலசம் ஆக்கிக்
குழிகிடந்தோர் சிகரம்போல் ஏற்றி விட்டார்!

''கிணற்றினிலே நீரெடுத்தால் தீட்டு! தீட்டு!
கேட்காமல் தண்டனைகள் போட்டுத் தீட்டு!
இணக்கமுற இழுத்தேகும் மாட்டு வண்டி
ஏறிடிலோ தீட்டகலக் கழுவு வண்டி!''
பிணக்குகளாம் சுழல்களிலே எதிர்த்து நீச்சல்
போட்டவரே அம்பேத்கர்; தீரர் வீரர்!
கணக்கில்லாச் சுறாமீன்பால் நங்கூ ரம்போல்
கணக்காகச் சமுதாயம் சமைத்தார், சான்றோர்!

கொட்டுற்றால் மோதிரக்கைக் கொட்டே வேண்டும்!
குட்டதுவும் கைகொடுத்துத் தூக்கும் அன்றோ?
முட்டுபகை முட்டாள் கீழ்! கெட்டிக் காரன்
மோதுவதே முனைமுகத்தும் வேண்டும்! என்பர்.
பட்டாலும் அம்பேத்கர் மேலை நாட்டோர்
பயன்தொடர்பால் விழிப்புற்றார்! மேன்மை யுற்றார்?
கெட்டலைக்கும் சழக்குகளில் சிக்கா தோங்கிக்
கிடந்தோரை இழுத்தெல்லாம் கரைமேல் சேர்த்தார்!

பட்டிதொட்டி கடையனுக்கும் கடையன் எல்லாம்
பகர்ந்திட்டால் 'அம்பேத்கர்' பேரை எங்கும்
பட்டாளச் சிப்பாய்போல் நிமிர்வார்! ஆங்கே
படைக்காத முதுகெலும்பில் புழுவும் நிற்கும்!
கொட்டிவைத்த விண்மீன்போல் விளங்கி, சிற்றூர்
குவிந்தகன்ற பாரதத்தில் அவன்பேர்ச் சக்தி
கட்டவிழ்த்துக் கதியளித்துத் தூக்கம் போய்த்தன்
கால்நிற்கத் தலைநிமிர்த்தும்! உண்மை, உண்மை!

அம்பேத்கர் அரும்புதல்வர் அப்பன் பேரை
ஆக்கமுறு நற்பேராய் விளங்கச் செய்வார்!
அம்பெறிந்தாற் போல்விரைந்தே இலக்கை நாளும்
அலுவல்கள் செய்களன்ன அன்னார் சொன்னார்!
கும்பினியோர் அடிமைகளாய்த் துயின்ற நாடு
குடியரசில் எல்லோரும் உழைத்தே வாழ்த்தத்
தம்பிகளே! எலாம் எழுமின்! விழிமின் செய்மின்!
தாயகத்தைத் தரணிமுடி மணியாய்ச் செய்மின்!



தென் ஆர்க்காடு மாவட்டத்தில்

# ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப்பணி

நஞ்சையும் புஞ்சையும் கொஞ்சி விளையாடும் தென் ஆர்க்காடு மாவட்டம், தமிழகத்திலேயே ஆதிதிராவிடர்கள் அதிகமாக வாழ்கின்ற மாவட்டமாகும். இம்மாவட்டத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப்பணிகளை முடுக்கிவிடும் வகையில் அரசு பல்வேறு நலப்பணிகளைப் பாங்குடன் செய்து வருகிறது.

ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்ற கொள்கையில் பட்டிதொட்டிகளில் வாழ்கின்ற ஆதிதிராவிடர்களுக்கும், மலைப்பகுதியில் வாழ்கின்ற பழங்குடியினர்களுக்கும் அவர்களது வாழ்க்கை மேம்பாட்டை வலுப்படுத்தும்வகையில் தமிழக அரசு பல்வேறு நலப்பணிகளைச் செய்து வருகிறது.

ஏழை எளிய ஆதிதிராவிட மக்களுக்கு உண்ண உணவு, உடுக்க உடை, தங்க மாணவ மாணவியர் விடுதிகள், கல்வி உதவித் தொகை, காலணிகள் வீட்டுமனைப் பட்டாக்கள், இலவசத் தொழிற் கருவிகள், விவசாயத்திற்கு உழவு மாடுகள், கறவை மாடுகள், தொழிற்கடன் ஆகியவற்றை வழங்கி ஆதிதிராவிடர்களுடைய நலனைக் காத்து வருகிறது.

**கல்வி உதவித்தொகை:**


ஆதிதிராவிடர்களின் பல்வேறு மேம்பாட்டு நலத் திட்டத்திற்காக, அரசு அளித்துள்ள தொகை ரூபாய் ஏழு கோடியாகும். கல்வி வளர்ச்சியே கீழ்நிலை மக்களை மேலுக்குக் கொண்டுவரும் மேன்மையான திட்டமென்று, பாதிக்கும் மேலான தொகையினை நலத்துறையின்கீழ் பள்ளிகள், விடுதிகள், தொழிற்பயிற்சிக்கூடம், ஆசிரியர் பயிற்சி, சிறுதொழிற், பயிற்சி போன்றவைகளை ஏற்படுத்தி, அதில் பயிலும் மாணவர்களுக்கு உணவு, உடை, பாடநூல், பாடப்புத்தகம், காலணி போன்றவைகள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

இலவசக் கல்வி உதவித்தொகை, கடன் மூலம் கல்வி உதவித்தொகை, சிறப்புக் கல்வி உதவித்தொகை (Merit Scholarship) காந்தி நினைவு கல்வி உதவித்தொகை போன்றவைகளின் மூலம் சுமார் 44,430 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவ மாணவியர்களுக்கு ரூ.57,35,000 செலவு செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இதில் ரூ.41,06,093 செலவு செய்து சாதனை 72 விழுக்காடு எட்டப்பட்டுள்ளது.

**இலவசப் பாடப்புத்தகங்கள் உரிய காலத்தில் வழங்குதல்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின்கீழ் இயங்கிவரும் பள்ளிகளில் கல்வி பயிலும் 39,249 மாணவ மாணவிகளுக்கு ரூபாய் 9 இலட்சம் அளவில் பாடப்புத்தகங்கள் வழங்க இலக்கு நிர்ணயித்தது. இதில், 39,176 மாணவர்களுக்கு ரூ.8.8 இலட்சம் அளவில் பாடப்புத்தகங்களை இத்துறையின்கீழ் பணிபுரியும் தனிவட்டாட்சியர், உதவிக் கல்வி அலுவலர் மற்றும் பள்ளித்துணை ஆய்வர் ஆகியோரின் செயல்திறன்கள்

**—சிவ. சூரியன்**
**மாவட்ட வருவாய் அலுவலர்**
**தெ.ஆ.மாவட்டம், கடலூர்.**





முடுக்கிவிடப்பட்டதன் மூலம், உரிய காலத்தில் வழங்கி சாதனை அளவாக 97 விழுக்காட்டினை எட்டியுள்ளது.

பொதுப்பள்ளிகளில் 9 மற்றும் 10-ஆம் வகுப்புகளில் பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவ மாணவியர்களுக்கு ரூ.14 இலட்சத்திற்குப் பாடநூல்கள் வழங்க இலக்கிட்டு 1 இலட்சம் மாணவர்களுக்கு ரூ.14.8 இலட்சம் செலவிட்டு குறியீட்டினை விஞ்சிய அளவில் சாதனை 105 விழுக்காடு பெற்றுள்ளது.

**பொதுப்பள்ளியில் பயிலும் மாணவ மாணவியர்களுக்குக் குறிப்பேடுகள் வழங்குதல்:**

பொதுப்பள்ளிகளில் 4-ஆம் வகுப்பு முதல் 10-ஆம் வகுப்புவரை கல்வி பயிலும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறித்துவ மாணவ மாணவியர்களுக்குக் குறிப்பேடுகள் வழங்க ரூ.4 இலட்சம் இலக்கிட்டு, 37,642 மாணவ மாணவியர்களுக்கு ரூ.3.97 இலட்சம் செலவு செய்து சாதனை 99 விழுக்காடு அடைந்துள்ளது.

**விடுதிகள் (பழையவை, புதியவை) பராமரிப்பு:**

இம்மாவட்டத்தில், அரசு தொழிற்பயிற்சி மாணவர் விடுதியையும் உள்ளடக்கிய 64 மாணவ மாணவியர் பழைய விடுதியும், 21 மாணவ மாணவியர் புதிய விடுதிகளையும் சேர்த்து 85 விடுதிகள் இயங்கி வருகின்றன. இவ்விடுதிகளில் 6,139 மாணவர்களும், 1941 மாணவியர்களும் தங்கிக் கல்வி பயிலுகின்றனர். இவ்விடுதிகளின் பராமரிப்புச் செலவிற்காக ரூ.1.07 கோடி ஒதுக்கப்பட்டு, ரூ.92.8 இலட்சம் செலவு செய்து அடைந்துள்ள சாதனை 91 விழுக்காடு ஆகும்.

**விவசாயிகளுக்கு உழவு மாடு மானியம்:**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்களின் முக்கியத் தொழில் விவசாயம். எனவே, அவர்களின் தொழில் வளர்ச்சிக்காக உழவு மாடுகள் ஒரு ஜதை (இரண்டு எருதுகள்) வாங்குவதற்காக மானியத்தொகை ரூ.800 வழங்கப்பட்டு வந்ததை உயர்த்தி, தற்சமயம் தமிழக அரசு ஒரு ஜதை உழவு மாடுகள் வாங்குவதற்கு ரூ.3,000 வழங்கி வருகிறது. இத்தொகையில் ரூ.1,500 நலத்துறை மூலம் மானியமாகவும், ரூ.1,500 வங்கிகள் மூலம் குறைந்த வட்டி வீதத்தில் கடனாகவும் அளிக்கிறது. இத்திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.1.91 இலட்சமாகும். 100 நபர்களுக்குப் பயனடைவு செய்து, ரூ.1.30 இலட்சம் செலவிட்டு சாதனைக் குறியீடாக 69 விழுக்காடு எட்டியுள்ளது.

**நில எடுப்பு (வீட்டுமனைப்பட்டா, இடுகாடு, பாதைவசதி)**

மனிதனின் வாழ்க்கைக்கு மிகவும் அவசியமான அடிப்படை வசதிகளான குடியிருப்பு மனை, இடுகாடு, பாதை வசதி போன்றவையாகும். இந்த நியாயமான வசதிகளைச் செய்து கொடுப்பதற்காக கையகப்படுத்தப்பட்ட நிலங்களின் மதிப்பீடு ரூ.20.2 இலட்சமாகும். இதன்மூலம் பயனடைய வேண்டிய பயனாளிகள் 4,500. இதன்கீழ் பயனடைந்த பயனாளிகள் 2,664 பேர்கள் ஆகும். சாதனை 77 விழுக்காடு ஆகும்.

**குடிதண்ணீர் வசதி:**

பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வழங்கும் நோக்கில் ஆழ்குழாய்க் கிணறுகள் மற்றும் குடிநீர்க் குழாய்கள் நீட்டிப்புப் பணிகள் செய்ய ரூ.1.73 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. இதுவரை 30 பணிகள் முடிக்கப்பட்டு ரூ.1.75 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. சாதனை 101 விழுக்காடு ஆகும்.

**ஊராட்சி ஒன்றிய மானியம்:**

அத்தியாவசியமான குடிதண்ணீர் வசதி, சாலை வசதி போன்ற வசதிகள் செய்து தருவதற்காக நலத்துறை நிதியிலிருந்து 15 விழுக்காடு மானியமாக ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்க ரூ.50,000 ஒதுக்கீடு செய்யப்பட்டதில் இதுவரை ரூ.2,70,000 செலவு செய்து சாதனை 54 விழுக்காடு எட்டியுள்ளது.

**தீண்டாமை, தூய்மை, கலப்புத் திருமணம் - பரிசு வழங்கல்:**

தீண்டாமை ஒழிப்பில் சாதனை புரிந்து ஒற்றுமையாய் வாழ்ந்து காட்டும் கிராமத்திற்கு வானொலிப்பெட்டி ஒன்றினைப் பரிசாக அளித்து வருகிறது.

தூய்மையாகத் தெருக்களையும், கிராமத்தின் சுற்றுப்புறத்தையும் வைத்திருக்கும் ஆதிதிராவிடர் குடியிருப்புக்கு வானொலிப்பெட்டி ஒன்றினைப் பரிசாக அளித்து வருகிறது.

கலப்புத் திருமணம் செய்து கொள்ளும் தம்பதிகளுக்கு ஆதரவு அளிக்கும் வகையில் உதவித்தொகை அளிக்கிறது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சார்ந்த மக்கள் தங்களின் வாழ்க்கை மேம்பாட்டு நலனுக்காகத் தமிழக அரசு அளித்து வரும் பல்வேறு நலத்திட்டங்களையும் தக்கமுறையில் பயன்படுத்திக் கொண்டு வாழ்வில் உயர்வடைய வேண்டும்.

# குடிநீர்த் தட்டுப்பாட்டை நீக்க விரைவான பணிகள்

தமிழகத்தில் கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் பல மாவட்டங்களில் போதிய அளவு பருவமழை பெய்திருந்தாலும், 20 மாவட்டங்களில் தற்சமயம் குடிநீர்த் தட்டுப்பாடு நிலவுகிறது என்று தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் தலைவரும் நிர்வாக இயக்குநருமான திரு. லட்சுமிரதன் கூறினார்.

இந்தியாவில் குடிநீர்த் தட்டுப்பாட்டில் ராஜஸ்தான் மாநிலம் முதலிடம் வகிக்கிறது. அதற்கு அடுத்த படியாகத் தமிழகம் உள்ளது.

தமிழ்நாட்டில் மொத்தம் 64 ஆயிரத்து 83 குடியிருப்புகள் உள்ளன. இவைகளில் 77 குடியிருப்புகள் நீங்கலாக அனைத்துக் குடியிருப்புகளிலும் குறைந்தது ஒரு கைப்பம்பாவது போடப்பட்டுள்ளது.

கடந்த 20 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் கிராமப்புறக் குடிநீர்த் திட்டம் நன்கு செயல்பட்டு வருகிறது. 1976-லிருந்து எல்லாக் குடியிருப்புகளும் 6 வகையாகப் பிரிக்கப்பட்டுத்திட்டம் தீட்டிச் செயல்படுத்தப்படுகிறது.

தமிழகத்தில் தற்சமயம் நிலவும் குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்க மாநிலத்தில் 4,100 ஆழ்துளைக் கிணறுகள் மார்ச் மாதம் முதல் மே மாதம் இறுதிக்குள் தோண்டப்படும் என்றும், இந்த 4,100 ஆழ்துளைக் குழாய்க் கிணறுகளில் 2,500 கிணறுகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தாலும், மீதி பல்வேறு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலமும் செயல்படுத்தப்படும் என்றும் நிர்வாக இயக்குநர் அவர்கள் கூறினார்.

குடிநீர் ஆதாரமே இல்லாத குடியிருப்புகளுக்கு முன்னுரிமை கொடுத்து இந்த ஆழ்துளைக் குழாய்க் கிணறுகள் தோண்டப்படும்.

1989-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட, 'ஒவ்வொரு குடியிருப்புக்கும் குறைந்தது ஒரு குடிநீர் ஆதாரமாவது அளிக்கப்பட வேண்டுமென்ற, அரசுத் திட்டத்தின்கீழ், 10,246 ஆழ்துளைக் குழாய்க் கிணறுகள் சென்ற ஆண்டு மே மாத இறுதிக்குள் செயல்படுத்தப்பட்டது.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மேற்கொண்ட ஒரு ஆய்வின்போது, மாநிலத்தில் 5,885 குடியிருப்புகள் குடிநீர் ஆதாரமே இல்லாமல் இருப்பது கண்டறியப்பட்டது. இவற்றில் 1,800 குடியிருப்புகளுக்கு ஏற்கெனவே ஆழ்துளைக் குழாய்க் கிணறுகள் போடப்பட்டு விட்டன. மீதி 2,500 குடியிருப்புகளுக்கு மேமாத இறுதிக்குள்ளும் மற்றவை இந்த ஆண்டிற்குள்ளும் போடப்படும். சேலம், தருமபுரி ஆகிய இரு மாவட்டங்களும் வறட்சியால் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது.

**ஆழ்துளைக் குழாய்க் கிணறுகள் அமைக்கும் பணியின் முன்னேற்றம்**

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் ஆழ்துளைக் குழாய்க் கிணறுகள் அமைக்கும் பணியில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. 1981-82-இல் 15.2 சதவிகிதமாக இருந்த ஆழ்துளைக் குழாய்க் கிணறுகளின் குலைவு விகிதம் (Failure Rate) நடப்பு ஆண்டில் 3.3 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

குடிநீர் வடிகால் வாரியத்தின்

**லட்சுமி ரதன்**
**நிர்வாக இயக்குநர்**
**தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்**





நிலநீர்ப் பிரிவு (Hydro-Geological Wing) கடந்த 10 ஆண்டுகளாக விஞ்ஞான முறைப்படி இல்லாமல் ஆழ்துளைக் கிணறுகளைத் தோண்டியதால், அவ்வாறு தோண்டப்பட்ட ஆழ்துளைக் குழாய்க் கிணறுகளில் சில நாளடைவில் செயலற்றுப் போயின. தற்போது இந்தப் பிரிவு யுனிசெப் (UNICEF), டானிடா உதவியுடன் பெற்ற கம்ப்யூட்டர் மற்றும் நவீன விஞ்ஞானச் சாதனங்கள் உதவியுடன் மாவட்டந்தோறும் நீர்வளம் உள்ள பகுதிகளைப் பற்றிய தகவல்களைச் சேகரிக்கும் வகையில் முடுக்கிவிடப்பட்டுள்ளது. இத்தகைய விஞ்ஞான முறையில் தோண்டப்படும் ஆழ்துளைக் குழாய்க் கிணறுகள் பெரும்பாலும் நல்ல நிலையில் செயல்படுகின்றன.

தமிழ்நாடு, ஒரு சிக்கலான நில பௌதிகப் பாறைப் படிமங்களில் அமைந்துள்ளதால், குடிநீர் வழங்குவதில் சிக்கல்கள் ஏற்படுகிறது. நிலநீர் ஆதாரம் கண்டுபிடித்தல், சில நில பௌதிகப் பாறைகள் நீர் ஆதாரத்திற்கு ஏதுவாக இல்லாமல் இருக்கும் நிலை, நீர் ஆதாரம் கிடைக்கப் பெற்றாலும் அதன் கொள்ளளவைச் சரியான முறையில் கண்காணிக்க முடியாத நிலை போன்ற பிரச்சினைகள் உள்ளன. தற்போது 'டானிடா' அன்பளிப்பாக வழங்கிய கம்ப்யூட்டர் மற்றும் நவீன விஞ்ஞானச் சாதனங்கள் உதவியோடு நீர் ஆதாரங்களைக் கண்டுபிடிப்பதில் உள்ள குறைபாடுகள் அதிக அளவில் குறைக்கப்பட்டுள்ளன.

நடப்பு ஆண்டில், வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் செங்கை-அண்ணா, தென்னார்க்காடு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, பசும்பொன் தேவர் திருமகனார் மாவட்டங்களில் அமைக்கப்பட்டு வரும் ஆழ்துளைக் குழாய்க் கிணறுகளின் குலைவு விகிதம் (Failure Rate) அறவே இல்லை. சேலம், தருமபுரி, திண்டுக்கல்-காயிதே மில்லத், வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டங்களில் அமைந்துள்ள பாறைப் படிவங்கள் நிலநீர் ஆதாரத்துக்கு ஏதுவாக இல்லாது போயினும், இந்த மாவட்டங்களில் ஆழ்துளைக் குழாய்க் கிணறுகளின் குலைவு விகிதம் சராசரி 5 சதவிகிதமே ஆகும். இதுவும் இந்தப் பகுதிகளில் பாறைகளின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதாலும், கடந்த 10 ஆண்டுகளில் இந்த மாவட்டங்களில் பெய்த சராசரி மழையின் அளவு குறைந்து காணப்பட்டதலுமே ஆகும்.

கடலோரப் பகுதிகளில் உள்ள கிராமங்களுக்குக் குறைந்த ஆழம் உள்ள குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டு, 'யுனிசெப்' நிறுவனத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட ''தாரா'' கைப்பம்புகள் மூலம் குடிநீர் வசதி செய்யப்பட்டு வருகிறது.

## நில புவியியல் வரைபடங்கள்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், செயற்கைக் கோள் (Satellite) மற்றும் வானவெளிப் புகைப்படங்கள் உதவியுடன் வட்டார அளவிலான நிலபுவியியல் வரை படங்கள் தயாரிக்கும் பணியில் தற்சமயம் ஈடுபட்டிருக்கிறது. மொத்தமுள்ள 163 வட்டாரங்களில் 130 வட்டாரங்களுக்கான வரை படங்கள் தயாரிக்கப்பட்டு, அந்தந்தப் பகுதி உதவி நிலநீர் வல்லுநர்களின் ஆய்வுக்கு உதவும் பொருட்டு அனுப்பப்பட்டுள்ளது.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடம் தற்போது 71 துரப்பணக் கருவிகள் (Rigs) உள்ளன. இதில் 18 துரப்பணக் கருவிகள் படிவப் பாறைகளில் ஆழ்துளைக் குழாய்க் கிணறுகள் அமைக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

பொதுமக்கள் ஒத்துழைப்பு இருந்தால்தான், குடிநீர்த் திட்டங்களை நிறைவேற்ற முடியும். தனியார் இடங்களில் நீர் ஆதாரம் இருந்தால், அதைக் குடிநீர்த் திட்டத்திற்காகத் தானமாகக் கொடுத்து உதவ வேண்டும்.



# தோட்டக்கலையில் தமிழகம்

தமிழ்நாட்டில் வேளாண்மைத் துறையைப் போலவே தோட்டக் கலைத் துறையும் பல்வேறு வகை களில் முன்னேற்றம் அடைந்துள்ளது. தோட்டக்கலைத்துறை, வேளாண்மைத் துறையிலிருந்து 1979-ஆம் ஆண்டு தனியாகப் பிரிக்கப்பட்டு, தனித் துறையாகச் செயல்பட்டு வருகிறது. 1979-இல் 5 கோடி ரூபாயாக இருந்த இந்தத் துறையின் நிதி ஒதுக்கீடு 1991-இல் ரூ.10 கோடி யாக இரட்டிப்பாக உயர்ந்துள்ளது.

தோட்டக்கலைத் துறையின் தற்போதைய வளர்ச்சி குறித்து, இந்தத் துறையின் சென்னை மாவட்டத் துணை இயக்குநர் திரு.ஏ.நத்தர் பாவா அவர்களைச் சந்தித்தபோது கூறினார்—

''ஒருங்கிணைந்த தோட்டக்கலை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், தமிழ் நாட்டில் 1990-91-ஆம் ஆண்டில் 6,600 எக்டேர் நிலப்பரப்பில் நிரந் தரப் பயிர்கள், காய்கறிகள் சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, 6,600 எக்டேர் நிலப்பரப்புக்கும் பழவகை செடிகள், சான்று பெற்ற காய்கறி விதைகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

இவ்வாண்டு மார்ச் மாதம் முடிவதற்கு முன்பே இந்த இலக்கு நிறைவேற்றப்பட்டுச் சாதனை அடை யப்பட்டுள்ளது. சிறு, குறு விவசாயி களுக்கு இந்த விதைகள் 50 சத விகிதம் மானியம் விலையில் வழங் கப்பட்டுள்ளன. இந்தத் திட்டத் தினால் அனைத்து மாவட்டங்களும் பயன்பெறும்.

''இவைதவிர, குறிப்பிட்ட மாவட் டங்களுக்கு மட்டும் பயன்பெறும் வகையில் அந்த மாவட்டத்தின் சூழலுக்கேற்ப சிறப்புத் திட்டங்கள் வகுக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இந்தத் திட்டத்தின்கீழ், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம். மேற்குத்தொடர்ச்சிமலை வளர்ச்சித் திட்டம், ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டம், வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டம், முந்திரி வளர்ச்சித் திட்டம், தேசிய நீர்ப் பிடிப்புத் திட்டம், மகளிர் மேம்பாட்டுத் திட்டம் போன்ற பல திட்டங்கள் செயற் படுத்தப்பட்டு வருகின்றன. இதற் கான திட்ட மதிப்பீடு ரூ.5 கோடி யாகும்.

''தமிழ்நாட்டில் மொத்தம், 53 அரசு தோட்டக்கலைப் பண்ணைகள் உள்ளன. இவற்றிலிருந்து சுமார் 17.5 மில்லியன் செடிகள் உற்பத்தி செய்யப்பட்டு, விநியோகம் செய்யப் படுகிறது.''

**சென்னையில் தோட்டக்கலைக் கண்காட்சி**


தோட்டக்கலையில் பொதுமக் களிடம் பெரும் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தவும், தோட்டம் அமைப் பதை மக்களிடம் ஊக்குவிக்கவும் சென்னை தீவுத்திடலில் ஒவ்வொரு ஆண்டும் நடைபெறும் சுற்றுலாப் பொருட்காட்சியின்போது தோட்டக் கலைக் கண்காட்சியும் நடத்தப் படுவது வழக்கம். இந்த வரிசையில் 17-வது தோட்டக்கலைக் கண்காட் சியை, பிப்ரவரி மாதம் 23, 24 தேதிகளில் தோட்டக்கலைத்துறை, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

ஆகியவை இணைந்து நடத்தின. இந்த இரண்டு நாள் கண்காட்சியில் தோட்டக்கலைப் பொருட்கள், பழங்கள், காய்கறிகள், அலங்காரச் செடிகள் போன்றவை போட்டிக்காக வைக்கப்பட்டன. இவை தவிர, நன்கு பராமரிக்கப்பட்ட அலங்காரத் தோட்டம், வீட்டுத் தோட்டம், மாடித் தோட்டங்களுக்குப் பரிசுகளும் வழங்கப்பட்டது. இந்தப் பரிசுகளை மேதகு ஆளுநர் அவர்களின் ஆலோசகர் திரு. வே.கார்த்திகேயன் அவர்கள் 24.2.'91 அன்று வழங்கினார்.

தோட்டங்களுக்கான போட்டிகளுக்குச் சென்னை நகர மக்களிடமிருந்து நல்ல வரவேற்பு இருப்பதைக் காண முடிந்தது. தனியார் வீட்டுத் தோட்டப் பிரிவின் கீழ், தோட்டங்களுக்கான போட்டியில் இவ்வாண்டு 45 பேர்களுக்கு மேல் பங்கு கொண்டனர். 10 புதிய நிறுவனங்களும் இவ்வாண்டுப் போட்டியில் கலந்து கொண்டன.

தோட்டக்கலைக் கண்காட்சியில் இவ்வாண்டு 415 பேர் போட்டியில் கலந்து கொண்டனர். இது கடந்த ஆண்டைக் காட்டிலும் எண்ணிக்கையில் கூடுதலாகும்





இவ்வாண்டு தோட்டக்கலைக் கண்காட்சியின் சிறப்பு அம்சம், மிருதுவான விதை கொண்ட மாதுளம் பழவகைச் செடிகள், ரோஜாச் செடிகள் அதிக அளவில் கண்காட்சியில் இடம் பெற்றிருந்ததே, ஆகும்.

மராட்டிய மாநிலத்திலுள்ள ''கணேஷ்'' வகை மாதுளம் பழங்களை, தமிழ்நாட்டில் அதிக அளவில் பயிரிட விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் தோட்டக்கலைத் துறை தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது. இவ்வகை மாதுளம் பழங்கள் சுமார் 400 முதல் 700 கிராம் எடை கொண்டவை.

வீட்டைச் சுற்றிலும் தோட்டம் அமைப்பதை ஊக்குவிக்கும் வகையில், தோட்டக்கலைத்துறை ஒரு திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டத்தின்கீழ், 1990-91-ஆம் ஆண்டில் 17 ஆயிரம் பழங்கள்-பிற பொருளாதார வகைச் செடிகளும், 3 இலட்சம் காய்கறி நாற்றுகளும் விநியோகிக்கப்பட்டுள்ளன.

# நூல் நயம்

## இதய நோய் — மருத்துவம் தவிர்க்கும் முறை, பொது அறிவுரை

**ஆசிரியர்கள்: டாக்டர் எம். ஜெயராஜா**
**பி.எல். ராஜேந்திரன்**

**வெளியிட்டோர்:**

பூங்கொடி பதிப்பகம்,
14, சித்திரைக்குளம் மேற்குத் தெரு,
மயிலாப்பூர்
சென்னை-600 004.

விலை:ரூ.20 பக்கம்:116

**இ**துதான் நம் இதயம், இதயத்தில் தான் எத்தனை நோய்கள், எதையும் தாங்கும் இதயம், இதயத்தில் துவாரம் விழுதல், இதயத்தைப் பரிசோதிக்கும் கருவிகள், இதயத்திற்கு ஏற்ற உணவுப் பழக்க வழக்கங்கள், இதயமும் - குடி மற்றும் புகைப் பழக்கங்களும், இதய நோயும் இளமை உறவும், உயரமும் - எடையும் - இதயமும், மாரடைப்பு ஏற்படு வதற்கான வாய்ப்புகள், இதயநோய்க்கு அறுவைச் சிகிச்சை, தாயும் சேயும், இதயநோய்ச் சிகிச்சைக்கு அரசின் உதவிகள், சில பொதுவான அறிவுரைகள் ஆகிய அரிய மருத்துவக் கட்டுரைகளின் தொகுப்பே இந்த நூல்.

இதயநோய்க்கு ஆளானவர்கள் மட்டு மல்ல; மற்றவர்களும்கூட இதயத்தைப் பற்றி அவசியம் தெரிந்து கொள்ளத்தக்க அற்புதமான செய்திகள் - கவர்ச்சிகர மான அட்டையோடு உருவாக்கப்பட்டுள்ள இந்நூலில் எளிய தமிழில் தெரிவிக்கப் பட்டுள்ளன.

இதயம் பற்றிய இருவண்ண, மூவண்ணப் படங்களும் இதனுள் அடங் கும். மருத்துவம் பற்றித் தமிழில் ஏராள மான நூல்கள் வெளிவர வேண்டும்; அதற்கு இந்த நூல் ஒரு மிகச்சிறந்த எடுத்துக்காட்டு.

— 'இந்திரன்'

## வைகறைப் பொழுதின் வசந்தங்கள்

**ஆசிரியர்: வசந்தநாயகன்**

**வெளியீடு:**

இந்துமதி பப்ளிகேஷன்ஸ்,
5, கொசத் தெரு,
ஆலங்காயம்-635701
வடஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்டம்.

விலை:ரூ.16 பக்கம்:127

**பி**ச்சை எடுத்தல், கள்ளக் கடத்தல் போன்றவற்றின் கேடுகளையும், சிறு சேமிப்பு, மரம் வளர்த்தல், உழைப்பின் பெருமை, பெற்றோர் கடமை, தொழி லின் அருமை ஆகியவற்றின் சிறப்புகளை யும் இந்நூலில் உள்ள சிறுவர்கள் கதைகள் விளக்குகின்றன. கதையின் ஊடே பொன்மொழிகள் சேர்க்கப்பட்டி ருப்பது சிறப்பு. குழந்தைகள் மனத்தைப் பண்படுத்த உதவும் தொகுப்பு.

—என்.குமாரசாமி

## தொடர்கின்ற பயணம்

**ஆசிரியர்: தி.தயானந்தன் பிரான்சிஸ்**

**வெளியீடு:**

கிறிஸ்தவ இலக்கிய சங்கம்,
அஞ்சல் பெட்டி எண்.501
பூங்கா நகர், சென்னை-600 003.

விலை:ரூ.40 பக்கம்:190

**கி**றிஸ்தவத் தமிழ்க் காவலர் அருட்திரு டாக்டர் தி.தயானந்தன் பிரான்சிஸ் அவர்கள் எழுதிய இந்த நூல், அன் னாரது நாற்பதாண்டுக் கால இலக்கிய வாழ்வினைப் படம்பிடித்துக் காட்டு கின்றது.

தம் பிறப்பிலிருந்து தொடரும் இந்தக் கட்டுரை, பள்ளி-கல்லூரி வாழ்க்கை, இறையியல் பணி, இலக்கியப் பணி என்னும் இலட்சியப் பயணத்தைக் கோடிட்டுக் காட்டுகின்றது.

ஒருவருடைய வாழ்க்கை முன்னேற்றம், அவரது பெற்றோரைப் பொறுத்தே அமைகிறது எனலாம். ''என்னுடைய வாழ்க்கையில் என்னைப் பெரிதும் கவர்ந்த ஒருவர் என்றும், எனக்குச் சிறந்த முன்மாதிரியானவர் என்றும் நான் சொல்லத் தகுந்தவர். என்னுடைய தகப்ப னார்தான்'' என்று பெருமிதத்தோடு கூறும் இவர், ''என்னுடைய முதல் இறையியல் ஆசிரியர், என்னுடைய தாயார்தான்'' என்றும் குறிப்பிட்டு பெற்றோரை நினைவுகூர்கிறார்.

''உள்ளம் பிரியப்படுகிற வேளை களில்தான் உண்மைப் பொருள் வாய்ந்த சொற்களின் துணை கவிஞர்களுக்குக் கிடைக்கின்றது''.

''எழுதப்படும் குழுவில் ஒரு குறிப் பிட்ட வாசகர் கூட்டத்திற்காக மட்டு மல்லாமல் எவருக்கும் பயன்படும் வகையில் கட்டுரைகள் வடித்துத் தரப்பட வேண்டும்''.

''ஒரு நூலை எழுதிவிடுவதோடு பணி முடிவடையாது. அதை வெளியிட்டு விற்பனை செய்தானதும் பணி முடிந்து விடுவதாகவும் கருதமுடியாது. எப்போது அந்த நூலின் பிரதிகள் வாசிக்கப்படுகின் றனவோ அப்போது மட்டுமே அது முழுமை பெற்ற நூலாக முடியும்''.

—இவ்வாறு தம் அனுபவங்களை ஆங்காங்கே பிழிந்து தருகிறார் ஆசிரியர்.

இளைய தலைமுறை முன்னேற ஒரு தூண்டுகோலாகவும், பெரியவர்கள் படித்து ஒரு படைப்பாளியின் பண்பட்ட அனுபவத்தைப் பகிர்ந்து கொள்ளவும் இந்நூல், இலக்கியத் தூதுவனாக விளங்கு கிறது என்று சொன்னால், அது மிகை யல்ல!

## பாரதியார் எழுத்துக்கள் சில புதிய கண்டுபிடிப்புகள்

**ஆசிரியர்: பெ.சு.மணி**

**வெளியீடு:**

பூங்கொடி பதிப்பகம்,
14, சித்திரைக் குளம்
மேற்கு வீதி,
சென்னை-600 004.

விலை:ரூ.11 பக்கம்:119

**பா**ட்டுக்கொரு புலவன் பாரதியின் படைப்புகளைப் படித்து வரும் நமக்கு, அவர் எழுதி இதுவரை வெளிவராத படைப்புகள் சில இந்நூலில் சேர்க்கப் பட்டுள்ளன. 'சக்ரவர்த்தினி'யில் வெளி வராத பாரதியாரின் எழுத்துக்கள் இந் நூலில் முதன் முறையாக இடம் பெற் றுள்ளன.

'துளஸீபாய்' சிறுகதையின் முதல் அத்தியாயம் இந்நூலில் முதன் முறை யாகச் சேர்க்கப்பட்டுள்ளது. 'பால பாரதா' இதழில் எழுதிய பாரதியின் கட்டுரைகள் சிலவும் இதில் சேர்க்கப் பட்டுள்ளன, முதல் தடவையாக.

மகாகவி பாரதியின் தமிழ்ச் செல்வங் களைத் தேடிப் பிடித்துக் கொண்டு வந்து சேர்க்கும் புனிதப் பணியில் ஈடுபட்டிருக் கும் திரு.பெ.சு.மணி பாராட்டுக்குரியவர்.

## இனிக்கும் விஞ்ஞான அமுதம்

**ஆசிரியர்: புலவர் க. அண்ணாமலை**

**வெளியீடு:**

பம்மி பதிப்பகம்
32, வெங்கட்டரங்கம்
பிள்ளைத் தெரு,
சென்னை-600 005.

விலை:ரூ.30 பக்கம்:240

**வி**ஞ்ஞான அமுதங்களாக, விஞ்ஞானி களின் வாழ்க்கைக் குறிப்புகள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

டார்வின் முதல் ஹிப்போ கிரட்டிஸ் வரை பன்னிரண்டு அறிவியல் அறிஞர் களின் வாழ்க்கை நிகழ்ச்சிகளை உரை யாடல் வடிவில் சுவைபட எழுதியுள்ளார் ஆசிரியர்.

அத்துடன், பழங்களின் பயன்கள் குறித்தும் கட்டுரைகள் உள்ளன. படித்துப் பயன்பெறத்தக்க நூல்.

—பி.வி.ஜி.



# சமத்துவத்தின் விடிவெள்ளி

**இளங்கோ:** கோடானுகோடி மக்களின் இதயத்திலே கொலுவிருந்தவர்; தாழ்த்தப்பட்ட மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கியவர் அண்ணல் அம்பேத்கர்.

**மாதவி:** அண்ணல் அம்பேத்கர், மகாராஷ்டிர மாநிலம் ரத்னகிரி மாவட்டத்தில் உள்ள அம்பா-வாடே என்னும் கிராமத்தில் 14.4.1891-இல் பிறந்தார்.

**இளங்கோ:** அப்புறமென்ன? அம்பேத்கரை ஏற்றியதால், வண்டி தீட்டுப்பட்டு விட்டதாக எண்ணி, மாட்டை அவிழ்த்து விட்டான். வண்டியைத் தலைகீழாகக் கவிழ்த் தான். பாவம் அம்பேத்கர்! சாலை ஓரத்தில் போய் விழுந்தார்.

**மாதவி:** காட்டுமிராண்டித்தனமா இருக்கே. இப்படியும் ஒரு கொடுமையா?

**இளங்கோ:** இன்னும் கேள். ஒருநாள், முடிவெட்டிக் கொள்வதற்காக அம்பேத்கர் சென்றிருந்தார். அவர் தாழ்த்தப்பட்டவர் என்பதை அறிந்த முடிதிருத்துபவர், அவருக்கு முடிவெட்ட மறுத்து விட்டார்.

**மாதவி:** கேட்கவே சகிக்கவில்லை. பிறப்பால் அனை வரும் ஒன்றுதான். இதில் உயர்வுதாழ்வு என்ன வேண்டிக் கிடக்கிறது.

**இளமையில் ஏற்பட்ட இன்னல்கள் - அவமானங்கள் அந்த இளைஞரை உறுத்திக் கொண்டே இருந்தன. அதுவே, பிற் காலத்தில் அவர் எழுச்சி பெறவும், எண்ணற்ற மக்கள் மனத்திலே இடம் பெறவும் வழி வகுத்தது. 'விழி நீரைத் துடைத்து வீறு கொண்டெழுங்கள்! என்று வீரமுழக்கமிட்ட வேழம்தான் அண்ணல் அம்பேத்கர். அவரது வீரவரலாற்றைச் சித்திரிக்கிறது, இந்தச் சித்திரம்- உரையாடல்...**

**இளங்கோ:** தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த அவர், பள்ளி வாழ்க்கையிலும், பொது வாழ்க்கையிலும் அவர் பல இன்னல்களை அனுபவித்தார். பல கொடுமைகளுக்கு உள்ளானார்.

**மாதவி:** ஆம். அவர் இளைஞராய் இருந்தபோது, ஒரு துயர நிகழ்ச்சி நடந்தது. கடும் வெய்யில். தாக மேலீட்டால், தெருக்குழாயில் போய்த் தண்ணீர் குடித்தார். அதைக் கண்ட மற்றவர்கள் ஓடி வந்து அவரை இழுத்து அடித் தார்கள்.

**இளங்கோ:** ''தீண்டத்தகாதவன் தானே நீ, எப்படி யாரையும் கேக்காம தெருக் குழாயிலே தண்ணியைக் குடிக்கலாம்?'' என்று திட்டினார்கள். ஒரு சமயம் அம்பேத்கர், மாட்டு வண்டியில் பிரயாணம் செய்து கொண்டிருந்தார். பிறகுதான் தெரிந்தது வண்டிக்கார னுக்கு, அவர் தீண்டத்தகாதவர் என்று...

**மாதவி:** அப்புறம்?

**இளங்கோ:** பள்ளிக்கூடத்தில்கூட அவரைச் சக மாணவர்கள் தள்ளியே வைத்தார்கள். அவர்கள் யாரும் அவரிடம் பேச மறுத்தார்கள். இந்த விஷயத்தில் மட்டும் அந்த மாணவர்கள் ஒற்றுமையாக இருந்தார்கள்.

**மாதவி:** பிஞ்சு மனத்தில் நஞ்சா? கொடுமையாக இருக் கிறதே...

**இளங்கோ:** ஆம். அந்தக் காலச் சூழ்நிலை அப்படி. தாகம் எடுத்தால்கூட, சிறுவனான அம்பேத்கர், தானாகப் போய், தண்ணீர் எடுத்துக் குடிக்க முடியாது. உயர் சாதிப் பிள்ளைகள்தான், அவரை வாயைத் திறக்கச் சொல்லி ஊற்றுவார்கள்...

**மாதவி:** பாவம்! அம்பேத்கர். சின்னஞ்சிறு வயதிலேயே எத்தனைக் கொடுமைகளை அவர் அனுபவித்திருக்கிறார்...

பி.வி.கிரி

**இளங்கோ:** இந்த நிகழ்ச்சிகளையெல்லாம் இறுதி வரை அவர் நெஞ்சம் மறக்கவில்லை. பிற்காலத்தில் தாழ்த்தப் பட்டவர்களை- தீண்டத்தகாதவர்கள் என்று சமுதாயத் தால் ஒதுக்கப்பட்டவர்களை- 'தாழ்ந்த சாதி' என்று உயர் சாதிக்காரர்களால் திருநாமம் சூட்டப்பட்டவர்களைக் கை தூக்கி விடுவதற்கு, இளமைக்கால அந்த நிகழ்ச்சிகள் உரமாக விளங்கின.

**மாதவி:** அம்பேத்கரின் இயற்பெயர் பீமாராவ் இராம்ஜி என்று படித்திருக்கிறேன். அப்படியானால், அம்பேத்கர் என்ற பெயர் எப்படி வந்தது?

**இளங்கோ:** அப்படிக் கேள் மாதவி. அம்பேத்கர் பள்ளி யில் படித்துக் கொண்டிருந்தபோது, அம்பேத்கர் என்னும் பெயருடைய ஆசிரியர் ஒருவர் அந்தப் பள்ளியில் இருந்தார். உயர் சாதியைச் சேர்ந்த அம்பேத்கர் என்ற அந்த ஆசிரியர், அம்பேத்கரிடம் அன்பும் பாசமும் வைத்திருந்தார். பள்ளியில் எல்லாரும் ஒதுக்கித் தள்ளிய நிலையிலும், அவர் ஒருவர் மட்டும் அவரிடம் உண்மை யான அன்பு செலுத்தி ஆதரவு தந்தார்.

**மாதவி:** சிறுவன் அம்பேத்கருக்கு, அந்த ஆசிரியர் தெய்வமாகவே தென்பட்டிருப்பார் இல்லையா?

**இளங்கோ:** ஆம். எழுத்தறிவித்தவன் இறைவனல்லவா? சிறிய வயதில் ஆசிரியர் அம்பேத்கரிடம் காட்டிய பரி வுக்கும் பாசத்துக்கும் நன்றிக் கடனாக, அவரது பெய ரையே வைத்துக் கொண்டார் பீமாராவ் இராம்ஜி. அந்தப் பெயரே பின்னால் விலகி அம்பேத்கர் என்றாகியது.


**மாதவி:** அம்பேத்கரின் குருபக்தியை எவ்வளவு பாராட்டி னாலும் தகும்.

**இளங்கோ:** அம்பேத்கர் பம்பாயிலும், பிறகு அமெரிக்கா விலும் உயர்கல்வி பயின்றார். பொருளியலில் டாக்டர் பட்டமும் பெற்றார். 1916-இல் தாயகம் திரும்பிய அவர், பிறகு இங்கிலாந்து சென்று பாரிஸ்டர் பட்டம் பெற்றார். பம்பாய் உயர்நீதி மன்றத்தில், வழக்கறிஞராகவும் பணி புரிந்தார்.

**மாதவி:** அம்பேத்கர், இளமைக் காலத்தில் தமக்கு ஏற் பட்ட அவமானங்களைத் தாங்கிக் கொண்டார். இன்னல் களை இன்முகத்துடன் ஏற்றுக் கொண்டார். எல்லா வற்றுக்கும் மேலாக, மனம் தளராமல் உழைத்தார். அதனால் அவர் மேலும் மேலும் உயர்ந்தார்.

**இளங்கோ:** 1924-ஆம் ஆண்டு அம்பேத்கர் வழக்கறிஞ ராக இருந்தபோதே, அரசியலிலும் ஈடுபட்டார். சமூகத் தொண்டிலும் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். தீண்டாமைக் கொடுமையெனும் மனிதாபிமானமற்ற செயலை வன்மை யாகக் கண்டித்தார்.

**மாதவி:** ஆமாம். 1925-லிருந்து 1930 வரை பம்பாயில் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக நான்கு விடுதிகளை அமைத் தவர். தீண்டாமைக் கொடுமைக்கு அடிப்படையாக இருந்த, பழமை வாதத்தை எதிர்த்து மூலை முடுக்கு களிலெல்லாம் பிரச்சாரம் செய்தார். பத்திரிகைகளில் எழுதினார்.



**இளங்கோ:** பத்திரிகைகளில் எழுதியது மட்டுமல்ல, 'ஜனதா' என்னும் பெயரில், தாமே ஒரு பத்திரிகையை யும் நடத்தினார்.

**மாதவி:** 1930-இல் நாசிக்கில், தீண்டப்படாதவர்களின் ஆலய நுழைவுப் போராட்டத்தையும் முன்னின்று நடத் தினார். இல்லையா?

**இளங்கோ:** ஆமாம். இந்தச் சமுதாயப் பணிகளுக்கெல் லாம் பக்கபலமாக இருந்தது யார் தெரியுமா? அம்பேத்கரின் துணைவியார்தான். அம்பேத்கர் படிப்புக்கும், சமுதாயத் தொண்டுக்கும் எந்த வகையிலும் இடையூறாக இல்லாமல் அவர் பார்த்துக் கொண்டார்.

**மாதவி:** 1905-ஆம் ஆண்டில் அம்பேத்கருக்குத் திருமணம் நடந்தது. மனைவி பெயர் ரமாபாய். அப்போது அம்பேத்கருக்கு வயது பதினான்கு!

**இளங்கோ:** அம்பேத்கர் பரோடா சமஸ்தானத்தில் பொறுப்புமிக்க பதவியில் அமர்த்தப்பட்டார்.

**மாதவி:** அப்படியா?

**இளங்கோ:** ஆமாம். பரோடா மன்னர் அம்பேத்கரின் அறிவிலும் ஆற்றலிலும் நம்பிக்கை வைத்திருந்தார். தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த ஒருவருக்கு உயர் பதவி வழங்க வேண்டும் என்பது அவரது ஆசை. அந்த ஆசையை அம்பேத்கரை நியமிப்பதன் மூலம் மன்னர் நிறைவேற்றிக் கொண்டார். ஆம். அம்பேத்கர் இராணு வச் செயலாளராகப் பதவியில் அமர்த்தப்பட்டார்.

**மாதவி:** அங்கேயும் அவருக்குத் தொல்லைகள் ஏற்பட்டி ருக்குமே!

**இளங்கோ:** ஆமாம். பரோடா சமஸ்தானத்திலும் தீண் டாமைத் தொல்லைகள் மிகுந்திருந்தன. அவற்றைக் களைய அவர் அரும்பாடுபட வேண்டியதாயிற்று.

**மாதவி:** பிறகு பரோடாவை விட்டு பம்பாய் வந்தார் அம்பேத்கர். வாழ்க்கைச் சூழலில் சிக்கித் தவித்தார். நிலையான வேலை, போதுமான வருவாய் இல்லாமல் கஷ்டப்பட்டார். கடைசியாக, ஒரு கல்லூரியில் பேராசிரியர் வேலை கிடைத்தது. அதை மனமுவந்து ஏற்றுக் கொண்டார்.

**இளங்கோ:** கோல்காபூர் என்பது ஒரு சமஸ்தானம். அதன் மன்னர் ஒரு சீர்திருத்தவாதி. தாழ்த்தப்பட்டவர்மீது அனுதாபம் உள்ளவர். தமது சமஸ்தானத்தில் அவர் களுக்கு உயர் பதவிகளையும் கொடுத்து வந்தவர்.

**மாதவி:** அதுமட்டுமல்ல, தீண்டாமை ஒழிப்பு மாநாடு களையும் அவர் நடத்தி வந்தார். அம்பேத்கருக்கு அந்த மன்னரின் நட்பு கிடைத்தது. மன்னரின் உதவியுடன் அவர் ஒரு பத்திரிகையையும் தொடங்கினார். அதுதான், 'ஊமைகளின் தலைவன்' என்பதாகும்.

**இளங்கோ:** மன்னர் நடத்திய தீண்டாமை ஒழிப்பு மாநாடு களில் அம்பேத்கர் கலந்து கொண்டார். தீண்டாமை ஒழிப்பின் அவசியத்தையும் அவசரத்தையும் வலியுறுத்தி னார். அவர் பேச்சைக் கேட்டு, கோல்காபூர் மன்னர், அம்பேத்கரை வானளாவப் புகழ்ந்தார்.

**மாதவி:** அதுமுதல் "அம்பேத்கர் தாழ்த்தப்பட்ட மக்க ளின் விடுதலை வீரர்" என எல்லோராலும் அழைக்கப் பட்டார்.

> "எல்லாச் சமூகங்களும் சில பயனற்ற விஷமத்தனமான பழக்க மூட்டைகளைச் சுமந்து கொண்டுதான் இருக்கின்றன. ஆனால், அறிவு விளக்கம் பெற்ற சமூகங்கள் தமது பழக்க வழக்கங்களை ஆராய்ந்து, நல்லவைகளை ஒப்புக் கொண்டு, தீயவைகளை நிராகரித்து, முன்னேற முயல்கின்றன."
>
> —டாக்டர் அம்பேத்கர்

**இளங்கோ:** விடுதலைப் போராட்டம் கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்த நேரம், ஆனால், அம்பேத்கரின் கவனமோ, தாழ்த்தப்பட்ட மக்களின் விடுதலை ஒன்றி லேயே இருந்தது. அவர்களுக்கென்றே ஒரு சபாவைத் தொடங்கினார். அங்கு மாணவர்களுக்காக ஒரு விடுதியை யும் அமைத்தார். அந்த ஏழை-எளிய-தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு உணவும் உடையும் இலவசமாகவே வழங்கப்பட்டன. புத்தகங்கள் வாங்குவதற்குக்கூட உதவி செய்யப்பட்டது.

**மாதவி:** இந்தச் சபாவில், ஓர் அறிவு வளர்ச்சி மன்றமும் கூடத் தொடங்கப்பட்டது. அறிவை வளர்க்க, தொண்டு மனப்பான்மையை உருவாக்க இது பெரிதும் உதவியது.

**இளங்கோ:** அம்பேத்கர், கிராமங்கள்தோறும் சென்றார். பட்டி தொட்டிகளிலெல்லாம் அவர் பாதங்கள் பட்டன. அங்குள்ள தாழ்த்தப்பட்ட மக்களைச் சந்தித்துப் பேசினார். அடிமை வாழ்வு அகல அறிவுரைகள் கூறினார். "பொறுத்தது போதும்,! பொங்கியெழு!" என்று முழங்கினார். அதைக் கேட்ட மக்கள் தன்மான உணர்வு கொண்டு எழுந்தனர்.

**மாதவி:** 'தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்களை இராணுவத்தில் சேர்க்கக் கூடாது' என்று வெள்ளை யர்கள் அறிக்கை ஒன்றை வெளியிட்டார்கள். அதனால் ஆயிரக்கணக்கான தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வேலை வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. அதைக்கண்டு வெகுண்டெழுந்தார் அம்பேத்கர். வெள்ளையரின் அறிக் கைக்கு எதிராகக் கிளர்ச்சி செய்யும்படிக் கூறினார்.

**இளங்கோ:** காலம் ஓடியது... சொல்வன்மையும், செயல்திறனும் கொண்ட அம்பேத்கருக்குச் சிறப்புச் செய்யத் தீர்மானித்தது பம்பாய் அரசு. அதன்படி அம்பேத்கர் பம்பாய் சட்டமன்ற மேலவை உறுப்பினராக நியமிக்கப் பட்டார்.

**மாதவி:** இந்தச் செய்தி, தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தேனாக இனித்தது. அவருக்குப் பாராட்டுக் கூட்டத்தை ஏற்பாடு செய்தார்கள். அந்தக் கூட்டத்தில் அவருக்குப் பண முடிப்பும் வழங்கினார்கள்.

**இளங்கோ:** பாராட்டுக்கு நன்றி தெரிவித்துப் பேசிய அம்பேத்கர், தமக்கு அளிக்கப்பட்ட பணமுடிப்பை, தாம் தொடங்கிய சபாவுக்கே நன்கொடையாக வழங்கி விட்டாராம்.

பம்பாய் மாநிலத்தில் மாகாத் என்று ஒரு நகரசபை இருந்தது. அந்த நகர சபை ஓர் அறிவிப்பை வெளியிட்டி ருந்தது. அதன்படி, அவ்வூரில் இருந்த குளம் எல்லாருக் கும் பொதுவானது என்று குறிப்பிட்டிருந்தது. ஆனால் அந்தக் குளத்தில் தாழ்த்தப்பட்டவர்கள் தண்ணீர் எடுக்க உயர் சாதிக்காரர்கள் அனுமதிக்கவில்லை.

இதைக்கண்ட அம்பேத்கர் மனம் கொதித்தார். 1927-ஆம் ஆண்டில், மாகாத்தில் 'தாழ்த்தப்பட்டோர் மாநாடு' ஒன்று நடந்தது. அது 'மாகாத் மாநாடு' என்று அழைக்கப்பட்டது.

**மாதவி:** ஆயிரக்கணக்கான மக்கள் கூடியிருந்த அந்த மாபெரும் மாநாட்டில் அம்பேத்கர் வீர முழக்கம் செய்தார். தன்மானம் பெறுவோம் என்றும், கல்வி, வேலை வாய்ப்புப் பெற உழைப்போம் என்றும் அறிவுரை கூறினார். தூங்கிக்கிடந்த அந்த மக்களைத் தட்டி எழுப் பினார்.

**இளங்கோ:** ஊர்ப் பொதுக் குளத்தில், தாழ்த்தப்பட்ட வர்க்கும் தண்ணீர் எடுக்க உரிமை உண்டு என்று முழங்கி, மாபெரும் பேரணிக்கும் ஏற்பாடு செய்தார்.

**மாதவி:** ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்ட அந்தப் பேரணி, மாநாடு நடந்த மாகாத்திலிருந்து புறப்பட்டது. தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமை முழக் கங்கள் வானைப் பிளந்தன. உயர் சாதிக்காரர்கள் வீட்டுக்குள்ளே ஒளிந்துகொண்டு வேடிக்கைப்பார்த்தனர்.

**இளங்கோ:** பேரணி, முக்கிய வீதிகளின் வழியாகச் சென்று, இறுதியில் அந்த ஊர்ப் பொதுக் குளத்தை அடைந்தது. மக்கள் வெள்ளமோ குளக்கரையில் நின்று கொண்டிருந்தது. அம்பேத்கர் வீறுநடை போட்டுக் குளத்தில் இறங்கினார். தண்ணீரை இரு கைகளாலும் அள்ளி அள்ளிக் குடித்தார். கூடியிருந்த மக்கள் கர வொலி எழுப்பி, தம் மகிழ்ச்சியைத் தெரிவித்தார்கள். அது மட்டுமல்ல, வந்திருந்த மக்களும் குளத்தில் இறங்கி தண்ணீர் எடுத்துக் குடித்தார்கள்.

**மாதவி:** ஆண்டவன் சந்நிதி முன் அனைவரும் சமம் என்பது உலகக் கோட்பாடு. ஆனால், தாழ்த்தப்பட்ட வர்களை ஆலயத்திற்குள்ளும் அனுமதிக்கவில்லை அக் கால 'மகா புருஷர்கள்'

**இளங்கோ:** ஆம். அந்த அவல நிலை அகலவும் அரும் பாடுபட்டார் அம்பேத்கர்.

**மாதவி:** தாழ்த்தப்பட்ட மக்களின் நிலையை உயர்த்தவும், அந்த மக்களின் உரிமைகளை நிறைவேற்றவும் ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்ளும் காலமும் வந்தது. அதுதான் 'சைமன் குழு' இந்தியாவுக்கு வந்த நேரம். இங்கிலாந்து பாராளுமன்றத்தால் அமைக்கப்பட்ட அந்தக் குழுவின் தலைவர்தான் சர். ஜான் சைமன் என்ற ஆங்கிலேயர்.

**இளங்கோ:** அந்தக் குழுவிற்கு உதவி செய்ய பிரிட்டிஷ் அரசு இந்தியக் குழு ஒன்றை அமைத்தது. அதில் அம்பேத் கரும் இடம் பெற்றார். ஆனால் மக்கள் அதை விரும்ப வில்லை. அவருக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தனர். வெள்ளையருக்குத் துணை போவதா என்று கண்டித்தனர்.

**மாதவி:** அம்பேத்கர் எதற்கும் அஞ்சவில்லை, அவரது எண்ணமெல்லாம் அடித்தளத்தில் இருந்த மக்களை மேலே கொண்டு வருவதிலேயே இருந்தது. அந்த ஒரே நோக்கத்திற்காகத்தான் அவர் அந்தக் குழுவில் இருக்கச் சம்மதம் தெரிவித்தார். இதை மற்றவர்கள் தவறாகப் புரிந்து கொண்டார்கள்.

**இளங்கோ:** தாழ்த்தப்பட்ட மக்களின் சார்பில் அவர்களது நிலையை எடுத்துக் கூறினார் அம்பேத்கர். வாக்குரிமை, கல்வி, வேலைவாய்ப்பு, அரசுப் பணி ஏன் அமைச்சர் பதவியும் வழங்க வேண்டும் என்று வலியுறுத்தினார். இப்படி, கிடைக்கிற வாய்ப்புகளை அவர்தம் இன மக் களுக்காகப் பயன்படுத்திக் கொண்டார்.

**மாதவி:** 1928-ஆம் ஆண்டு அம்பேத்கர், தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கான இரண்டு இல்லங்களைத் தொடங்

அம்பேத்கர் ...



★ ஆயிரமாயிரம் ஆண்டு அடிமைகளாகத் தன்மானத்தை இழந்து இருப்பதைக் காட்டிலும், அரைநிமிடம் வாழ்வாங்கு வாழ்ந்து அமரராவது சாலச் சிறந்ததாகும்!

கினார். தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கான கல்விச் சங்கம் ஒன்றையும் அமைத்தார். பிறகு ஐந்து மாணவர் இல்லங்கள் திறக்கவும் ஏற்பாடுகள் செய்தார். இதற்கு அரசும் உதவி செய்தது.

**இளங்கோ:** இந்திய விடுதலைப் போராட்டம் வலுவடைந்த நேரம். அதுகண்டு வெள்ளையர் ஆட்சி வெகுண்டது. இதற்கு ஏதாவது பரிகாரம் செய்ய வேண்டும் என்று கருதியது. அதன் விளைவாக நடந்ததே வட்ட மேசை மாநாடு. இலண்டனில் நடந்த இம்மாநாட்டில் அம்பேத்கரும் கலந்து கொண்டார். அவரது பேச்சைப் பல அறிஞர்களும் பாராட்டினார்கள்.

**மாதவி:** வட்டமேசை மாநாட்டில் கலந்து கொண்டு விட்டுத் தாயகம் திரும்பினார் அம்பேத்கர். அப்போது தான் அண்ணல் காந்தியடிகளை அவர் சந்தித்தார்.

**இளங்கோ:** அம்பேத்கர் ஓயாமல் உழைத்து வந்ததால், உடலில் தளர்ச்சி ஏற்பட்டது. ஆனால், உள்ளத்திலோ தளர்ச்சி என்பது சிறிதும் இல்லை. இந்த நிலையில், அதாவது 1935-இல், அவரது அருமைத் துணைவியார் ராமாபாய் காலமானார். மனைவியை இழந்த துயரம் அவரைப் பெரிதும் வாட்டியது.

**மாதவி:** மனைவி மறைவுக்குப் பிறகு அம்பேத்கர் ஒரு துறவியைப் போலவே காட்சியளித்தார். தலையை மழித்துக் கொண்டு, மஞ்சள் நிற அங்கியை அணிந்து கொண்டார்.

**இளங்கோ:** 1942-ஆம் ஆண்டில், வைசிராய் தமது நிர்வாகச் சபையின் உறுப்பினராக அம்பேத்கரை நியமித்தார். அந்தச் சபையில், சர். சி.பி. ராமசாமி ஐயர், சர். முகம்மது உஸ்மான், சர். சேம சுந்தரசிங் போன்றவர்கள் உறுப்பினர்களாக இருந்தார்கள். தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஒருவருக்கு இந்த உயர் பதவி அளிக்கப்பட்டது பெருமைப்படத்தக்க விஷயமாகும்.

**மாதவி:** அம்பேத்கர் நாக்பூரில் இருந்தபோது, அவருக்கு ஒரு இனிப்பான செய்தி ஒன்று வந்தது. அதுதான், அவர் தொழில் அமைச்சராக நியமிக்கப்பட்ட செய்தி.

**இளங்கோ:** 1945-இல், அரசியல் நிர்ணய சபை அமைக்கப்பட்டது. அதில் பல துறை அறிஞர்களும் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அவர்களில் டாக்டர் அம்பேத்கரும் ஒருவர்.

**மாதவி:** 1946-இல், இடைக்கால அரசு அமைக்கப்பட்டது. பண்டித நேரு, வல்லபாய் பட்டேல், மூதறிஞர் ராஜாஜி, அபுல்கலாம் ஆசாத், பாபு ஜெகஜீவன்ராம் முதலானோர் அமைச்சர்களானார்கள். அரசியல் நிர்ணய சபையின் தலைவராக டாக்டர் ராஜேந்திர பிரசாத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**இளங்கோ:** பிறகு நடந்த அரசியல் நிர்ணய சபைக் கூட்டத்தில் பண்டித நேரு இந்திய விடுதலை குறித்துப் பேசினார். அதே கூட்டத்தில் டாக்டர் அம்பேத்கரும் உரையாற்றினார். அவரது உரை அறிஞர் பெருமக்களால் பாராட்டிப்பட்டது.

**மாதவி:** 1947 ஏப்ரல் மாதம் நடந்த அரசியல் நிர்ணய சபைக் கூட்டத்தில், 'தீண்டாமை ஒரு குற்றம்' என்று தீர்மானிக்கப்பட்டது. அதுவே டாக்டர் அம்பேத்கருக்குக் கிடைத்த மாபெரும் வெற்றியாகக் கருதப்பட்டது.

**இளங்கோ:** 1947-ஆம் ஆண்டு, ஆகஸ்டு பதினைந்தாம் நாள் இந்தியா சுதந்திரம் பெற்றது. சுதந்திர இந்தியாவின் முதல் பிரதம மந்திரியானார் பண்டித ஜவகர்லால் நேரு. டாக்டர் அம்பேத்கர் சட்டத்துறை அமைச்சரானார்.

**மாதவி:** 1947-ஆம் ஆண்டு, 29-ஆம் நாள் அரசியல் நிர்ணய சபை கூடியது. அந்தக் கூட்டத்தில்தான், வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு முடிவு மேற்கொள்ளப்பட்டது. அதன்படி அரசியல் சட்டத்தை இயற்ற 'வரைவுக் குழு' ஒன்று அமைக்கப்பட்டது.

**இளங்கோ:** டாக்டர் அம்பேத்கர் அந்தக் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டார். அரசியல் சட்டத்தை வரைய அல்லும் பகலும் உழைத்தார். அவர் யாருடைய உதவியும் இன்றி, ஒருவராகவே இருந்து, ஆறுமாதக் காலத்தில் அரசியல் சட்டத்தை வரைந்து கொடுத்தார். அவரை நாடே போற்றியது, புகழ்ந்தது, பாராட்டியது.

**மாதவி:** டாக்டர் அம்பேத்கரின் சிந்தனை, செயல்-பேச்சு, மூச்சு எல்லாம் தாழ்த்தப்பட்ட மக்களைப் பற்றியதாகவே இருந்தது. அதற்காக அவர் நேரம் காலம் பாராது உழைத்தார். கடுமையாக உழைத்தார். அதன் விளைவு-உடல் சோர்ந்தார்.

**இளங்கோ:** ஆம். தாழ்த்தப்பட்ட மக்களின் இருண்ட வாழ்வில் ஒளியேற்றி வைத்த டாக்டர் அம்பேத்கர் 1956-ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம் ஆறாந் தேதி மறைந்தார். இந்த நாடே கண்ணீர் விட்டு அழுதது; மனம் கலங்கியது. மாபெரும் தலைவரை இழந்து துக்கக் கடலில் ஆழ்ந்தது.

**மாதவி:** டாக்டர் அம்பேத்கர் மிகச் சிறந்த மனிதாபிமானியாக- மனித நேயம் மிக்கவராக விளங்கினார். அவர் வழக்கறிஞராக இருந்தபோது, ஏழை மக்களுக்காக வாதாடினார். இலவசச் சட்ட உதவி வழங்கினார்.

**இளங்கோ:** சாதிக் கொடுமைகள் களைந்திட, தீண்டாமைத் தீமை அழித்திட, வேலை வாய்ப்புகள் பெற்றிட டாக்டர் அம்பேத்கர் மிகவும் உழைத்தார். அவ்வப்போது அரசுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தினார்.


**மாதவி:** டாக்டர் அம்பேத்கர், 'மக்கள் கல்விக் கழகம்' அமைத்தார். கிராமப் புறங்களில் 'சித்தார்த்தா கல்லூரிகள்' நிறுவினார்.

**மாதவி:** அவரது இடைவிடாத உழைப்பின்மூலம், 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற வள்ளுவர் குறளை நினைவு படுத்தினார்.

**இளங்கோ:** 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்னும் திருமூலரின் திரு மந்திரத்தையும் நினைவில் கொள்ள வைத்தார்.

**மாதவி:** டாக்டர் அம்பேத்கர் ஒரு மாபெரும் மனிதர். நமது அரசியல் சட்டத்தை இயற்றிய சிற்பி. சமத்துவத்தின் விடிவெள்ளி.

**இளங்கோ:** ஆம். அவர் கொள்கை வழி நடப்போம். அதுவே, நாம் அவருக்குச் செய்யும் நன்றிக் கடனாகும்.



பெரியார் மாவட்ட

# வளர்ச்சிப் பணிகள்

பெரியார் மாவட்டத்தில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை தொடர்பான பல்வேறு பணிகள் துரித கதியில் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. அவற்றுள், குறிப்பிடத்தக்க சில முக்கியப் பணிகள் பற்றி விவரிப்பதே இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.

1990-91-ஆம் ஆண்டில், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ், 8,309 குடும்பங்களுக்கு ரூ.261.406 இலட்சம் மானியம் மற்றும் கடனுதவி வழங்கத் திட்டமிடப்பட்டதில் இதுவரை 5,760 குடும்பங்களுக்கு ரூ.169.42 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ், 2,823 பணிகள் ரூ.787.681 இலட்சம் மதிப்பீட்டில் எடுக்கப்பட்டதில், இதுவரை 2,550 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

ஆதிதிராவிடர்களுக்கு 1,900 இலவசத் தொகுப்பு வீடுகள் ரூ.269.800 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகின்றன. இதில் பேரூராட்சிப் பகுதிகளில் 285 தொகுப்பு வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. மொத்தத்தில் இதுவரை 1,853 தொகுப்பு வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

சொந்தக் கட்டடம் இல்லாத ஊராட்சி மற்றும் பேரூராட்சி மன்றங்களுக்கு ரூ.65.85 இலட்சம் மதிப்பீட்டில், 80 கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இதில் இதுவரை 75 கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

பள்ளிக் கட்டடமே இல்லாத 21 இடங்களில் புதிய பள்ளிக் கட்டடங்கள் ரூ.27.815 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகின்றன. இதில் இதுவரை 18 பள்ளிக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

ஊராட்சி மற்றும் பேரூராட்சிப் பகுதிகளில், பல்வேறு வகையான வளர்ச்சிப் பணிகளைச் செய்யும் பொருட்டு 571 பணிகள் ரூ.112.915 இலட்சம் மதிப்பீட்டில் எடுத்து, செய்யப்பட்டு வருகின்றன. இதில் 425 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

600 எக்டேர் நிலப்பரப்பில் சமூகக் காடுகள் திட்டத்தின் கீழ் செடிகள் நடவு செய்யவும், நாற்றங்கால் ஏற்படுத்தவும் ரூ.27.196 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதுவரை இத்திட்டத்தில் ரூ.619.726 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 25.290 இலட்சம் மனிதசக்தி நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளது.

1989-90-ஆம் ஆண்டில் சிறுசேமிப்புத் திட்டத்தினைச் சிறப்பாகச் செயல்படுத்தியமைக்காகச் சிறுசேமிப்பு ஊக்குவிப்புத் தொகையாக இம்மாவட்டத்திற்கு ரூ.69.40 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. 75 சதவீதத் தொகை ரூ.52:05 இலட்சம் வளர்ச்சிப்பணிகளைச் செயலாக்கிடத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் ரூ.5.00 இலட்சம் சென்னை மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவன வளர்ச்சிக்காகவும், மீதமுள்ள தொகை ரூ.47.05 இலட்சம், கிராமப்பகுதிகளில் அடிப்படைத் தேவைகளுக்கான சிறப்புத் திட்டப் பணிகளைச் செயலாக்கவும் ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது.

1990-91-ஆம் ஆண்டு ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டக் கூடுதல் ஒதுக்கீடாக ரூ.54.82 இலட்சம் இம்மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்விரண்டு ஒதுக்கீடுகளையும் சேர்த்து, மொத்தத் தொகை ரூ..101.87 இலட்சமாகும்.

வளர்ச்சிப்பணிகளை அங்கீகரிக்கும் பொருட்டு, முதற்கட்டமாக ரூ.98.106 இலட்சத்திற்குப் பேரூராட்சிப் பகுதிகளில் 65 பணிகள் ரூ.26.128 இலட்சம் ஒதுக்கீட்டிலும், ஊராட்சிப் பகுதிகளில் 147 பணிகள் ரூ.71.978 இலட்சம் மதிப்பீட்டிலும் செயலாக்கப்படும்.

பெரியார் மாவட்டத்தில் கசிவு நீர்க்குட்டைகள் 12 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 35 பணிகளும், சிறுபாசனத்

திட்டம் ரூ.20 இலட்சத்தில் 26 பணிகள் எடுத்துச் செய்ய அரசு அனுமதி வழங்கி உள்ளது.

சாண எரிவாயுத் திட்டத்தில் 1990-91-ஆம் ஆண்டிற்கு 1075 கலன்கள் நியமனக் குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இது வரையில் 543 கலன்கள் நிறுவப்பட்டுள்ளன. 381 கலன்கள் நிறுவப்பட்டு வருகின்றன.

நடப்பாண்டில், கண்ணொளி வழங்கும் திட்டத்தின் கீழ் -1,538 நபர்களுக்குக் கண் அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளது.

சிறுசேமிப்புத் திட்டத்தைப் பொறுத்த மட்டில், இம்மாவட்டத்தின் இலக்கான ரூ.200 இலட்சத்தில் 150 இலட்சம் நிகர வசூல் செய்யப்பட்டுள்ளது.

கிராமக் குடிநீர்த் திட்டத்தில், நடப்பாண்டில் 150 ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கும் பணி மேற்கொண்டதில், இதுவரை 80 குழாய்க் கிணறுகள் முடிக்கப்பட்டுள்ளன. குடிநீர்த் தட்டுப்பாடு, இம் மாவட்டத்தில் ஒரு சில வட்டாரங்களில் - குறிப்பாக ஊத்துக்குளி, பெருந்துறையின் ஒரு பகுதி, அந்தியூர், அம்மாபேட்டையில் ஒரு பகுதி, பவானிசாகர், வெள்ளக் கோவில் ஆகிய இடங்களில் துவக்கப்பட்டுள்ளது. அனைத்துக் குழாய்க் கிணறுகளையும் பழுதின்றி இயக்கப் போர்க்கால நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. உதிரி பாகங்கள் வாங்க அரசு ரூ.8 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது.

கரும்பு சாலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நடப்பாண்டில் 68.90 கி.மீ. நீளமுள்ள சாலை ரூ.70.20 இலட்சத்தில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.



**ஜனநாயகம் என்பது ஓர் அரசாங்க அமைப்பு மட்டுமல்ல; அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டு ஒன்றுபட்டு வாழும் வழி அது; முக்கியமாகச் சக மனிதர்களிடம் மதிப்புடனும் மரியாதையுடனும் நடந்து கொள்ளுகின்ற மனப்பாங்கே அது.**



சத்துணவு மையங்கள் பழுதுபார்க்கும் பணிக்கென அரசு மானியம் ரூ.0.75 இலட்சம் ஒதுக்கீடு கிடைக்கப் பெற்றுப் பணிகள் துவங்கப்பட்டுள்ளன.

வேளாண்மைக்குத் தேவைப்படும் குறுகிய கால மற்றும் மத்தியக் காலக் கடன் வசதிகளைப் பெரியார் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியும் அதனுடன் இணைக்கப்பட்ட 230 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளும் வழங்கி வருகின்றன. கடந்த ஜனவரித் திங்கள் முடிய, குறுகிய காலக் கடன் ரூ.312.68 இலட்சமும், மத்திய காலக் கடன் ரூ.87.45 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளன. இதில் குறுகிய காலக் கடன் நலிவுற்ற பிரிவினருக்கு ரூ.163.86 இலட்சமும், மத்திய காலக் கடன் நலிவுற்ற பிரிவினருக்கு ரூ.87.45 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளன.

வேளாண்மை முன்னேற்றத்திற்குத் தேவையான நீண்டகாலக் கடன் வசதிகளை அளிக்கப் பெரியார் மாவட்டத்தில் 12 கூட்டுறவு நிலவள வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. 1990-91-ஆம் நிதியாண்டுக்குக் கடந்த ஜனவரித் திங்கள் முடிய ரூ.144.50 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது.

பெரியார் மாவட்டத்தில் 6 கூட்டுறவு நகர வங்கிகள் மற்றும் பெரியார் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் 27 கிளைகள், 230 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் ஆகியவைகளின் மூலம் ஜனவரி 1991 திங்கள் முடிய 1990- 91-ஆம் நிதியாண்டுக்கு ரூ.3116.21 இலட்சம் நகைக் கடன் வழங்கியுள்ளது.

பெரியார் மாவட்டத்தில் செயல்படும் 6 கூட்டுறவு நகர வங்கிகள் 1990.91-ஆம் நிதியாண்டுக்கு ஜனவரி முடிய ரூ.113.55 இலட்சமும் பெரியார் மத்தியக் கூட்டுறவு வங்கி ரூ.22.30 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.135.85 இலட்சம் சிறு தொழில் கடன் வழங்கப்பட்டுள்ளது.


வேளாண்மையைப் பொறுத்த மட்டில், நடப்பாண்டில் சுமார் 50 ஆயிரம் எக்டேரில் சம்பாவில் சாகுபடி செய்யப்பட்டிருந்த நெற்பயிர் தற்போது அறுவடையாகி வருகிறது. இதுவரை நடந்து முடிந்த 32 அறுவடைப் பரிசோதனைகளில் கிடைத்த முடிவுகளின்படி, சராசரியாக எக்டேருக்கு 4,319 கிலோ அரிசி உற்பத்தியாகியுள்ளது. சென்ற ஆண்டில் சராசரியாக எக்டேருக்கு 3,390 கிலோ அரிசி உற்பத்தியாகியிருப்பதை ஒப்பிடும் பட்சத்தில், நடப்பு சம்பா மகசூல் அமோகமானதாகும். நடப்பாண்டு குறுவையில் கிடைத்த சாதனையை விட, சம்பா சாதனை பாராட்டுக்குரிய அளவில் உள்ளது. நடப்பாண்டு குறுவையில் சுமார் 6,940 எக்டேரில் நெல் சாகுபடி செய்யப்பட்டதில் எக்டேருக்குச் சராசரியாக 4,849 கிலோ அரிசி மகசூல் பெறப்பட்டுள்ளது. இது சென்ற ஆண்டு சாதனையான 4,300 கிலோவை விட கணிசமானதாகும்.

நடப்பாண்டில் குறுவையில் 6,940 எக்டேரும், சாம்பாவில் சுமார் 50 ஆயிரம் எக்டேரும், நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. நவரையில் சுமார் 3,700 எக்டேரில் நெல் சாகுபடி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆக மொத்தம் நடப்பாண்டில் சுமார் 60,640 எக்டேரில் மட்டுமே நெல் சாகுபடி செய்யப்படுகிறது. ஆனால் சென்ற ஆண்டில் 71,520 எக்டேரில் நெல் சாகுபடி செய்யப்பட்டிருக்கிறது. அதாவது நடப்பாண்டில் சுமார் 10,880 எக்டேர் பரப்பு குறைந்திருக்கிறது. ஆனால் சென்ற ஆண்டைவிட நடப்பாண்டில் மாவட்ட அளவிலான அரிசி உற்பத்தி கணிசமான அளவு அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. சென்ற ஆண்டில் 2.50 இலட்சம் டன் அரிசி உற்பத்தியாகியிருக்கிறது. இந்த ஆண்டில் இது 2.63 இலட்சம் டன் என்ற அளவுக்கு உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

சம்பா மற்றும் குறுவை அறுவடைகளில் கிடைத்த அமோக மகசூல் காரணமாக எக்டேருக்குச் சராசரியாக 4,340 கிலோ அரிசி மகசூல் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சென்ற ஆண்டில் கிடைத்த சராசரி எக்டேர் மகசூல் 3,426 கிலோ ஆகும்.

பெரியார் மாவட்டத்திலுள்ள 20 முக்கிய வேளாண் விரிவாக்க மையங்கள் மற்றும் 25 துணை மையங்கள் மூலம் விவசாயிகளுக்குத் தேவையான தரமான விதைகள் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதுவரை 622 டன் நெல் விதைகளும், 56 டன் சிறுதானிய விதைகளும், 72 டன் பயறுவகை விதைகளும்

விற்பனையாகி உள்ளது. மார்ச் மாத இறுதிக்குள் மாசிப் பட்டம் மற்றும் சித்திரைப்பட்ட விற்பனையாக சுமார் 20 டன் சிறுதானியங்களும் (இதில் கம்பு மட்டும் சுமார் 15 டன்) சுமார் 45 டன் பயறுவகை விதைகளும் விநியோகமாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.



பெரியார் மாவட்டத்தில் 100 விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்கு மரக்கன்றுகளை வளர்க்கும் முறை பற்றிய ஒருநாள் சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. தாராபுரம், பவானிசாகர் மற்றும் ஈரோடு ஆகிய 3 இடங்களில் நடைபெற்ற இப்பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளின் போக்குவரத்துச் செலவுக்காகத் தலா ரூ.30/- வழங்கப்பட்டது. பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகள் ''கிஸான் நாற்றங்கால்'' விவசாயிகளாகக் கருதப்பட்டு, அவர்களிடம் 1991-92-ஆம் ஆண்டிற்கு இம்மாவட்டத்திற்குத் தேவையான மரக்கன்றுகளை வளர்க்கும் பணி ஒப்படைக்கப்படுகிறது. மரக்கன்றுகளை வளர்க்கத் தேவையான கண்ணாடிப் பைகள் சுமார் 3.72 இலட்சம் எண்ணிக்கைகளை ரூ.78,100/- செலவில் வேளாண்மைத் துறை இவ்விவசாயிகளுக்கு வழங்குகிறது.

தற்போதைய நிலையில் இவ்விவசாயிகள் உற்பத்தி செய்து தரும் மரக்கன்றுகளுக்குத் தலா 56 பைசா வீதம் வழங்கப்படும். புளியன், வேம்பு, கருவேல், வெவ்வேல், புங்கம், மான்காது வேலமரம், மலைநெல்லி போன்ற மரக்கன்றுகளை அந்தந்தப் பகுதியிலிருக்கும் விவசாயிகளின் நிலங்களிலேயே இத்திட்டத்தின் கீழ் உற்பத்தி செய்யப்பட்டு, அடுத்த ஆண்டில் பருவமழைக் காலத்தில் விநியோகம் செய்யப்படும்.

நெற்பயிரினைத் தாக்கும் குலைநோய், இலைமடக்குப்புழு, புகையான், பச்சை தத்துப்பூச்சி மற்றும் எலிகள் ஆகிய வற்றைக் கட்டுப்படுத்த 50 சத மானிய விலையில் விவசாயிகளுக்குப் பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், இதுவரை 1,856 விவசாயிகள் பயனடைந்துள்ளனர். ரூ.1.1 இலட்சம் மானிய செலவில் இம்மருந்துகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. இப்பணி இன்னும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இன்னும் சுமார் ரூ.3.6 இலட்சம் மதிப்புள்ள மருந்துகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. சோளம் பயிரைத் தாக்கும் குருத்து ஈக்களை கட்டுப்படுத்தவும் இத்தொகையிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஆதிதிராவிட விவசாயிகளின் நலனை முன்னிட்டு 50 சதவிகித மானிய விலையில் - நெல், பயறுவகை மற்றும் பசுந்தாளுர விதைகளும், நுண்ணூட்டங்களும், பயிர்ப் பாதுகாப்புக் கருவிகளும் வழங்கும் திட்டத்தின் கீழ் ரூ.2.84 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டதில் ரூ.1 இலட்சம் மதிப்புள்ள விதைகளும், ரூ.32 ஆயிரம் மதிப்புள்ள நுண்ணூட்டங்களும், ரூ.9 ஆயிரம் மதிப்புள்ள கருவிகளும் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ், இதுவரை 1,680 ஆதிதிராவிட விவசாயிகள் பயன் அடைந்துள்ளனர். இப்பணி

## தமிழ்நாடு சர்க்கரைக் கழகம்

தமிழ்நாடு சர்க்கரைக் கழகம், 1977-78-இல் செயல்படத் துவங்கியது. நிறுமத்தின் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ.7.79 கோடியாகும். அதில் அரசின் நேர்மைப் பங்கு மூலதனம் ரூ.6.79 கோடியாகும். கரும்பு பயிரிடுவோர் மற்றும் கரும்பு பயிரிடாதோர் உள்ளிட்ட 16,400 பங்குதாரர்கள் இந்நிறுமத்தின் பங்குதாரர்களாக உள்ளனர். 28.12.1990 அன்று தஞ்சையில் நடைபெற்ற தமிழ்நாடு சர்க்கரைக் கழகத்தின் ஆண்டுப் பேரவைக் கூட்டத்தில், பங்குதாரர்களுக்கு 10 சதவிகிதம் ஊதியப் பங்கு வழங்க முடிவெடுக்கப்பட்டது.

குருங்குளம், அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை மற்றும் பாண்டியராஜபுரம் மதுரா சுகர்ஸ் ஆகிய இரு அரசு நிறுவனங்களும் 1989-90-ஆம் ஆண்டில் ரூ.2.2 கோடி இலாபம் ஈட்டியது. இதில் பங்குதாரர்களுக்கு ரூ.80 இலட்சம் ஊதியப் பங்காக வழங்க முடிவு செய்யப்பட்டது.

அதன்படி, தமிழ்நாடு சர்க்கரைக் கழகம், அரசின் மூலதனத்தின் மேல் ரூ.67.90 இலட்சத்திற்குப் பங்கு ஆதாயக் காசோலையை, மேதகு ஆளுநரின் ஆலோசகர் திரு. வி. இராமச்சந்திரன் அவர்களிடம், தொழிற்துறைச் செயலர், தமிழ்நாடு சர்க்கரைக் கழகத்தின் தலைவர், நிர்வாக இயக்குநர் ஆகியோர் அன்று வழங்கினர்.

இன்னும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

படித்து வேலையற்ற இறைஞர்களுக்கு இந்தியப் பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 1989-90-ஆம் ஆண்டிற்கான குறியீடான 300 நபர்களுக்கு எதிராக, சென்ற ஜனவரி முடிய மொத்தம் 308 நபர்களுக்கு ரூ.53.77 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் 1990-91-ஆம் ஆண்டிற்கு 400 நபர்களுக்குக் குறியீடு நிர்ணயிக்கப்பட்டு, ஜனவரி மாதம் முடிய மொத்தம் 599 பேர்களுக்கு ரூ.127.67 இலட்சம் கடனுதவி வழங்கப் பல்வேறு வங்கிகளுக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அதில் 106 நபர்களுக்கு ரூ.22.08 இலட்சம் கடன் அனுமதியும், 72 நபர்களுக்கு ரூ.14.93 இலட்சம் கடனும் வங்கிகளின் மூலம் பட்டுவாடாவும் செய்யப்பட்டுள்ளது.



கூட்டு நடவடிக்கைகளில் தனி மனிதரைப் பங்குதாரராகவோ கூட்டு உறுப்பினராகவோ செய்வதன் மூலம், அவர் அந்நடவடிக்கைகளில் வெற்றியைத் தனது வெற்றியாகவும் தோல்வியைத் தனது தோல்வியாகவும் உணர்கிறார். அந்த உணர்வே உண்மையில் ஒன்றிணைந்த மக்கள் சமுதாயத்தை உருவாக்கும்.

பெரியார் மாவட்டத்தில் தக்காளிப் பழங்களிலிருந்து தக்காளிப் பவுடர் தயாரிக்கும் மற்றும் நெல்லிக்கனியிலிருந்து வைட்டமின் ''சி'' உணவுச் சத்து தயாரிப்பதற்கும் நல்ல வாய்ப்புகள் உள்ளன. இதற்கான தொழில் அறிக்கைகள் தொழில் வணிகத்துறையினரால் தயாரிக்கப்பட்டு வருகிறது.

ஆர்வமுள்ள தொழில் அதிபர்கள் இத்தொழில்களைத் தொடங்கி மேலும் விபரங்களுக்கு மாவட்டத் தொழில் மையம், பொது மேலாளரை அணுகலாம் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஆதிதிராவிடர்களுக்கு 1990-91-ஆம் ஆண்டு ரூ.87.500 ஒதுக்கீடு செய்யப்பட்டதில், ஜனவரி முடிய ரூ.1,03,341 செலவிடப்பட்டு, 16 குடிநீர்க் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன.

1990-91-ஆம் ஆண்டு, சுடுகாட்டிற்குப் பாதை அமைப்பதற்காக ரூ.1,05,928 செலவிடப்பட்டுள்ளது. இதன்மூலம் இதுவரை 24 பாதைகள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த நிதியாண்டில் சென்ற ஜனவரி முடிய 216 நிறுவனங்களுக்குப் பல்வேறு திட்டங்களின் கீழ் ரூ.279.35 கடன் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இந்த நிதியாண்டில் 218 நிறுவனங்களுக்குப் பல்வேறு திட்டங்களின் கீழ் ரூ.305.59 இலட்சம் கடன் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது.



கடந்த ஜனவரித் திங்கள் முடிய ரூ.296.96 இலட்சம் கடன் வசூல் செய்யப்பட்டுள்ளது. ஜனவரியில் மட்டும் ரூ.40.45 இலட்சம் கடன் வசூல் ஆகியுள்ளது.

மாநில அளவில் புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டங்களைச் செயல்படுத்த அரசு மொத்தம் ரூ.1,352.15 இலட்சம் அனுமதி வழங்கியுள்ளது. இதில் பெரியார் மாவட்டத்தில், குன்னத்தூர் பேரூராட்சிக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு ரூ.89.95 இலட்சமும், வீரப்பன்சத்திரம் பேரூராட்சிக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு ரூ.268.20 இலட்சமும், சக்தி நகராட்சி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு ரூ.51 இலட்சமும் ஆக இம்மாவட்டத்திற்கு ரூ.409.15 இலட்சம் புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தற்போது வீரப்பன் சத்திரம் பேரூராட்சிக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கான பணிகள் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.வி.கே. சுப்புராஜ், அவர்களால் கால்கோள் செய்யப்பட்டுள்ளது.

# வளமான வாழ்வுக்கு
# மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ்
அளிக்கும்
# விஜய்
உரங்கள்






மதராஸ்
பெர்ட்டிலைசர்ஸ்
லிமிடெட்

VIJAY

HTA 7343



வடஆர்க்காடு
அம்பேத்கர் மாவட்டம்

# பணப்பயிர் ஊடுபயிர் பயிரிடுவீர்

**வ**ட ஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்டத்தில் சோயா பீன்ஸ் பயிரைத் தனிப் பயிராகவும், கரும்பு, தென்னை, வாழை, மஞ்சள் ஆகியவற்றுடன் ஊடு பயிராகவும் பயிர் செய்கிறார்கள். சோயா பயிருக்கு விவசாயிகளிடம் நல்ல வரவேற்பு உள்ளது. சோயா பீன்ஸ் புரதச்சத்துமிக்க ஒரு உணவுப் பொருளாகும். தனிப்பயிராகவும் பயிரிடலாம், அதிகச் செலவு இல்லாமல் ரூ.5,000 முதல் ரூ.6,000 வரை கிடைக்கும். ஊடுபயிராக விதைத்தால் 90 நாட்களில் ரூ.2,000 முதல் ரூ.3,000 வரை வருவாய் கிடைக்க வழி உண்டு. ஊடுபயிராக விதைத்தால் முக்கியப் பயிருக்கு எந்த விதப் பாதிப்பும் இல்லை. மேலும், அதனால் நன்மைதான் ஏற்படுகிறது.

**கரும்பில் சோயா பீன்ஸ்**

கரும்பில் ஊடுபயிர் செய்யும் பழக்கம் தொன்று தொட்டு நம்மிடையே இருந்து வருகிறது. சோயா பீன்ஸ் பயிரைக் கரும்பில் ஊடு பயிராகச் சாகுபடி செய்வதால் கரும்பு மகசூல் பாதிக்கப்படுவதில்லை; மாறாக நன்மைகள் கிடைக்கின்றன. 90 நாட்களில் உபரி வருமானமாக ஏக்கருக்கு ரூ.3,000 வரை லாபம் கிடைக்கிறது. கரும்பு அறுவடையாக ஓராண்டுக் காலம் காத்திருக்க வேண்டியுள்ளது. எனவே, சாகுபடிச் செலவுக்கு இத்தொகை உதவும், சோயா பீன்ஸ் செடிகள் வளர்ந்து இடத்தை அடைத்துக் கொள்வதால் களைகள் கட்டப்படுவதுடன் உர உபயோகத்திறன் அதிகரிக்கிறது. நீர் பாய்ச்சவும் செலவு குறைகிறது. மகசூலும் கூடுகிறது. இலையோ மக்கி உரமாகிறது. அறுவடையின் போது, வேர்முடிச்சுகள் மூலமாகத் தலைச்சத்து நிலத்தில் சேர்த்து வைக்கப்படுகிறது. சோயா பீன்ஸ் 34 ரகங்கள் இருந்தாலும் கோ.1. தான் நமது நிலத்திற்கு ஏற்றதாக உள்ளது.

கரும்பு சாகுபடியைப் போலவே, தென்னை, வாழை, மஞ்சள் சாகுபடியிலும் ஊடுபயிராகச் சோயா பீன்ஸ் விதை நடலாம் தனிப்பயிராக நடவு செய்தால் இரட்டிப்பு மகசூல் தரும்.

**சாகுபடி முறை**

சக்தி சோயா நிறுவனம் ரூ.6-க்கு ஒரு கிலோ விலைக்கு வாங்கி விவசாயிக்கு ரூ.4-க்குக் கொடுக்கிறது. 6 கிலோ முதல் 10 கிலோ வரை ஒரு ஏக்கருக்குத் தேவை. விதைகளை ஒரு பாக்கெட் நுண்ணுயிருடன் கலந்து விதைக்க வேண்டும். கரும்பு, மஞ்சள், வாழை நட்டவுடன் இடைப்பட்ட இடத்தில் மூன்று அல்லது நான்கு வரிசை சோயா பீன்ஸ் விதைக்கலாம். குழிக்கு இரண்டு விதைகளை ஒரு அங்குலத்திற்குள் விதைக்க வேண்டும். விதைத்த 40, 50, 60-வது நாட்களில் இலைவழி ஊட்டமாக டி.ஏ.பி. 2 கிலோ பொட்டாஷ், ஒரு கிலோ யூரியா, அரை கிலோவை 230 லிட்டர் நீரில் கலந்து தெளிக்கலாம். உரங்களை முதல் நாளே நீரில் ஊற வைத்து மறு நாள் காலையில் தெளிக்க வேண்டும்.

**சர்க்கரை ஆலை**

வேலூர் அம்பேத்கர் மாவட்டத்தில் மூன்று சர்க்கரை ஆலைகள் இயங்கி வருவதாலும், கரும்பு பயிரிடும் விவசாயிகள் அதிகமாக உள்ளதாலும் சோயா பயிரை ஊடுபயிராகப் பயிரிட நல்ல வாய்ப்பும் வசதியும் உள்ளது. உற்பத்தி செய்த விதைகளைச் சக்தி சோயா நிறுவனம் கிராம அளவிலேயே கிலோவுக்கு ரூ.6 வீதம் கொள்முதல் செய்து கொள்கிறது. மேலும் விதை எடுத்து வர வண்டிச் சத்தம், - போக்குவரத்துச் செலவு, சாக்குக் கிரயம் போன்றவற்றிற்கு டன் ஒன்றிற்கு ரூ.150 வழங்கப்படுகிறது. சோயா பீன்ஸ் விதைத் தேவை மற்றும் சாகுபடி முறைகளை வேலூரில் உள்ள சக்தி சோயா நிறுவனத்தின் மண்டல மேலாளர் வரதராஜன், வேலூர் களப்பணியாளர் செல்வவிநாயகம் அவர்களை அணுகி, பெற்றுக் கொள்ளலாம்.


**பொள்ளாச்சியில் தொழிற்சாலை**

பொள்ளாச்சியில் ரூ.26 கோடி செலவில் தொழிற்சாலை தமிழ்நாடு அரசு கூட்டு நிறுவனமாக நிறுவப்பட்டு, நாள் ஒன்றுக்கு 300 டன் சோயா பீன்ஸ் அரைக்கலாம். கொள்முதல் விலை குவின்ண்டாலுக்கு ரூ.600 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. கொள்முதல் விதைகளைப் பொள்ளாச்சி ஆலைக்கு அனுப்பிவைத்து ஏ.பி.டி லாரி விலைப்பட்டியலை வேலூர் அலுவலகத்தில் கொடுத்தால் மண்டல மேலாளரிடமிருந்து உடனடியாகத் தொகையைப் பெற்றுக் கொள்ளலாம். குறுகிய காலத்தில் வேறெந்தப் பயிரிலிருந்தும் இந்த அளவிற்குக் கூடுதல் வருமானம் ஈட்ட இயலாது என்பது திடமான உண்மையாகும். சோயா பீன்ஸ் பயிரிடுவதால் நிலத்திற்கு வளம்-கால் நடைக்குத் தீவனம் ஆகியவற்றுடன் மனிதனுக்கும் உணவாகிறது.

- வேற்றுப் பயிர் செய்து விளைச்சல்
மிக இல்லை என்றால்
மாற்றுப் பயிர் செய்திடலாம்;

எனவே, மாற்றுப்பயிராக சோயா பீன்ஸ் விதைத்திடுவீர்!

# இலக்கியத்தில் காவிரி



**கா**விரி ஆற்றுக்கும் தமிழ்நாட்டுக்கும் உள்ள உறவும் தொடர்பும் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே உருவானவை. இன்று நேற்றுத் தோன்றியதல்ல. நமது சங்க இலக்கியங்கள் இதனை மிகத் தெளிவாக எடுத்துரைக்கின்றன. காவிரியைப் பற்றிய செய்திகளை நமக்குச் சொல்லும் நூல்கள்:

சிலப்பதிகாரம்
மணிமேகலை
பட்டினப்பாலை
புறநானூறு
பத்துப்பாட்டு
திவாகரம்
பாரதம்
கம்பராமாயணம்
பெரியபுராணம்
தேவாரம்
திருவாய்மொழி

என்று நூல்களின் பட்டியலை விவரித்துக் கொண்டே போகலாம்.

ஔவையார், ஒட்டக்கூத்தர், புகழேந்தி, சொக்கநாதப் புலவர், காளமேகம் என்று புலவர்களின் பட்டியலை நீட்டித்துக் கொண்டே செல்லலாம். இந்த நூற்றாண்டைச் சேர்ந்த கவிஞர் பெருமக்களில் பொன்னியைப் பாடாத புலவர்கள் யாருமில்லை -

‘வசையில் புகழ்வயங்கு வெண்மீன்
திசைதிரிந்து தெற்கேகினும்
தற்பாடிய தளியுணவின்
புட்டேம்பப் புயன்மாறி
வான் பொய்ப்பினும் தான்பொய்யா
மலைத்தலைஇய கடற் காவிரி’

- என்று பட்டினப்பாலையில் கடியலூர் உருத்திரங் கண்ணனார் பாடினார்.

வெள்ளி எனப்படும் விண்மீன் தான் செல்லுதற்குரிய திசையாகிய வடக்கே செல்லாது தெற்கு நோக்கிச் சென்றாலும்-

மழைத் துளியை உணவாகக் கொள்ளும் வானம்பாடிப் பறவைக்கு மழைத் துளி கிடைக்காது மேகம் பொய்த்தாலும்—


குடகுமலை பிறந்து கடலில் விழும் காவிரி பொய்ப்பதில்லை என்பது அந்தப் புலவர் பெருமகனின் வாக்கு.

‘‘கோள்நிலை திரிந்து
கோடை நீடினும்
தான்நிலை திரியாத்
தண்டமிழ்ப் பாவை’’ - என்று

சீத்தலைச் சாத்தனார் மணிமேகலையில் பாடியுள்ளார்.

பத்துப்பாட்டில் ஒன்றான பொருநராற்றுப் படையில் காவிரி ஆற்றினால் சோழநாடு நெற்களஞ்சியமாகத் திகழ்வது சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. அது வருமாறு:

மாமேலன்







''நரையும் நரந்தமும் அகிலுமாரமும்
துறைதுறைதோறும் பொறையுயிர்த் தொழுகி
நுரைத்தலைக் குறைப்புனல் வரைப்பகம்புகு தொறும்
புனலாடு மகளிற்கதுமெனக் குடையக்
கூனிக்குயத்தின் வாய்நெல்லரிந்து
சூடு கோடாக பிறக்கி நாடொறுங்
குன்றெனக்குவைஇய குன்றா குப்பை
கடுந்தெற்று மூடையினிடங் கெடக்கிடக்குஞ்
சாலிநெல்லின் சிறை கொள்வேலி
யாயிரம் விளையுட்டாகக்
காவேரிபுரக்கு நாடுகிழவோனே!''

சிலப்பதிகாரம் நாடுகாண் காதையில்: கடல் வனனெதிர்க் ''கரியவன புகையினும் புகைக்கொடி தோன்றினும் கயவாய் நெரிக்கும்'', எனக் கூறி புன லொடு எப்பொழுதுமிருந்து நின்நாட்டைப் புனல் நாடெனப் பெயர் எடுக்கச்செய். நின்னாட்டில் ''தாம்பி யும், கிழாரும் வீங்கிசையேத்தமும்'' ஒலிக்கவேண்டாம் என்று காவிரியைப் பற்றிக் கூறப்படுகிறது.

''சிலப்பதிகார ஆசிரியர், காவிரியாறு வாழுங்காலம் வரை சோழநாட்டிற்குத் தன் வற்றாத வ்ளஞ்சுரக்கும் ஈகையினை அழகுற எடுத்து மொழிந்துள்ளார்''.

''வாழி அவன்தன் வளநாடு மகவாய் வளர்க்கும்
தாயாகி ஊழி உய்க்கும் பேருதவி ஒழியாய் வாழிகாவேரி''

இளங்கோவடிகள் காவிரி தரும் வளத்தை விளக்கிக் காட்டுகிறார்.

''உழவர் ஓதை மதகு ஓதை; உடைநீர் ஓதை;
தண்பதங்கொள்'
விழவர் ஓதை சிறந்தார்ப்ப நடந்தாய் வாழி காவேரி.''

''மருங்குவண்டு சிறந்தார்ப்ப மணிப்பூவாடை அதுபோர்த்து
கருங்கயற்கண் விழித்தொல்கி நடந்தாய் வாழிகாவேரி.''

''பூவார்சோலை மயிலாலப்புரிந்து குயில்களிசைபாடக்
காமர்மாலை அருகசைய நடந்தாய்வாழி காவேரி.''





மணிமேகலையில்-

துறக்க வேந்தன் துய்ப்பிலன் கொல்லோ
அறக் கொல்வேந்தன் அருளிலன் கொல்லோ
சுரந்துகாவேரி புரந்து நீர்பரக்கவும்
நலத்தகையின்றி நல்லுயிர்க் கெல்லாம்
அலத்தற் காலையாகியது ஆயிழை-

- என்று சீத்தலைச் சாத்தனார், ''பாத்திரங்கொண்டு பிச்சைபுக்க காதை'' என்ற பகுதியில், காவிரியில் எப்படிப்பட்ட காலத்தும் நீர்வளம் குறைவதில்லை என்பதை எடுத்துரைத்து அதன் சிறப்பை விளக்குகிறார்.

கம்பராமாயணத்தில் 'காவிரி நாடன்ன கழனிநாடு' எனக் கம்பர் கூறுகிறார். கோசல நாட்டின் சிறப்பைக்கூற வந்த கம்பர் நதியின் பெருமையால் விளக்குகிறார். காவிரி நதி பாய்கின்ற சோழ நாட்டைப் போன்ற 'கோசலநாடு' என்று நதியின் மூலமாய் நாட்டின் பெருமை விளக்கப்படுகிறது. நாட்டின் பெருமையை விளக்குவதற்கு எடுத்துக்காட்டாக நிற்பது காவிரியே. நதி என்றாலே காவிரி நதியைத் தான் குறிக்கும். அது அத்தகைய சிறப்பு வாய்ந்தது என்பதைக் கம்பராமாயணம் விளக்குகிறது.

அகத்தியப்படலத்தில்-

''கன்னியிள வாழைகனி யீவகதிர்வாலின்
செந்நெலுள தேனொழுகு போதுமுளதெய்வம்
பொன்னியென லாயபுனலாறு முளபோதா
அன்னமுள பொன்னிவளொடன்
பின்விளையாட.''

என்று கூறுமிடத்து, தாய்நாட்டுப் பற்றுடைய கம்பர் புண்ணியத்தன்மை பொருந்திய காவிரி நதியைத் 'தெய்வப் பொன்னி' எனக் குறித்துள்ளமையால் காவிரி யின் ஏற்றம் புலனாகும்.

கம்பர் அகத்தியப் படலத்தில் அகத்திய முனிவனது சிறப்புகளைப் பற்றிக் கூறுமிடத்து,

''எண்டிசையும் ஏழுலுலகும் எவ்வுயிர்க்கும் உய்யக்
குண்டிகையினில் பொருஇல் காவிரி கொணர்ந்தான்.''

என்று புகழ்கின்றார். இதன்மூலம் காவிரியானது எட்டுத் திக்குகளும், ஏழுலகங்களும், அவற்றிலுள்ள எல்லா உயிர்களும் நற்கதி அடையும்படி ஒப்புயர்வற்றுத்

தவழ்ந்து செல்கின்றது என்று சுட்டிக் காட்டப்படு கின்றது.

பெரிய புராணத்தில், காவிரி நதியைப் பூமகளின் மார்பில் திகழும் முத்துமாலையாகச் சேக்கிழார் வர்ணிக்கிறார்.

''ஆதி மாதவமுனி யகத்தியன்தரு
பூதநீர்க்கமண்டலம் பொழிந்த காவிரி
மாதர் மண்மடந்தை பொன்
மார்பிற் றாழ்ந்ததோர்
ஓதநீர் நித்திலத்தாம மொக்குமால்.''

திங்கள் சூடியமுடிச் சிகரத்துச்சியிற்
பொங்கு வெண்டலை நுரைபொருது போதலால்
எங்கணாயகன் முடிமிசை நின்றேயிழி
கங்கையாம் பொன்னியாங் கன்னிநீத்தமே.

மாவிரைத் தெழுந்தார்ப்ப வரைதரு
பூவிருத்த புதுமதுப் பொங்கிட
வாவியிற் பொலிநாடு வளந்தரக்
காவிரிப்புனல் கால்புரந் தோங்குமால்.

இப்படி, சேக்கிழார் புகழ்வதுபோல் போட்டி போட்டுக் கொண்டு, சமய நூல்கள் பலவும் காவிரி யின் புகழ்பாடுகின்றன.

''காவிரி வந்தடி வருடநல் செந்நெலார் வளவயல்
தென்குடித்திட்டை''
''பூசநீர் பொழியும் புனற் பொன்னி''

''கங்கைக்கு ஏயும் பொன்னி''
''கடல் போல் காவிரி''

- என்பன தேவார அடிகளாகும். மேலும் தேவாரத்தில்,

காவிரி என்றும் நீர் வற்றாது. அழகு மிக்கது. நீண்டது; ஒலிக்கும் வெள்ளம் உடையது; கரைகளில் மலர்ப் பொழில் நிறைந்தது. இது பழங்காவிரி என்றும் சொல்லப்படுகிறது.

'வரைநின் றிழிவார்தரு பொன்னி'
'பொழில் மல்கு பொன்னி'
'பாய சீர்ப்பழங் காவிரி
'ஆரியாவரு காவிரி மாறாநீர்...காவிரி'

என்பன போன்ற அடிகள் காணப்படுகின்றன.

காவிரி வெள்ளத்தில் அடித்துக்கொண்டு வரும் பொருள்களையும், காவிரி வர்ணனையையும், அதன் வடகரையிலுள்ள 'திருமாந்துறை' என்னும் தலத்துக்கு உரிய பதிகத்தில் திருஞானசம்பந்தர் பாடல்தோறும் சொல்லியுள்ளார். அவை வருமாறு:

அகில், சந்தனம், பெருமரம், பூகக்குலை, இலவம், ஈஞ்சு, மருதம், கழை, வேங்கை, இலவங்கம், கோங்கு, திமில், தேக்கு, ஞாழல், சண்பகம், குருத்து, செருந்தி, பாதிரி, குரா, மல்லிகை, முல்லை, மௌவல் மாதவி, சுரபுன்னை, முதலிய மலர்கள், இஞ்சி, இலை, ஈஞ்சு, ஏலம், மிளகு, மஞ்சள், காட்டுப் பொருள்கள், மலைப் பொருள்கள், பொன், வயிரத்திரள்கள், மாணிக்கம், முத்து, நீலமணி, மூங்கில் மணி முதலிய மணிகள்; சாதிப்பழம், மாம்பழம், வாழைப்பழம் முதலிய பழ




வகைகள். விளைவின் தேன் முதலிய தேன் வகைகள், மயிற்பீலி, யானை மருப்பு முதலியவை.

இவ்வாறு, பண்டைய இலக்கியங்களிலிருந்து இன்றைய நூற்கள்வரை காவிரியைப் பற்றிய ஏராளமான செய்தி களை நாம் அறிந்து கொள்கிறோம். அந்த விவரங் களைத் தொகுத்து எழுதின் ஒரு பெரும் நூலாகவே அமையும்.

தமிழ்மக்களின் வாழ்வோடு ஒன்றியதாக உயர்ந்து விளங்கிய ஆறு - வான் பொய்ப்பினும் தான் பொய் யாது என்று போற்றிச் சிறப்பிக்கப்பட்ட ஆறு இன்று வறண்டு கிடக்கும் மாறான நிலை-

''அந்நாள் சிறப்பு எந்நாள் வருமோ?'' என்ற ஏக்கத்தை உருவாக்குகிறது. தொன்றுதொட்டு இருந்து வந்த ஆறு மாறியநிலை இடையில் வந்த தீய கனவாக மாறட்டும்! இலக்கியப் பெருமை என்றும் நிலைக்கட்டும்!






மேதகு ஆளுநர் திரு.பீஷ்ம நாராயண்சிங் அவர்கள் சென்னை-இலண்டன் இடையில் நிற்காமல் செல்லும் நேரடி விமான சேவையைச் சென்னை அண்ணா பன்னாட்டு விமான நிலையத்தில் தொடங்கி வைத்தார் (2.4.91).


# படமும் செய்தியும்

மேதகு ஆளுநர் திரு.பீஷ்ம நாராயண்சிங் அவர்கள் நாமக்கல்லில் கால்நடை மருத்துவக் கல்லூரியின் புதிய கட்டடத்தைத்திறந்து வைத்தார் (25.3.91).










மேதகு ஆளுநர் திரு.பீஷ்ம நாராயண் சிங் அவர்கள் சேலம் எஃகுத்தொழிற்சாலையில்இரண்டாவது குளிர் உருட்டாலை பிரிவைத் தொடங்கி வைத்தார். மாண்புமிகு மத்திய எஃகு மற்றும் சுரங்கத் துறை அமைச்சர் திரு.அசோக் சென் உட உள்ளார் (26.3.91).



மேதகு ஆளுநரின் ஆலோசகர் திரு.வி.இராமச்சந்திரன் அவர்கள் சென்னையில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் புதிய விரைவுப் பேருந்து நிலையத்தைத் திறந்து வைத்தார் (3.4.91).

சென்னை வாசவி நகர் குடிசை வாழ் மக்களுக்கான குடும்ப நலம், பொதுச் சுகாதாரம், மரம் வளர்ப்பு பற்றி நடைபெற்ற கருத்தரங்கில் தலைமைச் செயலர் திரு.டி.வி.அந்தோணி இ.ஆ.ப., அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றினார் (25.3.91).






# சிறுசேமிப்புத் துறை




எதிர்பாராத இன்னல்கள் ஏற்படுமுன் சேமியுங்கள். வரி செலுத்துவதைத் திட்டமிட்டு, இன்ஷுரன்ஸ் பாதுகாப்பும் பெறுங்கள். இன்றே கீழ்க்கண்ட சிறுசேமிப்புத் திட்டத்தில் ரூ.1,000/-ம் அதற்குமேலும் முதலீடு செய்து தனிநபர் விபத்து இன்ஷுரன்ஸ் பாலிசியைப் பெறுங்கள்.

**கீழ்க்கண்ட திட்டங்களின்கீழ் தனிநபர் விபத்து இன்ஷுரன்ஸ் பாதுகாப்பு கிடைக்கும்:**

- கிசான் விகாஸ் பத்திரம்
- தேசிய சேமிப்புத் திட்டம்
- அஞ்சலக மாதாந்திர வருமானத்திட்டம்
- அரசுப்பணியாளர்களுக்கான டெபாசிட் திட்டம் 1989
- தேசிய சேமிப்புப்பத்திரம் 8வது வெளியீடு
- 15 வருட பொது சேமநலநிதி
- அஞ்சலக குறித்தகால டெபாசிட்

## வருமான வரி விலக்குப் பெற தேசிய சேமிப்பில் முதலீடு செய்வீர்

| வசதிகள் | தேசிய சேமிப்பு பத்திரம் 8-வது வெளியீடு | பொதுசேம நலநிதி | தேசிய சேமிப்பு திட்டம் |
|---|---|---|---|
| வட்டி | 12% | 12% | 11% |
| முதலீட்டுக்கு வருமான வரிவிலக்கு | ரூ.50,000 பிரிவு 88-ன்கீழ் | ரூ.50,000 பிரிவு 88-ன்கீழ் | ரூ.40,000 பிரிவு 80CCA-ன் கீழ் |
| வட்டிக்கு வருமான வரிவிலக்கு | வருமான வரிச் சட்டம் பிரிவு 88-ன்கீழ் | வருமான வரியில் இருந்து வட்டிக்கு முழுவிலக்கு | வட்டி தொகை சேரும்போது வருமான வரி விலக்கு |
| செல்வ வரி | ரூ.5,00,000 வரை விலக்கு | முழுவிலக்கு | முழுவிலக்கு |
| டெபாசிட்டுகளுக்கான வரம்பு | வரம்பு கிடையாது | ரூ.60,000 | ரூ.40,000 |

### தமிழக அரசின் சிறப்பு சலுகைகள்:

- ஒவ்வொரு ரூ.500/- முதலீட்டிற்கும் ஒரு இலவச பரிசு கூப்பன் மூலம் 262 பரிசுகளில் ஒன்றைப் பெறும் வாய்ப்பு.
- தமிழ்நாட்டில் குறிப்பிட்ட சில திட்டத்தில் முதலீடு செய்யும் ஒவ்வொரு ரூ.1,000/- முதலீட்டிற்கும் 1% வரை ஊக்கத்தொகை.
- 1.1.91 முதல் 31.3.91 வரை தமிழ்நாட்டில் குறிப்பிட்ட திட்டங்களில் முதலீடு செய்யும் ஒவ்வொரு ரூ. 1000/- முதலீட்டிற்கும் தனிநபர் விபத்து இன்ஷுரன்ஸ் வசதி. பிரீமியத்தை தமிழக அரசே செலுத்துகிறது.

DIPR/189/MS/91/ARIES

## இலவச தனிநபர் விபத்து காப்புறுதி திட்டம் — அதிகபட்ச நஷ்ட ஈடு ரூ. 50,000/-

ரூ.50,000/- வரை தனிநபர் விபத்து இன்ஷுரன்ஸ் வசதி பெறுங்கள்.

கூடுதல் சலுகைகள்:

* இந்திய அரசின் முழுப்பாதுகாப்பு
* சொத்து வரிவிலக்கு
* உங்கள் குழந்தைகள் பெயரில் முதலீடு செய்து வருமான வரிவிலக்கு பெறுங்கள்.

**யுனைடெட் இந்தியா இன்ஷுரன்ஸ் நிறுவனம், சென்னை.**
தனிநபர் விபத்து இன்ஷுரன்ஸ் பாலிசி கிடைக்குமிடம்:
**அனைத்து மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம்** மற்றும்

இயக்குநர்
**சிறுசேமிப்புத்துறை**
143, அண்ணாசாலை, சென்னை-600 002.
தொலைபேசி: 840223/846209.



# புயல்போல் புகுந்த புலவன்

# பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

- கே.சி.எஸ். அருணாசலம்.

கவிதை என்பது மனித உணர்ச்சிகளின் வெளிப்பாடு. கற்பனைவளம், சொல்வளம் தெளிவு, சந்தம், உணர்ச்சி, இலக்கு இப்படிப்பட்ட அலங் காரங்கள் அதற்கு உண்டு.

இலக்கிய உலகின் தலைசிறந்த அறிஞர்கள் இந்தக் கருத்தை ஆங்காங்கே வலியுறுத்தியிருக் கிறார்கள். கற்றவர்கள் இலக்கணப் பிழை இல்லாமல் செய்யுள் எழுதிவிடலாம். ஆனால் அவையெல்லாம் கவிதையாகிவிடாது. ''கவிதை என்பது கவிஞனின் உணர்ச்சியுடன் தொடர்புடையது'' என்று திரு கி.வா.ஜ. அவர்கள் சற்று அழுத்தமாகவே குறிப்பிடுவார்.

''Poetry is the expression of Human Feelings'' என்று ஓர் ஆங்கில அறிஞனும் கூறுவான். எனவே, உணர்ச்சி வசப்பட்டு மக்களின் ஆத்திர ஆவேசங்களையோ, இன்ப துன்பங்களையோ கவிதையின் வாயிலாக வெளிப்படுத்த முயலும் கவிஞனிடம் ''நீ இந்த மாதிரியான கவிதைதான் எழுதவேண்டும், இந்தப் பொருளைத்தான் பாட வேண்டும் என்று எந்தக் கொம்பனும் கட்டளையிட முடியாது, அந்தக்கட்டளை செல்லுபடி ஆகாது! ''காதம் இருபத்து நான்கொழியக் காசினியை ஓதக் கடல்கொண் டொழித்ததோ?'' என்ற வரிகளைச் சான்றாகக் காட்டலாம்.

கவிஞன் உணர்ச்சி வசப்பட்டவனாக மட்டும் இருந்தால் போதாது. அவன் காலத்தை எதிரொலிப் பவனாகவும் இருக்க வேண்டும். சில சமயங்களில் தனது காலத்திலிருந்து பல ஆண்டுக்காலம் முன் னோக்கிப் பாய்ந்து விடுபவனாகவும் காட்சியளிக் கிறான்.

கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பிறந்த நாள் (13.4.1930) நினைவாக இந்தக் கட்டுரை வெளியிடப்படுகிறது.

எண்பது ஆண்டுகளுக்கு முன்னே இயற்கை எய்திய பாரதியாரும், அவரது அன்புக்குரிய பாவேந்தர் பாரதிதாசனும் இன்னும் ஒரு நூற்றாண்டுக்காலம் நமது நாடு பயணம் செய்ய வேண்டிய திசை வழிகள் குறித்தும் ஆற்ற வேண்டிய சமுதாய, பொருளாதார, பண்பாட்டுக் கடமைகள் குறித்தும் நெஞ்சில் நிலைத்த கவிதைகள் தந்து சென்றிருப்பது நமக்குத் தெரியும்.

அவர்களது காலடிச் சுவட்டில் உதயமானவன் தான் கவிஞன் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்.

தஞ்சை மாவட்ட மண்ணில் பிறந்த கவிஞன். தமிழகத்தின் நெற்களஞ்சியமான தஞ்சை மாவட்ட மண்ணில் சோற்றுக்கும் துணிக்கும் அல்லாடி, அல்லோலப்பட்ட வாழ்க்கை, சாண் வயிறு கழுவ, அவன் பண்ணாத தொழில் இல்லை. அலையாத இடமில்லை.

உழவர் குடும்பம். இசையீடுபாடு மிக்க குடும்பம்.

பட்டுக்கோட்டைக் கவிஞன் வாழ்ந்த காலம் - தஞ்சை மாவட்டத்தில் விவசாய உழைப்பாளர் களின் பேரியக்கம் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாகச் செழித்து வளர்ந்த காலம்!

விவசாயச் சங்கம் அமைக்க மக்கள் பட்ட பாடு, கிடைத்த நன்மை, உதித்த வெளிச்சம் எல்லாமே கவிஞனது உள்ளத் தில் அலைபாய்ந்து அவனது சத்திய ஆவேசத்தைத் தூண்டிக் கிளர்த்தி விடுகின்றன.

அந்த ஆவேச உணர்ச்சி கம்பீரமான கவிதை களாக - பாடல்களாக வெளிப்படுகின்றது.

கம்பீரம் என்பதற்கு ஆழம் என்று பொருள். கவிதைகளின் பொருள் ஆழம் அவனது அக ஆழத்தைப் புலப்படுத்தி அவனையும் மிடுக்கு மிக்கவனாக ஆக்குகிறது.

''எங்கும் விவசாயச்
சங்கம் அமைத்ததில்
அங்கம் வகித்திடுவோம் - இந்தத்
தங்க முயற்சிக்குப் பங்கம் விளைத்திடும்
தன்மையை வெட்டி மிதித்திடுவோம்!''

''இந்தியா கிராமங்களில் வாழ்கிறது'' என்று காந்தியடிகள் வெகு காலத்துக்கு முன்பே கூறினார். இன்றும் அது இந்தியாவின் ஏழுரை இலட்சம் கிராமத்துக் குடிசைகளில் தான் வாழ்கிறது!

பட்டுக்கோட்டைக் கவிஞன் கல்யாணசுந்தரம் கிராமத்திலிருந்து வந்தவன். இன்னும் சொல்லப் போனால், ஒரு பட்டிக்காட்டிலிருந்து கவிதை உலகுக்கு வந்து கொடிகட்டிப் பறந்தவன்.

காயமும் வலியும் மிக்க வாழ்க்கை.

பட்டறிவிலிருந்து அவன் புரிந்து கொண்ட ஓர் உண்மை பாட்டாக ஒலிக்கிறது.

''வசதி படைத்தவன் தரமாட்டான் - அவனை
வயிறு பசித்தவன் விடமாட்டான்!''

நடைமுறை வழிப்பட்ட உண்மை.காலம் செல்லும் திசை வழியைக் கண்டு கொண்ட துடிப்பு, கவிதைக் கான ஆடை அலங்காரங்களுடன் எத்தனை எளிமை யாக வந்து நம் நெஞ்சில் கொலுவிருக்கிறது!

பட்டுக்கோட்டைக் கவிஞனின் மற்றொரு சிறப்பு, கிராமத்துக் கவிதைகளையும் பாடல்களையும் செழுமை செய்து உயர்மட்டத்துக்குத் தூக்கி நிறுத்திய தாகும். அவற்றை அந்தக் கவிஞன் வலுமிக்க தாக்கினான். அதை இன்று சிலர் கொச்சைப்படுத்தி அசிங்கமாக்கிவிட்டார்கள்.

இவன் காதலைப் பாடுவதே தனி அழகு. கற்பனை வளமும் சந்தக் கட்டும் இவனுக்கு எங்கிருந்துதான் வந்ததோ தெரியவில்லை. இதைத் தான் வரப்பிரசாதம் என்று சொல்லுகிறார்கள்.

''ஆடைகட்டி வந்த நிலவோ - நெஞ்சில்
கூடுகட்டி வாழ்ந்த குயிலோ!''

பாட்டிலே நிலவு ஆடைகட்டி ஆடுகிறது. இவன் நெஞ்சிலே குயில் கூடுகட்டி வாழ்கிறது!

ஒரு கவிஞன் தான் வாழ்ந்த காலத்தில் சமுதாயத்தைப் பற்றி எத்தகைய பார்வை கொண்டிருந்தான். அவன் வாழ்ந்த காலம் எத் தகையது, அவன் தன் மக்களை எங்கு இட்டுச் செல்ல முயன்றான், கவிநயம், கற்பனை ஆற்றல் எத்தகையது என்பதெல்லாமே அவனது சிறப்புக் கூறுகளாகக் கணக்கில் எடுத்துக் கொள்ளப் படுவனவாகும்.

திமிரி எழுந்து கொண்டிருந்த பாட்டாளி வர்க்கத்தின் வழித்தோன்றலாக வந்த கவிஞனாகையால் அளவற்ற துணிச்சலும், அசைக்க முடியாத நம்பிக்கையும் கவிதை களாக வெளிப்பட்டன.

''முன்பட்ட பாக்கி
முதலுக்கும் வட்டிக்கும்
முற்றும் சுரண்டிக் கொண்டு-அங்கு

தென்பட்ட ஏழைகள்
புண்பட்ட நெஞ்சினில்
தீ மூட்டும் கொள்கைகளை

கண் கெட்டுப் போனதோ
இன்னும் சகிப்பதேன்
துன்புற்ற தோழர்களே!''

பஞ்சம், நோய்க்கு அஞ்சாமல் பட்டினிக்கும் அஞ்சாமல், மின்வெட்டுப் போலத் துள்ளி வருமாறு அழைக்கிறான்!

**டாக்டர் அம்பேத்கர் அரசு ஆதிதிராவிடர் நல மேல்நிலைப்பள்ளி**

**டாக்டர் அம்பேத்கர் நூற்றாண்டை முன்னிட்டு, திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் நல்லம்மாள் புரத்தில் ஆதிதிராவிடர் நலத் துறை கட்டுப்பாட்டின் கீழ் இயங்கிவரும் ஆதிதிராவிடர் நல மேல்நிலைப்பள்ளிக்கு, ''டாக்டர் அம்பேத்கர் அரசு ஆதிதிராவிடர் நல மேல் நிலைப்பள்ளி'' என பெயர் மாற்றி அமைக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது.**



**மனத்தில் மாசு, மதவெறி, சாதி ஆணவம், சுயநலம் இவற்றை மக்கள் விட்டொழிக்க வேண்டும்; அப்போது தான் நம்நாடு முன்னேறும்.**
**— அறிஞர் அண்ணா**

உழவர் குலத்துப் பாட்டாளி மக்களின் துன்ப துயரம் இன்று நேற்றுத் தோன்றியதல்ல; ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக அது நீடித்து வருகிறது!

தமிழ் மறை தந்த வள்ளுவன் உழவுக்கென்று ஓர் அதிகாரத்தையே ஒதுக்கிவிட்டான்.

பட்டுக்கோட்டைப் பாவலனும் அந்த வழியே வந்தவன்தான்.

காலமும் கருத்தும்தான் மாற்றமடைந்துள்ளன, பிரச்சினை ஒன்றுதான். தீர்வுதான் வித்தியாசப் படுகிறது.

பட்டுக்கோட்டைப் பாவலன் நவீன யுகத்தின் உதய காலத்தில் வாழ்ந்தவன்.

கவிஞனாகவே திரையுலகுக்குள் நுழைந்தவன்.

வாய்ப்பாக-வசமாக அவன் கையில் சினிமா மாட்டிக் கொண்டது.

பேராற்றல் வாய்ந்த வெகுஜனத் தொடர்புச் சாதனம் அன்றாடம் இலட்சோப இலட்சம் மக்களுடன் பேசுகிற சக்தி அதற்கு உண்டு.

பட்டுக்கோட்டையின் பாடல்கள் குண்டும் குழியுமான பழைய தடத்தில் 'லொங்கு லொங்கு' என்று போகாமல் புதியதொரு நெடுஞ்சாலையில் திடுதிடுவென ஆரவாரத்துடன் புறப்பட்டன. உணர்ச்சி மயமான எளிய அழகுமிக்க அந்தப் பாடல்களை மக்களின் செவிகுளிர மண் மனம் நெகிழத் தந்தது சினிமா. ஆனால், சினிமா தயாரிப்பாளர்கள் அனைவருமே கவிஞனின் கருத்துக்கு இசைவானவர்களாக இருந்தார்கள் என்று கருதுவது அடியோடு தப்பு. பட்டுக்கோட்டையின் பாடல்களுக்குக் கிடைத்த அமோக வரவேற்பு பட அதிபர்களை அசரவைத்து, அவருக்குத் தாம் பூலம் ஏந்தி அழைக்கச் செய்துவிட்டது!



● சமுதாய அடக்குமுறையோடு ஒப்பிடுகையில், அரசியல் அடக்குமுறை என்பது ஒன்றுமில்லை; எனவே, சமுதாயத்தை எதிர்த்துப் போராடும் சீர்திருத்தவாதி, அரசியல்வாதியைக் காட்டிலும் துணிச்சல் மிக்கவன் ஆவான்.

● உளப்பூர்வமாகவும், அறிவுபூர்வமாகவும் இல்லாமல் செயல்படுகின்ற மக்கள் அமைப்பில் எந்தவிதமான திறமை இருக்க முடியும்?

''தீண்டாமை, மதத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டதல்ல; பொரு ளாதாரத்தையும் அடிப்படையாகக் கொண்டது. இது அடிமைத்தனத்தைக் காட்டிலும் மிகவும் மோசமானது.''

டாக்டர் அம்பேத்கர்

பட்டுக்கோட்டை இந்த அரிய வாய்ப்பை அருமையாகப் பயன்படுத்திக் கொண்டான். தன் மனதின் அடியாழத்தில் கனன்று கொண்டிருக்கும் ஆவேசத்தை அஞ்சாமல் அசராமல் பாடல்களாக்கி, திரை உலகை ஒரு கலக்குக் கலக்கி விட்டான். சினிமாவில் காதல் பாட்டுகளை இயற்றும் போதும் அவன் தமது கொள்கையை இடமறிந்து நயம் கலந்து புகுத்தினான்.

''காடு வெளஞ்சென்ன மச்சான் - நமக்கு
கையும் காலுந்தானே மிச்சம்''

-என்று கேட்கும் பெண்ணுக்கு

''காடு விளையட்டும் பொண்ணே - நமக்கு
கால மிருக்குது பின்னே!''

என்று கதாநாயகன் மூலம் பொருளாழத்துடன் அவனால் பதில் சொல்ல முடிந்தது.

விவசாய இயக்கத்தோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த கவிஞன், 1956-இல் திண்டுக் கல்லில் நடைபெற்ற விவசாய மாநாட்டிலும் கலந்து கொண்டான்.

பட அதிபர் ஸ்ரீராமுலு நாயுடு தலைமையில் கோவையில் பட்டுக்கோட்டை, கண்ணப்பா, டி.கே. பாலசந்தர் ஆகியோருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பில் கவிஞன் அழகாக, சுருக்கமாக உரை யாற்றினான். பிறகு கவிஞன் கோவைக்கு வர வில்லை. அதுவே கடைசி!

திரையுலகில் பாட்டாளி மக்களின் ஆசைகளையும் ஆவேசத்தையும் அந்தரங்க சுத்தியுடன் பாடல் களாக இசைத்த கவிஞன் கல்யாண சுந்தரம். கால்வலிக்கத் தேடிய பணம் தன் காலடியில் வந்து விழுந்த காலத்திலும் தன்னுடைய கொள்கையை நழுவவிடவில்லை.

புயலைப் போல சீறிக் கொண்டு வெள்ளித் திரையில் பாய்ந்தான்!

புயலைப் போலவே சீக்கிரத்தில் அடங்கியும் போனான்!

ஆனாலும் அவனது பாடல்கள் என்றைக்கும் அவன் பெருமையைச் சொல்லிக் கொண்டே இருக்கும். இதை யாராலும் மறுக்க முடியாது.

# இராமநாதபுரம் மாவட்டத்தில்



# வளர்ச்சிப் பணிகள்

இராமநாதபுரம் மாவட்டம் வறட்சி மிகுந்த மாவட்டம். இந்த மாவட்டத்தின் பெரும் பரப்பளவு கடற்கரையோரப் பகுதியாக உள்ளது. இந்த மாவட்டத்தில் அரசு பல்வேறு வளர்ச்சிப் பணிகளை நிறைவேற்றி வருகிறது.

**ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் பணிகள்**

ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 1990-91-ஆம் ஆண்டுக்கு ரூ.699.96 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் ஆயிரம் தொகுப்பு வீடுகள், 70 ஊராட்சி மன்றக் கட்டடங்கள், 39 பள்ளிக் கட்டடங்கள், 108 சாலை வேலைகள், 502 ஊராட்சி வேலைகள் எடுக்கப்பட்டு, அனைத்துப் பணிகளும் முடியும் தருவாயில் உள்ளன. மேலும் தொகுப்பு வீடுகள் கட்டும் பணியில் கூடுதலாக 1991 ஜனவரியில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 300 வீடுகளும் ஆரம்பிக்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.

இத்திட்டத்தின் கீழ், இராமநாதபுரம் மாவட்டத்தில் சிறுபாசனக் கண்மாய்கள் மேம்படுத்தும் பொருட்டு ரூ.175 இலட்சம் அரசு ஒதுக்கியுள்ளது. இந்தப் பணியில் பொதுப்பணித்துறை மூலம் 197 வேலைகள் ரூ.175 இலட்சம் மதிப்பீட்டிலும், ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் 325 வேலைகள் ரூபாய் 100 இலட்சம் மதிப்பீட்டிலும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. சிறுசேமிப்பின் சாதனை மூலம் பெறப்பட்ட ஊக்கத் தொகை ரூ.6.75 இலட்சம் நிதியில் பள்ளிக் கட்டடம் பழுதுபார்த்தல், கைப்பம்புகள் அமைக்கும் பணி நடைபெற்று வருகின்றது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் இராமநாதபுரம் மாவட்டத்திற்கு ரூ.143.773 இலட்சம் வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள 4,570 பேர் பயன்பெறும் வகையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுவரை 4,158 பயனாளிகளுக்குக் கடன் வழங்கப்பட்டு ரூ.100.84 இலட்சம் மானியமும் வழங்கப்பட்டுள்ளது.

வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டத்தில் இராமநாதபுரம் மாவட்டத்திற்கு ரூ.105.81 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் 240 எக்டேர் புதிய மணற்பரப்பில் சாகுபடி செய்ய மா, கொய்யா, சப்போட்டா, எலுமிச்சை, முந்திரி, மல்லிகை போன்ற செடிகள் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது. மேலும் 215 எக்டேர் பரப்பில் சமூக நலக்காடுகள் அமைக்கப்பட்டுள்ளது.

**வேளாண்மை வளர்ச்சிப் பணிகள்**

இந்த மாவட்டத்தில் வடகிழக்குப் பருவமழை நடப்பாண்டில் காலத்தே, சீராகப் போதிய அளவு பெய்ததால் வேளாண்மைப் பணிகள் நல்ல முறையில் மேற்கொள்ளப்பட்டது.

இந்த மாவட்டத்தில் இயல்பான மழை அளவு 819.1 மில்லி மீட்டர் ஆகும். ஆனால் சென்ற ஆண்டில் 880.1 மில்லி மீட்டர் மழை பெய்தது. இதனால் நடப்பாண்டில் நெல் சாகுபடி மிக அதிக அளவில் 20,404 எக்டேர் பரப்பில் சாகுபடி செய்யப்பட்டது. இதுவரை நெல் அறுவடை 1,28,178 எக்டேரில் முடிவடைந்தது. இந்த மாவட்டத்தின் இயல்பான அரிசி உற்பத்தி திறன் 1,047 கிலோ ஆகும். நடப்பாண்டில் வேளாண்மை விரிவாக்கப் பணியினைத் திறம்பட மேற்கொண்டதாலும் வடகிழக்குப் பருவமழை நன்கு பெய்ததாலும், இதுவரை அறுவடையான பரப்பில் சராசரியாக 1,670 கிலோ அரிசி உற்பத்தி எக்டேர் ஒன்றுக்குக் கிடைத்துள்ளது. இது இயல்பான உற்பத்தித் திறனைவிட எக்டேருக்கு 623 கிலோ அதிகமாகும். இது ஒரு சாதனை அளவாகும். இம்மாவட்டத்தின் அரிசி உற்பத்தி இலக்கு 80 ஆயிரம் எக்டேர் மெட்ரிக் டன் ஆகும். நடப்பாண்டில் சாதனை அளவாக 2 இலட்சத்து 52 ஆயிரத்து 500 மெட்ரிக் டன் அரிசி உற்பத்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**மினிக்கிட் திட்டம்**

நடப்பாண்டில், விவசாயிகளுக்கு ரூ.1,12,500 செலவில் 4 கிலோ நெல் மினிக்கிட்டுகள் 4,683 எண்கள் வழங்கப்பட்டுள்ளது. விவசாயிகள் தங்கள் நிலங்களில் உயர் விளைச்சல் தரவல்ல புதுப்புது நெல் ரகங்களான ஆடுதுறை 36, ஆடுதுறை 39 போன்றவற்றைப் பயிரிட்டுப் பயனடைந்துள்ளனர். சிறு தானிய மினிக்கிட்டுகள் 3,120 விவசாயிகளுக்கு ரூ.14,900 செலவில் வழங்கப்பட்டுள்ளது. சோளம் கே.8 கம்பு டபிள்யுசிசி 75, பிஆர் 202 போன்ற உயர் விளைச்சல் ரகங்களை விவசாயிகள் பயிரிட்டுப் பயனடைந்துள்ளனர்.



# விளையும் பயிர்

செல்வி. ஏ.பி. இளவரசி, எத்திராஜ் மகளிர் கல்லூரியில் எம்.ஏ., பொருளாதாரம் படித்து வருகிறார்.

பல்கலைக்கழகத் தேர்வில் பொருளாதாரத்தில், இரண்டு தங்கப் பதக்கங்களும், ஒரு வெள்ளிப் பதக்கமும் பெற்றுள்ளார். இவர், சிறுவயது முதலே படிப்பில் தொடர்ந்து பல பரிசுகளைப் பெற்று வந்துள்ளார்.

விளையும் பயிர் முளையிலே தெரியும் என்பது போல, இவரது முன்னேற்றம் வீட்டுக்கும் நாட்டுக்கும் துணை நிற்கும். ஏனென்றால், இவர் தமிழ்நாட்டையே முன்னேற்றிய பேரறிஞர் அண்ணா அவர்களின் பேத்தியாவார்.

# அறிவுச் சுடர்

**1. இந்தியாவில் அதிகமான தெருக்களைக் கொண்ட மாநிலம் எது?**

உத்திரப்பிரதேசம். இது 1,53,078 கிலோ மீட்டர் நீளமுள்ளது.

**2. இந்தியாவில் குறைந்த தெருக்களைக் கொண்ட மாநிலம் எது?**

சிக்கிம் 1,31 கிலோ மீட்டர்கள்.

**3. இந்தியா செயற்கைக் கோள் செலுத்திய ஆண்டு எது.**

1975-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19-ஆம் தேதி இந்தியா முதல் முதலாகச் செயற்கைக் கோளை விண்ணில் செலுத்தியது. (ஆரிய பட்டா)

**4. இந்தியாவில் அதிகமான நிலப் பரப்பைக் கொண்ட மாநிலம் எது?**

மத்தியப் பிரதேசம். 4,43,446 சதுர மீட்டர்.

**5. இந்தியாவில் 3-டி படம் எந்த மொழியில் வெளிவந்தது?**

'மைடியர் குட்டிச் சாத்தான்' என்ற மலையாளப் படம்.

**6. இந்தியாவில் முதல் முறையாக டெக்னோவிஷன் முறை கையாளப் பட்ட படம் எது?**

பெரோஸ்கானால் தயாரிக்கப் பட்ட 'குர்பானி' என்ற படம் - 1980-ஆம் ஆண்டு.

**7. உலகின் மிகப்பெரிய துறைமுகம் எது? எங்குள்ளது?**

'போர்ட் ஆப் நியூயார்க்' என்ற துறைமுகம். அமெரிக்காவில் உள்ளது. இங்கு ஒரே நேரத்தில் 400 கப்பல்கள் தங்கும்.

**8. உலகில் மிகப்பெரிய பூங்கா எங்கு அமைந்துள்ளது?**

கனடா நாட்டில் அல்பர்டாவில் அமைந்திருக்கும் தேசியப்பூங்கா இது 4,548 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்டது.

**9. வேகமாகப் பறக்கும் பறவை எது?**

'ஸ்விப்ட்' எனப்படும் ஆசியப் பறவை. இது மணிக்கு 171 கிலோ மீட்டா வேகம் பறக்கும்.

—ஏ.எஸ்.குலோத்துங்கன்

# விற்பனை வரி – மூலதன உதவித் தொகையில்

# சில மாறுதல்கள்

தொழில் அதிபர்கள்தொழிற் சங்கங்களிடமிருந்து வந்த 'வேண்டு கோளைத் தொடர்ந்து மாநில மூல தன உதவித் தொகை மற்றும் விற் பனை வரித் திட்டங்களில் சில மாறு தல்களைச் செய்யத் தமிழக அரசு பரிசீலித்தது. இத்திட்டங்களை மேலும் கவர்ச்சிகரமாக்கும் வகை யில் 1-4-1991-இல் அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. அதன் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:

**மாநில மூலதன உதவித் தொகை**

★ பிற்பட்ட மற்றும் மிகவும் பிற் பட்ட வட்டங்களில் நடுத்தர மற்றும் பெரிய தொழிற்சாலைகளைத் தொடங்குபவர்களுக்கு மாநில மூல தன உதவித் தொகையாக 10 சத வீதம் இதுவரை வழங்கப்பட்டது. அதிகபட்சமாக ரூ.15 இலட்சம் வழங்கப்படுகிறது. இது தற்போது 15 சதவீதமாக உயர்த்தப்படுகிறது. உச்சவரம்பு அதே ரூ.15 இலட்சம் தான். இந்த உதவித் தொகை புதிய தொழிற்சாலைகளுக்கும், விரிவாக் கம் மற்றும் வேறு தொழில் தொடங் கும் தொழிற்சாலைகளுக்கும் பொருந் தும்.

★ மின்னணுத் தொழிற்சாலைகள் தற்பொழுது 15 முதல் 18 சதவீதம் வரை உதவித் தொகை பெற்று வரு கின்றன. இதைத் தமிழக அரசு தற் பொழுது 20 சதவீதமாக உயர்த்தி யுள்ளது. உச்சவரம்பு ரூ.35 இலட்சம். இந்த உதவித் தொகை மாநிலத்தில் எந்த இடத்தில் மின்னணுத் தொழிற் சாலை தொடங்கினாலும் கிடைக்கும்.

★ மின்னணு, தோல், மோட் டார் வாகன உதிரிப் பாகங்கள், மருந்துகள், சூரிய வெளிச்சத்திலிருந்து சக்தி தயாரிக்கும் கருவிகள் தொடர் பான தொழிற்சாலைகளுக்கு வேலை வாய்ப்பினைப் பொறுத்துச் சில நிபந்தனைகள் உள்ளன. இப்பொழுது இந்த நிபந்தனைகள் நீக்கப்படுகின்றன. குறிப்பாக, தோல் மற்றும் மின்ன ணுத் தொழிற்சாலைகளுக்கு இது பலன் அளிக்கும்.

★ மாநில மூலதன உதவித் தொகை இப்பொழுது ஒரே ஒரு - விரிவாக்கத்திற்கு மட்டும் அளிக்கப் படுகிறது. இனி எத்தனை முறை தொழிற்சாலை விரிவாக்கம் செய் யப்பட்டாலும் உதவித் தொகை அளிக் கப்படும்.

**விற்பனை வரி தள்ளிவைப்பு/தள்ளு படித் திட்டம்:**

★ விற்பனை வரி தள்ளி வைப்பு மற்றும் தள்ளுபடித் திட்டத்தின்கீழ் இதுவரை ஒரே ஒரு விரிவாக்கத்திற்கு மட்டும் இச்சலுகை வழங்கப்பட்டது. இனி எத்தனை முறை விரிவாக்கம் செய்யப்பட்டாலும் இந்தச் சலுகை வழங்கப்படும்.

★ இப்பொழுது, தொழிற்சாலைகள் விரிவாக்கம் செய்தால் வேறு தொழில் தொடங்கினால் 25 சதவீதம் உற் பத்தியின் மதிப்பு உயர வேண்டும் என்று இருப்பது 15 சதவீதமாக குறைக்கப்படுகிறது. 15 சதவீதம் உற்பத்தி மதிப்பு அதிகரித்த தொழிற் சாலைகளுக்கு இச்சலுகைகள் கிடைக் கும். இதில் 'குழு கோட்பாடு'களை (Group Concept) அமுல்படுத்தத்தேவை யில்லை.

இம்மாறுதல்களோடு தொழிற் சாலைகளுக்குத் தமிழ்நாட்டில் வழங் கப்படும் ஊக்கத் தொகை நாட்டி லேயே மிகச் சிறந்த ஒன்றாகக் கருதப் படும். இச்சலுகைகளைத் தொழிற் சாலைகள் நன்கு பயன்படுத்தித் தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு உதவும் என நம்பலாம்.

## ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தில் பயனடைவோர்

கிராமங்களில் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள குடும்பங்களைப் பற்றிய விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆண்டொன்றிற்கு ரூ.4,800 வரை வருவாய் பெறக்கூடிய குடும் பங்கள் இவ்வாய்வில் சேர்க்கப்பட்டுள்ளன.

கிராமங்களில் பெரியவர்கள் அனைவரும் பங்கு பெறும் கூட்டத்தில் இவ்வாய்வில் கிடைத்துள்ள முடிவுகள் முன்வைக்கப்படும். பெரிய கிராமங் களில் ஒவ்வொரு 'வார்டு'களிலும் இவ்விதக் கூட்டங்கள் நடைபெறும். இக்கூட்டங்கள் நடை பெறுவதற்கு முன்கூட்டியே தகுந்த விளம்பரம் அளிக்கப்படும்.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தில் பயனடைவோர்களைத் தேர்ந்து எடுப்பதில் முரண் பாடுகள் ஏற்பட்டால், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட அலுவலருடைய தீர்ப்பே முடி வானது.

பயனாளிகளைத் தேர்ந்தெடுத்து, அவர்களின் விருப்பத்தையும் திறமையையும் கண்டறிந்து யோசனை கூற கிராம மன்றங்கள் பயன்படுத்தப் படும்.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தில் புதிதாகப் பயனடையவிருக்கும் குடும்பங்களைத் தேர்ந்தெடுக்கும் பணி பெரும்பாலான பகுதிகளில் முடிவடைந்து விட்டது எனலாம்.

# அம்பேத்கர் அமுத மொழிகள்

★ ''ஆயிரமாயிரம் ஆண்டு அடிமைகளாகத் தன்மானத்தை இழந்து இருப்பதைக் காட்டிலும், அரை நிமிடம் வாழ்வாங்கு வாழ்ந்து அமரனாதல் சாலச் சிறந்ததாகும்.''

★ ''அரசியல் கொடுமையை விட சமூகக் கொடுமையே மிக பயங்கரமானது. எனவே அரசியல் கொடுமையைவிட சமூகக் கொடுமையை எதிர்த்துப் போராடும் சமூகச் சீர்திருத்தவாதியே அதிதைரியசாலி''.

★ பொருள் ஆதாயத்தைவிட சுயமரியாதை மிக முக்கியமானதாகும். நம்முடைய போராட்டம் கௌரவத்திற்கும், சுயமரியாதைக்குமான போராட்டம்; பொருளாதார முன்னேற்றத்திற்கு மட்டுமான போராட்டம் அல்ல.

★ மதம், சமூக அந்தஸ்து, சொத்து முதலியன சக்திக்கும், அதிகாரத்திற்கும் 'ஆதாரமாக இருக் கின்றன. இந்த மூன்றில் ஏதேனும் ஒன்றினால் ஒருவனை மற்றொருவன் அடிமைப்படுத்த முடியும். ஒரு காலத்தில் அவற்றுள் ஏதேனும் ஒன்று ஆதிக்கம் செலுத்துகிறது. மற்றொரு காலத்தில் வேறொன்று ஆதிக்கம் செலுத்துகிறது. வித்தியாசம் அவ்வளவே.

★ ''எவ்வகையான துன்பங்களையும் கண்டு கொதித்தெழுவோரே மனிதாபிமானம் கொண்ட மக்களாவர். யார் துன்பப்படுகிறார்கள் என்பதைக் கவனியாமல் மனச்சாட்சி கொண்ட ஒவ்வொருவரும் அத்துன்பப்படுவோருக்குத் துணைநின்று அவரை விடுவிக்க வேண்டும்.''

★ யார் ஒருவன் தன் உரிமைகளை எப்போதும் தற்காத்துக் கொள்ளத் தயாராக இருக்கிறானோ யார் ஒருவன் பொது விமரிசனத்திற்கு அச்சப்படாமல் இருக்கிறானோ, யார் ஒருவன் அடுத்தவன் கைப்பாவையாய் மாறாமல் போதிய சிந்தனையும், சுயமரியாதையும் பெற்றிருக்கிறானோ அவனையே நான் சுதந்திர மனிதன் என்பேன்.

★ ஒருவன் உள்ளத்தால் சுதந்திரம் இல்லையென்றால் அவன் சிறையில் அடைக்கப்படாவிட்டாலும் கூட சிறைக் கைதியே ஆவான். ஒரு மனிதன் உள்ளத்தில் சுதந்திரம் இல்லையென்றால், அவன் வாழ்ந்து கொண்டிருந்தாலும்கூட செத்த பிணமாகவே கருதப்படுவான்.

★ ''பிறந்தவன் சாவான் என்பது இயற்கை. அதைக் கண்டு நான் பயப்படவா போகின்றேன்? ஆனால், சீரிய இலட்சியமாகிய சுயமரியாதையை மேலும் வளர்ப்பதில் ஒவ்வொரு மனிதனும் தன்னைத் தானே அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும். அதுதான் மனித வாழ்விற்கே சிறப்பாகும். நாம் அடிமைகள் அன்று; நாம் போர்வீரர் வகுப்பைச் சேர்ந்தவர்கள். சுயமரியாதை இல்லாமல், நாட்டுப்பற்று இல்லாமல் பற்றின்றி வாழ்வதைவிட சாவதே ஒரு வீரனுக்கு உகந்த வழியாகும்.''



-Dr.B.R. Ambedkar.

# மாநிலக் கல்லூரியின் வயது-150

**1840**-ஆம் ஆண்டு துவங்கி, இன்று வானுயர வளர்ந்து கல்வித் துறையில் இமாலயச் சாதனைகள் பல புரிந்த சென்னை மாநிலக் கல்லூரி தனது 150-வது ஆண்டு விழாவினை மிகச் சிறப்பான முறையில் கொண்டாடியது. சென்னைப் பல்கலைக் கழகத்தின் தாயாக விளங்கும் சென்னை மாநிலக் கல்லூரியின் வரலாறு அனைவரையும் வியப்பில் ஆழ்த்தும்.

இந்தியாவின் பழமையான கல்வி நிறுவனங்களில் ஒன்றாக விளங்கும் இக்கல்லூரி, 1840-ஆம் ஆண்டு எல்பின்ஸ்டன் பிரபு என்பவரால் அக்டோபர்த் திங்கள் 15-ஆம் நாள் எழும்பூரில் உள்ள எடின்பர்க் இல்லம் என்ற இடத்தில் தொடக்கப் பள்ளியாக நிறுவப்பட்டது.

1841-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 4-ஆம் நாள் 'டி மாண்டேகு' இல்லம் (தற்போது எழும்பூர் பாந்தியன் சாலையில் உள்ள மாநில நீதி மன்றம்) என்ற இடத்தில் சென்னைப் பல்கலைக்கழகத்தின் உயர்நிலைப்பள்ளியாக வளர்ந்தது. 1855-ஆம் ஆண்டு புதிதாக உருவாக்கப்பட்ட பொதுக் கல்வித் துறையின்கீழ் மாற்றப்பட்டு தற்பொழுது வழங்கும் மாநிலக் கல்லூரி என்ற பெயரும் பெற்றது.


1867-இல் சென்னை மாநில ஆளுநர் நேப்பியர் பிரபு அக்டோபர் திங்களில் அடிக்கல் நாட்ட, 1870-இல் எடின்பரோ கோமகன் மார்ச் திங்கள் 25-ஆம் நாள் இக்கல்லூரியின் திறப்பு விழாவை நடத்தினார். 1911-இல் ஹானர்ஸ் வகுப்புகளும் எம்.ஏ. பட்ட வகுப்புகளும் ஆரம்பிக்கப்பட்டன. ஹானர்ஸ் மற்றும் எம்.ஏ. பட்டப் படிப்புகளைக் கலைப் பிரிவில் அனைத்துப் பாடங்களிலும் கற்பிக்க ஏற்றுக்கொண்ட முதல் கல்லூரி மாநிலக் கல்லூரியே.

இக்கல்லூரியின் நூற்றாண்டு விழா சென்னை ஆளுநர் எர்ஸ்கின் பிரபுவால் 3.2.1940 அன்று தொடங்கப்பட்டது. நூற்றாண்டு நினைவு மணிக்கூண்டு கட்டப்பட்டது. கல்வித் துறையில் தொன்மைச் சிறப்புக் கொண்ட இக் கல்லூரி 1987-88-ஆம் ஆண்டில் தன்னாட்சிக் கல்லூரியாக மலர்ந்தது.

இக்கல்லூரியில் பயின்ற முன்னாள் மாணவர்கள் பலர் வெவ்வேறு துறைகளில் புகழ்மிகப் படைத்து இந்தியப் பெருநாட்டிற்கே பெருமை சேர்த்துள்ளார்கள். அவர்களுள் நோபல் பரிசு பெற்ற சர். சி.வி.ராமன், டாக்டர் எஸ்.சந்திரசேகர், இந்தியாவின் முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ராதாகிருஷ்ணன், ஜெனரல் கரியப்பா, வி.கே.கிருஷ்ணமேனன், மகாமகோபாத்தியாயா டாக்டர் உ.வே. சாமிநாத அய்யர், சி.சுப்பிரமணியம், நெ.து.சுந்தரவடிவேலு, எம்.பக்தவத்சலம், ஜெரோம் டி.டிசோஸா, அண்ணா ஜார்ஜ், ப.சிதம்பரம், என்.ராம் ஆகியோர் குறிப்பிடத்தக்க சிலர்.

இத்தகைய புகழ் வாய்ந்த மாநிலக் கல்லூரியின் 150-ஆம் ஆண்டு தொடக்க விழா 5.4.91 அன்று மாநிலக் கல்லூரி வளாகத்தில் மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது. மேதகு ஆளுநர் திரு.பீஷ்ம நாராயண் சிங் அவர்கள், 150-ஆம் ஆண்டு நினைவுக் கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டினார். மாநிலக் கல்லூரியின் நிர்வாகக் குழுவின் தலைவர் டாக்டர் பி.திருஞான சம்பந்தம் வரவேற்புரையாற்றினார். முன்னாள் கல்லூரி முதல்வர்கள் சிறப்பிக்கப் பட்டார்கள். ஆளுநரின் ஆலோசகர்கள் திரு. வி.கார்த்திகேயன், திரு. வி.ராமச்சந்திரன் ஆகியோர் உரையாற்றினர்.

—நமது செய்தியாளர்



தமிழரசு

1-5-1991 இதழ்

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்

நூற்றாண்டு விழா நிறைவுச் சிறப்பிதழாக வெளிவருகிறது!

ஆசிரியரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927

16-4-91 (T)

எளிமையானவை! நேர்த்தியானவை!
மேன்மை மிகுந்தவை!
தோற்றம் அளிப்பவை!



கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

* பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
* லுங்கிகள், துவாலைகள், வேட்டிகள்.
* படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ்
விற்பனை நிலையத்தை அணுகவும்.

Licence No. TN/MS(C)/PP-23


# பூம்புகார்

## கைவினைப் பொருட்களின் களஞ்சியம்

அ) உலோக வார்ப்பமைப்புகள்
ஆ) ஐம்பொன் சிலைகள்
இ) கற்சிலைகள்
ஈ) மர சிற்பங்கள்/மர பதிப்பமைப்பு வேலைகள்

பூம்புகார் கைவினைப் பொருட்கள் அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஜப்பான், பிரான்ஸ் மற்றும் சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

**தமிழ்நாடு கைவினைப் பொருட்கள் வளர்ச்சிக் கழகம்,**
(தமிழ்நாடு அரசு நிறுவனம்),
24, மொபிரேஸ் முதலாவது குறுக்குத் தெரு,
ஸ்ரீராம் நகர், ஆழ்வார்ப்பேட்டை,
சென்னை –600 018.
தொலைபேசி : 458116/458263/458418

**பூம்புகார் விற்பனை நிலையம்,**
818, அண்ணா சாலை,
சென்னை –600 002.
தொலைபேசி : 832724.



பூம்புகார்



